

# அறிவியல் தமிழாக்கம்

டாக்டர் செ. வை. சண்முகம்

# அறிவியல் தமிழாக்கம்

டாக்டர் செ. வை. சண்முகம்

மூதறிஞர்
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்
மைசூர்

எட்டாவது
உலகத்தமிழ் மாநாட்டுச்
சிறப்பு வெளியீடு.

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்
41 - பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை - 98.

Ariviyal Thamizhaakkam
by செங்குந்தபுரம் வைத்திலிங்கம் சண்முகம்

முதற் பதிப்பு : டிசம்பர், 1994
நியுசெஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு

© ஆசிரியருக்கு

Code No : A 804

ISBN : 81 - 234 - 0362-3

விலை : ரூ. 25.00

ஒளி அச்சு : டாமியா லேசர் பிரிண்ட்ஸ்,
11, வாலாஜா ரோடு, சென்னை -2

அச்சிட்டோர் : M/s உதயம் ஆப்செட்ஸ்,
சென்னை-2.

# அணிந்துரை

டாக்டர். இராம. சுந்தரம்
பேராசிரியர் & தலைவர்
அறிவியல் தமிழ் வளர்ச்சித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

'அறிவியல் தமிழாக்கம்' என்ற இந்த நூல் அறிவியல் தமிழ்த்துறைக்கு ஒரு புதுவரவு தமிழ் இலக்கணத்திலும் மொழியியலிலும் தகைமை சான்ற புலமை மிக்க பேராசிரியர் டாக்டர் செவைசண்முகம் அவர்கள் அறிவியல் தமிழ் வளர்ச்சி குறித்துச் சிந்தித்துத் திறம்பட எழுதிய சில கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல் 'அறிவியல் தமிழ்' என்ற வழக்கு புதியது என்றாலும், அறிவியலைத் தமிழில் சொல்லும் முறை புதியதன்று

தமிழர்கள் தமக்கேற்ற அறிவியல்-தொழில் நுட்பச் சிந்தனைகளைக் காலந்தோறும் வளர்த்து வந்திருக்கிறார்கள் இலக்கிய, இலக்கணத் துறைகளில் வளம்சேர்த்த தமிழ் அறிவியல்-தொழில் நுட்பத் துறையிலும் போதிய கவனம் செலுத்தியுள்ளதைச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன ஏர்த்தொழில், போர்த் தொழில், கட்டடத்தொழில், மருத்துவத் தொழில் முதலிய துறைகளில் ஈடுபட்ட தமிழர்கள் அவற்றிற்கான தொழில்நுட்ப அறிவையும் அதனை வெளிப்படுத்தும் கலைச்சொற்களையும் பதிவு செய்துள்ளனர். இயற்கையைக் கூர்ந்து கவனித்து வாழ்க்கையோடு இணைத்துக் கண்ட காலத்து, பல செடி கொடிகள் பற்றியும் விலங்குகள் பற்றியும் பருவ மாறுபாடுகள் பற்றியும் சில குறிப்புக்களைப் பொதிந்து வைத்தனர் பலவகை உயிரினங்களின் அமைபபு வளர்ச்சி, நடத்தை பற்றிய குறிப்புக்கள் பழைய நூல்களில் நிறையவே கிடைக்கின்றன நிகண்டுகளும் கல்வெட்டுக்களும் பலதுறை சார்ந்த கலைச்சொற்களைக் கொண்டிருக்கின்றன ஆனால், இவை எல்லாம் தமிழ மரபு-இந்திய மரபு சார்ந்த அறிவியல் - தொழில் நுட்பச் செயல்பாடுகளாகும்

ஐரோப்பியர் வருகைக்குப்பின் புதுவகை அறிவியல் - தொழில்நுட்பம் அறிமுகமாயிற்று அதனை விளக்கவும் விரிவுபடுத்தவும் தமிழ் அறிவியலாளர் முற்பட்டனர் நவீன அறிவியலைத் தமிழில் பரப்பவும், தமிழ் மொழியை அறிவியல் துறைக்கேற்ற மொழியாக்கவும்

அவர்கள் முயன்றனர். சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட இம்முயற்சி இடைப்பகுதியில் செயலாக உருக்கொண்டது. டாக்டர் சாமுவேல் ஃபிஷ் கிறீன் இலங்கையில் உடல்கூறியல், அறுவை மருத்துவம், பெண்ணோயியல், குழந்தை மருத்துவம், வேதியியல் முதலியவற்றைத் தமிழ் வழிக் கற்பிக்கத் தேவையான நூல்களை வெளியிட்டதுடன் ஏராளமான கலைச்சொற்களையும் கலைச்சொல்லாக்க நெறிமுறைகளையும் உருவாக்கினார். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரதியார் அறிவியல் தமிழ் குறித்து ஆழமாகச் சிந்தித்துப் பல புதிய வழிமுறைகளைச் சுட்டிச்சென்றார். பாட நூல்கள், பொது நூல்கள், இதழ்கள் வழி அறிவியல் மக்களையும் மாணவர்களையும் சென்றடைந்தது. கலைக் சொல்லாக்கத்தில் புதுமையும் திருத்தமும் செம்மையும் நிகழ்ந்தன.

இந்திய விடுதலைக்கு முன்னிருந்ததைவிடவும் இந்திய விடுதலைக்குப் பிந்திய காலத்தில் ஆங்கில மோகம் 'அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்த்' தெரியவே, தமிழ்வழி அறிவியல் கற்பது தடைப்பட்டது. தடைப்பட்டது மட்டுமல்ல, தமிழ்வழி இயலாது எனவும் பறை சாற்றப்பட்டது. கிறீனின் முயற்சி தெரியாததால் விளைந்த வரலாற்றுப் பிழை இது. இதிலிருந்து மீளும் நிலை, தமிழ்ப் பல்கலைக்கழகம் தோன்றியதும் தலைகாட்டியது. பொறியியல், மருத்துவப் பாடநூலாக்கத் திட்டத்தைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் 1982-இல் தொடங்கி 1983-இல் முடித்தது. 27 நூல்கள் எழுதப்பட்டன இரு துறை சார்ந்த 50000-க்கு மேற்பட்ட கலைச்சொற்கள் திரட்டப்பட்டு, தரப்படுத்தப்பட்டன. இதன் தொடர்ச்சியாக, கருத்தரங்குகள், செயலரங்குகள், பயிலரங்குகள், புத்தொளிப் பயிற்சி வகுப்புக்கள், முதலியன தமிழகப் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் நடைபெற்றன. தமிழ்நாடு அறிவியல் இயக்கம், சுதேசி அறிவியல் இயக்கம், அனைத்திந்திய அறிவியல் தமிழ்க்கழகம் முதலிய அமைப்புக்கள் அறிவியல் தமிழ் வளர்ச்சியை இயக்கமாக்கின. இன்று, எங்கு பார்த்தாலும் அறிவியல் தமிழ் பற்றி ஆக்கப்பூர்வமாகச் சிந்திக்கும் சூழல் உருவாகியுள்ளது. இந்தப் பின்புலத்தில் பேரா செவைசண்முகனாரின் கட்டுரைத் தொகுப்பு வெளிவருவது வரவேற்புக்குரியதாகிறது.

அறிவியல் தமிழ் என்றதும் எல்லோரும் கலைச்சொற்கள் பற்றியே நினைக்கின்றனர் கலைச்சொற்கள் முக்கியந்தான் என்றாலும், அறிவியலைச் சொல்லும் மொழி நடையும் முக்கியமாகிறது முல்லைப்பாட்டை மறைமலையடிகள் விளக்குவதும் மு வ விளக்குவதும் ஒன்றுபோலவா உள்ளன? இருவரும் ஒரே பொருளை வெவ்வேறு மொழி நடை மூலம் விளக்கும்போது அதன் புலப்பாட்டுத் திறனிலும் புரிதிறனிலும் உள்ள வேறுபாடு தெளிவாகிறது அல்லவா! அதுபோலவேதான், அறிவியல் செய்தியைப் புலப்படுத்துவதில் கலைச்சொல் மட்டுமன்றி, மொழிநடையும் முக்கிய இடம் பெறுகிறது இதைக் கருத்தில் கொண்டே இந்நூலின் சில கட்டுரைகள் கலைச்சொற்கள் பற்றி விரிவாகப் பேசுவதன் இடையே அறிவியல் மொழிநடை பற்றியும், பாடமாக்கம் பற்றியும், அறிவியல் உரைக்கட்டு (Scientific Discourse) பற்றியும் சுட்டிக் காட்டுகின்றன.

மொழிவளர்ச்சிக்குத் தேவையான எழுத்தாக்கம், நிலை பேறாக்கம், புதுமையாக்கம் பற்றிப் பேசும் சண்முகம் அவர்கள் கலைச்சொல்லுருவாக்க வரலாறு பற்றியும், நெறிமுறைகள் பற்றியும், தமிழின் கலைச்சொல் தன்மை பற்றியும், கலைச்சொற்களில் பிறமொழி ஊடுருவல் பற்றியும் இரண்டாவது மூன்றாவது கட்டுரைகளில் தெளிவுறுத்துகிறார்கள் 'அறிவியல் தமிழ்ப் பாடம்' மொழியியல் பின்னணியோடு கூடிய பல குறிப்புக்களை விளககுகிறது அண்மைக் காலமாக, அறிவியல் தமிழ் வளர்ச்சியில் மொழியியலார் ஆர்வத்துடன் உழைக்க முன்வந்துள்ளனர் இது அறிவியல் தமிழாக்கத்துக்கு வளம் சேர்க்கிறது என்பது வலியுறுத்திச் சொல்ல வேண்டிய செய்தியாகும் அறிவியல் தமிழில ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தமிழ் மொழி வளர்ச்சிக்கூறாகக் கருதி ஏற்றுக்கொள்ளவேண்டும என்பதை அறிவியல் வழியில், வரலாற்று மொழியியல் அடிப்படையில் விளக்கும்போது பல உண்மைகள் புலப்படத் தொடங்கின புதிய தமிழ் இலக்கணம் அறிவியல் தமிழ் அமைப்பையும் உள்ளடக்கியதாக அமையவேண்டும் என்பதை இது கோடிட்டுக்காட்டுகிறது பேராசிரியர் சண்முகனாரின் மொழியியல் அணுகுமுறையோடுகூடிய இலக்கண அறிவும் இதற்குப் பயன்பட்டுள்ளது 'அறிவியல் தமிழும் மொழி மாற்றமும்' என்ற கட்டுரை இத்திசைகாட்டும் ஒரு கருவியாக அமைகிறது 'எழுத்துச் சீர்திருத்தம்' பற்றி ஏற்கனவே விரிவாக நூல் எழுதிய பேராசிரியர், இந்நூலிலும் அதைபபற்றி ஆங்காங்கே குறிப்பிடுவதோடு, பாரதியின் கருத்துக்களையும்

மேற்கோள்காட்டுகிறார் தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய வாதம் அரை நூற்றாண்டாக நடந்து வந்தாலும், ஒரு தெளிவுக்கும் வரமுடியவில்லை. கணினி யுகத்தில் அதற்கு ஒரு தீர்வு காணவேண்டியது காலத்தின் தேவையாகும். மொழியியலார் / கணினி அறிவியலார், அறிவியலார் இணைந்து செயல்பட்டு, விரைந்து முடிவு காணவேண்டிய கட்டம் நெருங்கியுள்ளது அண்மையில் (ஆகஸ்டு 5-6-1994) அண்ணா பல்கலைக்கழகத்தில் நடந்த கருத்தரங்கில் இதுபற்றி விரிவாக விவாதிக்கப்பட்டு, தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் சேர்ந்து செயல்வடிவம் கொடுக்கும் நிலை ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது

'அறிவியல் தமிழ்' (வா.செ.குழந்தைசாமியின் நூல்) பற்றிய மதிப்பீடு, அந்த நூலாசிரியரின் மொழிபற்றிய சில கருத்துக்களைத் திறனாய்கிறது இந்திய எழுத்துமுறைச் சிக்கலை ரோமன் வரிவடிவம் தீர்த்துவிடும் என்பது சரியன்று என்பதும் விளக்கப்படுகிறது

இறுதிக்கட்டுரை 'நேரப்பெயராக்கம்' பற்றியது தமிழர்கள் காலத்தை எவ்வாறு கணக்கிட்டார்கள், அதில் அறிவியல் தன்மை எவ்வளவு, அனுபவத் தன்மை எவ்வளவு, பொதுமக்களின் பங்கு என்ன, மேட்டுக்குடியின் பங்கு என்ன வடமொழியின் செல்வாக்கு எத்தகையது என்பனவற்றைத் தக்கசான்றுகளுடன் தெளிவுபடுத்த முயன்றுள்ளார் இக்கட்டுரையின் அடிப்படையில், இப்பொருள் குறித்து நீள ஆராய்வது தேவை என்பதை இக்கட்டுரையைப் படிக்கும் அனைவரும் உணரலாம் பழந்தமிழரின் கலைச் சொல்லாக்கத்திறன் குறித்தும் இக்கட்டுரை வழி அறியலாம்

கலைச்சொல்லாக்கத்தில் 'ஒலி பெயர்ப்பு' என்பது பற்றிப் பலரும் எழுதுகின்றனர். Transliteration என்பதையே 'ஒலிபெயர்ப்பு' என மொழிபெயர்த்துள்ளனர். சண்முகமும் அதைக் குறிப்பிடுகிறார் இது பொருத்தமல்ல எனத் தோன்றுகிறது வரிவடிவம் இல்லா மொழி ஒன்றைப் பெயர்ப்பதே ஒலிபெயர்ப்பு (Transcription). வரிவடிவம் உள்ள மொழிச் சொற்களை வரிவடிவம் உள்ள இன்னொரு மொழியில் பெயர்ப்பது எழுத்துப் பெயர்ப்பு (Transliteration).ஒரு மொழிக் கருத்தை இன்னொரு மொழியில் தருவது மொழி பெயர்ப்பு (Translation).எனவே, ஒலிபெயர்ப்பு, எழுத்துப்பெயர்ப்பு, மொழிபெயர்ப்பு என்பனவற்றை

முறையே transcription, transliteration, translation என்பனவற்றுக்கு நிகரானதாகக் கொள்வது ஏற்புடையதாகும்

பேராசிரியர் சண்முகம் அவர்கள் ஒருபால் சாராது அறிவியல் வழிநின்று அறிவியல் தமிழாக்கம் பற்றி ஆழமாகச் சிந்தித்து இக்கட்டுரைகளை எழுதியுள்ளார்கள் அறிவியல் தமிழ் ஆர்வலர்களுக்கு இக்கட்டுரைகள் பெரும் பயன் நல்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை

தஞ்சாவூர்
இராம. சுந்தரம்
15894

# முன்னுரை

இந்த நூல் நான் எழுதிய ஏழு கட்டுரைகளின் தொகுப்பு இவைகளில் நடு ஐந்து கட்டுரைகளே அறிவியல் தமிழோடு நேரடியாகத் தொடர்பு உடையவை முதல் கட்டுரையானு 'மொழிப் புதுமையாக்கம்' என்பது இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மொழியில் பரிணாம வளர்ச்சியால் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிக்காமல் அறிஞர்கள் தமிழில் புதிய பயன்பாட்டுத் தேவைகளை மனதில் கொண்டு அறிவியல் முன்னேற்றத்தாலும் சமூக விழிப்புணர்வாலும் செய்த மாற்றங்களைக் குறிக்கும். எனவே, அது அறிவியல் தமிழாக் கத்துக்கு முன்னுரை போன்று அமைந்துள்ளதால் முதல் கட்டுரை யாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது மேலும், இந்தக் கட்டுரையே எழுதிய காலத்தால் (1973) முந்தியது, இது சமூகமொழியியலில் உயர்கல்விப் பயிற்சி பெற்ற பிறகு எழுதிய முதல் கட்டுரை கடைசிக்கட்டுரை எல்லோருக்கும் தெரிந்த பொருளான நேரப்பொருளைச் சங்ககாலத் தமிழ்ச் சமூகம் எப்படி உணர்ந்து மொழியாக்கியிருக்கிறது என்பதை விளக்குமுகமாகச் சொல்லாக்க முறைகள், அந்தச் சொற்களின் பயன்பாட்டின் மூலம் சமூகப்பாகுபாடு, அப்பொழுது வழங்கிய மொழிகளின் பயன்பாடு, . அந்தக் கால மொழி உணர்வு, தகுமொழியாக்கம் முதலியவைகளையும் விளக்க முற்படுகிறது எனவே இதுவும் அறிவியல் தமிழாக்கத்தின் ஒரு கூறாகக் கருதத்தகுந்தது என்று எண்ணியே இங்கு சேர்க்கப்பட்டிருக்கிறது இது வெளியிட்ட காலவரிசையால் (1980) இரண்டாவது ஆகும்.

இடைப்பட்ட ஐந்து கட்டுரைகளும் எண்பதுகளில் எழுதப்பட்டவை. அறிவியல் தமிழ் பற்றிய கருத்தரங்குகளில் படிக்கப்பட்ட கட்டுரைகள் இந்தக் கட்டுரைகள் குறைந்த அளவே திருத்தம் செய்யப்பட்டு வெளிவருகின்றன வெவ்வேறு சமயங்களில் எழுதப்பட்ட கட்டுரைகள் ஆனதால் சில கருத்துகளும் உதாரணங்களும் கூறியது கூறலாகக் காணப்படுகின்றன அவை அந்தந்த கட்டுரைகளின் முழுமை கருதி நீக்கப்படாமல் விடப்பட்டுள்ளன

இன்று 'அறிவியல் தமிழ்' என்பது தனி அறிவுத்துறையாக அங்கீகாரம் பெற்றிருக்கிறது ஆனாலும். தமிழ்ப் பல்கலைக்கழகம்

மட்டுமே அறிவியல் தமிழுக்குத் தனித்துறை ஏற்படுத்தியுள்ளது நல்ல பாடநூல்களும் பொதுநூல்களும் ஓரளவு வெளிவந்து கொண்டிருக்கின்றன என்றாலும் அறிவியல் தமிழ் ஆய்வு இன்னும் முழு தீவிரம் அடையவில்லை அறிவியல் தமிழாக்கப் பிரச்சனைகள் கூர்மைப்படுத்தப்படவில்லை இதற்கு ஒரு காரணம், தமிழ்மொழிச் சமூகம் அறிவியல் தமிழாக்கச் சிக்கல்களுக்கு இன்றைய காலநிலையும் மொழிநிலையும் மனதில் கொண்டு திட்டமிட்டு முடிவு காணத் தயாராக இல்லை; முடிவு எடுக்கத் தடை இருந்துகொண்டிருக்கிறது. எனவேதான், பல அறிவியல் துறை அறிஞர்களும் ஒத்துக்கொள்ளும்படியான உலகளாவிய பொதுநோக்கும் அறிவியல் சார்ந்த மொழிநோக்கும் அமைந்த பொதுநிலை உருவாகவில்லை.

இந்தக் குறைகள் நீங்க, அறிவியல் தமிழ்ப் பாடநூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் நிறைய வெளிவருவது ஓரளவு உதவிசெய்யும் ஏனென்றால், நூல்கள் எழுதுவோர் தைரியமாகத் தங்களுக்கு வேண்டிய மாற்றங்களைச் செய்துவிடுவார்கள் மேலும், அந்தந்த அறிவியல் துறையைச் சார்ந்த துறை வல்லுநர்கள் தங்கள் அனுபவத்தின் அடிப்படையில் அந்தந்தத் துறையில் பொதுநூல் ஒன்றும் அறிவு வளர்ச்சியைக் காட்டும் நூலொன்றும் தமிழிலேயே சிந்தித்துச் சுயமாக உருவாக்க முன்வரவேண்டும், தங்கள் அறிவியல் கண்டுபிடிப்புகளைத் தமிழிலும் அவ்வப்போது எழுதிக் கொண்டு வரவேண்டும் அப்பொழுதுதான் இயல்பான முறையில் அறிவியல் தமிழாக்க நெறிமுறைகள் உருவாகும் மொழியியலுக்கும் அறிவியலுக்கும் உரிய முக்கியத்துவம் நிலைநாட்டப்படும்.

தமிழில் சங்க காலந்தொட்டே கலைச்சொல்லாக்கம் நடைபெற்று வந்திருக்கிறது ஆனாலும், கலைச்சொல்லாக்கம் பற்றிய தனித்த சிந்தனை பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கில மொழி மூலம் அறிவியல் புகுத்தப்பட்டபோது-பல பொது அறிவியல் நூல்கள் வெளிவந்த சமயத்தில் உருவானது அந்தச் சிந்தனையைத் துவக்கி வைத்த பெருமை இலங்கையில் வாழ்ந்த டாக்டர் சாமுவேல் ஃபிஷ்கிரின் *(1822-1884)* என்ற அமெரிக்க மருத்துவரைச் சாரும் பின்னரும், பாடநூல்கள் எழுதுவது, பொது அறிவியல் நூல்கள் தயாரிப்பது என்ற முறையிலேயே அறிவியல் தமிழ் வளர்ந்து வந்தது; அப்போது கலைச்சொற் குழுக்களும ஏற்படுத்தப்பட்டன

நாடு விடுதலை அடைந்த பிறகு கல்லூரிகளில் அறிவியல் பாடத்தைத் தமிழில் சொல்லிக்கொடுக்க வேண்டும் என்று தமிழக அரசே முன்வந்தது. அதற்கான புதிய பாடநூல்களைத் தயாரிக்கவும் ஆசிரியர்களுக்குத் தமிழில் கற்பிக்கப் பயிற்சி கொடுக்கவும் பெரிதும் ஈடுபட்டு உழைத்த பெருமை அமரர் பேரா தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரைச் சாரும் கலைச் சொல்லாக்கத்திலும் நடையாக்கத்திலும் மொழியியல் நோக்கை அவர் புகுத்தினார். அறிவியல் தமிழாக்கத்தில் பாடுபட்ட தனியார் நிறுவனங்களில் கோவை பூ.சா.கோ.கலைக்கல்லூரி நிறுவனம் குறிப்பிடத்தகுந்தது. அந்த நிறுவனம் நடத்திய 'கலைக்கதிர்' என்ற மாத இதழ் அறிவியல் கருத்துகளைத் தமிழில் வெளியிட்டதோடு அறிவியல் தமிழாக்கம் பற்றிய கட்டுரைகளையும் பிரசுரித்தது அந்த நிலையில் அந்த நிறுவனங்களின் நெறியாளரான அமரர் பேரா. ஜி.ஆர் தாமோதரன் 'அறிவியல் தமிழ்' என்பது தனிப்பாடமாக உருவாகவேண்டும்; கல்லூரியில் தமிழ் மாணவர்களுக்கும் அறிவியல் மாணவர்களுக்கும் அது கற்பிக்கப்படவேண்டும் என்று அதற்குரிய பாடதிட்டத்தை வகுக்கக் கோவையில் இரண்டு கருத்தரங்குகள் (1974,1976) நடத்தி அந்தக் கட்டுரைகளைக் கலைக்கதிரில் வெளியிட்டார்.

தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் தோன்றியதும் எண்பதுகளில் அறிவியல் தமிழுக்குப் புதிய உத்வேகம் பிறந்தது அந்தப் பல்கலைக்கழகம் அறிவியல் அறிஞர்களையும் மொழியியல் அறிஞர்களையும் ஒன்றுகூட்டி, சில நடைமுறைக் கொள்கைகளை வகுத்துக் கொடுத்து, சுயமாகப் பல நூல்ககள் எழுத வாய்ப்பு கொடுத்தது மேலும், அது 'அறிவியல் தமிழ்' என்பது தனி ஆய்வுத்துறை என்பதை உணர்ந்து பல கருத்தரங்குகளை நடத்தியது. அதைப் பின்பற்றிப் பாரதியார், அண்ணா, பாரதிதாசன் முதலிய பல்கலைக்கழகங்களும் அறிவியல் தமிழ்க் கருத்தரங்குகள் நடத்தி 'அறிவியல் தமிழ்' ஒரு தனித்துறை ஆய்வாக மலர உதவின இதன் காரணமாகவே இன்று தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அறிவியல் தமிழுக்குத் தனித்துறை எற்பட்டுள்ளது

இந்த நிலையில் இந்த நூல் அறிவியல் தமிழ் ஆய்வு பற்றிய சில விமர்சனங்களையும் சில வரலாற்றுப் பார்வைகளையும் கோடிட்டுக் காட்டி அறிவியல் தமிழாக்கக் கோட்பாடு உருவாகவும் மொழி பற்றிய சில மயக்கங்கள் தீரவும் உதவும் என்ற நம்பிக்கையோடு வெளிவருகிறது

கட்டுரைகளைத் தயாரிக்க வாய்ப்பு அளித்த பல்கலைக் கழகங்களுக்கும் ஆய்வு நிறுவனங்களுக்கும் இவைகளை வெளியிட்ட ஆராய்ச்சி, மொழியியல், கலைக்கதிர், களஞ்சியம் ஆகிய இதழாசிரியர்களுக்கும் என் நன்றி உரியது

கோவையில் நடைபெற்ற இரண்டு கருத்தரங்குகளிலும் கலந்துகொள்ள உதவியதோடு அந்தக் கட்டுரைகளை உடன் இருந்து தயாரித்ததன் மூலம் அறிவியல் தமிழ் பற்றிய சில நுழைபுலங்களை (Insights) விளக்கிய பேரா ச அகத்தியலிங்கம் அவர்களுக்கு என்னுடைய நன்றி உரியது

இந்த நூலை வெளியிட உதவி நூலுக்கு அணிந்துரையும் அளித்த பேரா இராம, சுந்தரம் (அறிவியல் தமிழ்-தமிழ் வளர்ச்சித்துறை தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை) அவர்களுக்கும் நூலை வெளியிட்ட நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்கும் என் இதயங்கலந்த நன்றி

செ.வை. சண்முகம்.

## ஆசிரியரின் பிறநூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | Naccinarkkiniyar's Conception of Phonology | 1967 |
| 2. | The language of Tamil inscriptions (1250-1350 A.D) (co-author) | 1970 |
| 3. | Dravidian Nouns (a comparative Study) | 1971 |
| 4. | Third Seminar on Dravidian Linguistics (Co-editor) | 1975 |
| 5. | Indonesian Studies | 1979 |
| 6. | Aspects of Language Development in Tamil | 1983 |
| 7. | சுவாமிநாதம் (உரையும் பதிப்பும்) | 1975 |
| 8. | சுவாமிநாதமும் மூலமும் உரையும் (பதிப்பு) | 1976 |
| 9. | எழுத்துச் சீர்திருத்தம் | 1978 |
| 10. | எழுத்துச் சீர்திருத்தமலர் (இணை பதிப்பர்) | 1979 |
| 11. | எழுத்திலக்கணக் கோட்பாடு | 1980 |
| 12. | சொல்லிலக்கணக் கோட்பாடு - 1 | 1984 |
| 13. | மொழியும் எழுத்தும் | 1985 |
| 14. | சொல்லிலக்கணக் கோட்பாடு - 2 | 1986 |
| 15.* | மொழிவளர்ச்சியும் மொழி உணர்வும் (சங்க காலம்) - தமிழ்ப் பல்கலைக்கழகப் பரிசு பெற்றது | 1989 |
| 16. | மலையாள மொழியின் முதல் இலக்கணம் (சமூகமொழியியல் நோக்கு)- தமிழக அரசு பரிசுபெற்றது | 1992 |
| 17. | சொல்லிலக்கணக் கோட்பாடு - 3 | 1992 |
| 18. | கிறித்தவ அறிஞர்களின் இலக்கணப் பணி | 1993 |

# உள்ளுறை


1. மொழிப் புதுமையாக்கம் 1

2. கலைச்சொல்லாக்க நெறிமுறைகள் :
ஒரு வரலாற்று அளவீடு 17

3. கலைச்சொல்லாக்கமும் தரப்பாடும் 54

4. அறிவியல் தமிழ்ப்பாடம் 63

5. அறிவியல் தமிழும் மொழிமாற்றமும் 72

6. 'அறிவியல் தமிழ்' :
மொழித்திட்ட நோக்கு மதிப்பீடு 78

7. நேரப்பெயராக்கம் (சங்ககாலம்) 93

துணைநூல்கள்

# 1. மொழிப் புதுமையாக்கம்

காலந்தோறும் மொழி மாறுபட்டு வருவது இயற்கை. இதுவே மொழி வரலாறு என்று மொழியியலார் ஆராய்வது ஆனால், அண்மைக் காலத்தில் மனித சமூகத்தில் ஏற்பட்ட அறிவியல் முன்னேற்றம், தொழில்துறை முன்னேற்றம் ஆகியவை காரணமாக உலகமொழிகள் பலவற்றிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன இதுவே புதுமையாக்கம் (Modernization) எனப்படும் புதுமையாக்கத்தால் சில மொழிகள் எழுத்து உருவம் பெற்றன; சில மொழிகள் செம்மைபடுத்தப்பட்டன; வேறுசில புதிய கிளைமொழியைத் தகுமொழியாகக் கொண்டன. மொழியின் பயனும் விரிவுபடுத்தப்பட்டது. செய்யுள் இலக்கியத்திற்கே எழுத்து மொழி பயன்படுத்தப்பட்டது போய், உரைநடை தோன்றிப் பல புதிய பொருள்களைப் பற்றி எழுதப்பட்டது புதுப்புது கருத்துக்களைத் தெரிவிக்கும் சொற்கள் உண்டாக்கப்பட்டன எனவே, இயல்பான வளர்ச்சியோடு செயற்கையாகவும் மொழியில் பல மாற்றங்கள் புகுந்தன. இவற்றையே மொழி வளர்ச்சியில் புதுமையாக்கம் என்று அழைக்கிறார்கள். புதுமையாக்கத்தால் ஏற்பட்ட மாற்றம் ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு விதமாக அமைந்துள்ளது இதற்குக் காரணம் அந்தந்த மொழி பேசவோரின் பண்பாட்டிற்கும் உளநிலைக்கும் வரலாற்று நிலைக்கும் ஏற்ப அமைவதே ஆகும் எனவே, புதுமையாக்கத்தால் ஏற்படும் மொழி வளர்ச்சியைச் சமூக மொழியியலார் (Sociolinguist) ஆராய்ந்து வருகிறார்கள்

## புதுமையாக்க மொழி வளர்ச்சி

புதுமையாக்கத்தால் ஏற்படும் மொழி வளர்ச்சியை பெர்கூசன் (Ferguson) என்பார் (1) எழுத்தாக்கம் (Graphization) (2) தகுமொழியாக்கம் (Standardization) (3) சொல் பெருக்கம் (Development of Vocabulary) (4) நடையாக்கம் (Development of style ) என நால்வகையில் ஆராயலாம் என்று கூறியுள்ளார் நாம் (5) உள்நிலைமாற்றம் என்ற மற்றொரு வகையையும் சேர்த்துக் கொள்ளலாம்

எழுத்துருவம் இல்லாத மொழிகள் எழுத்துருவம் பெறுவது எழுத்தாக்கம் ஆகும் எழுத்துருவம் பெற்ற மொழிகள் அச்சு, தட்டுப்பொறி, தொலை அச்சு போன்றவற்றிற்கு எளிதாகப் பயன்படும் முறையில் செய்யப்படும் எழுத்துச் சீர்திருத்தம் (Script reform) இதன் ஒரு பகுதியே. அவ்வாறே ஒரு சொல்லிற்குரிய எழுத்துகளைப் பற்றிய சொல்லெழுத்துச் சீர்திருத்தமும் (Spelling reform) எழுத்தாக்கத்தின் இன்னொரு பகுதியாகும் ஒரு மொழிச் சொற்களைப் பிறமொழியில் எழுத்துத் தவறாது எழுதப் பயன்படுத்தும் ஒலிபெயர்ப்பு முறையும் (Transliteration system) மற்றொரு பகுதியாகக் கொள்ளலாம் எனவே எழுத்துருவம் பெற்ற மொழிகளில் எழுத்தாக்கம் என்பது எழுத்துச்சீர்திருத்தம், சொல்லெழுத்துச் சீர்திருத்தம், ஒலி பெயர்ப்பு முறை அமைத்தல் ஆகிய மூன்று வகையையும் குறிக்கும்.

பேச்சு மொழியாக இருக்கும் எந்த மொழியும் பல கிளைமொழிகளை உடையதாக இருக்கும் ஒரு மொழி எழுத்துருவம் பெறும்போது ஒரு கிளைமொழியே பயன்படுத்தப் பட்டு அதுவே தகுமொழித் தன்மையைப் பெற்றுவிடும் புதுமையாக்கத்தால் வேறு ஒரு கிளைமொழியும் தகுமொழியாக ஏற்றுக் கொள்ளப்படும் முன்னரே உள்ள தகு மொழியிலும் சில மாற்றங்கள் ஏற்படலாம் இவையனைத்தையும் தகுமொழி யாக்கத்தின் கீழ் ஆராயலாம்

சொல்லாக்கம் புதுப்புதுக் கருத்துகளைக் கூறுவதற்காகச் சொற்களைப் படைத்துக்கொள்ளும் முறையைக் குறிக்கும். பொதுவாகக் கடன் ஆட்சி (Borrowing) மூலமாகவும் உள்நிலை ஆக்கம் (InternalCreation) மூலமாகவும் புதுக் கருத்துக்களைக் கூறும் சொற்களை ஆக்கிக் கொள்ளலாம் ரயில் என்ற சொல்லை அப்படியே தமிழில் பயன்படுத்தினால் அது கடன் ஆட்சி ஆகும்; புகைவண்டி என்று கூறினால் அது உள்நிலை ஆக்கம் ஆகும் உள்நிலை ஆக்கம் என்பதும் பல முறையில் ஏற்படலாம் ஒன்று, கடன் மொழி பெயர்ப்பு (Loan translation) எனப்படும் மூல மொழியிலுள்ள சொற்களை நேருக்கு நேர் மொழிபெயர்த்து ஆக்கிக் கொள்வதாகும். டெலிபோன் என்பதைத் தொலைபேசி என்றும் டெலிஸ்கோப் என்பதைத் தொலைநோக்கி என்றும் உண்டான சொற்கள் ஆங்கிலச் சொற்களை மொழி பெயர்த்ததால் (Tele = தொலை; Phone = பேசி; Scope = நோக்கி) உண்டானவையாகும் கடனாக்கம் (Loan Creation) என்பது புதுப்பொருளைக் குறிக்க. தன்னுடைய மொழியில் உள்ள சொற்களைக்

கொண்டு, தொகைச் சொற்களாகப் புதுச்சொற்களைப் படைத்துக் கொள்ளுவது ஆகும். Loud Speaker என்பதைக் குறிக்க ஒலிபெருக்கி என்ற சொல் உண்டானது இந்த முறையில் எழுந்ததாகும். கடன்விரிவு (Loan extension)என்ற மற்றொரு முறை, தன்னுடைய மொழியில் ஏற்கனவே உள்ள சொல்லைப புதுப்பொருளில் கையாளுவதைக் குறிக்கும். மின் என்ற சொல் முன்னர் 'ஒளிவிடுதல்' 'மின்னல்' என்ற பொருளில் பயின்று வந்தது இப்பொழுது Electricity என்ற புதுப் பொருளில் பயன்படுத்துவது கடன் விரிவு முறையைப் பின்பற்றுவதாகும்.

உள்நிலைஆக்கம் என்பது தன் நாட்டின் பழமையும் பெருமையும் உணர்ந்து கொள்வதால் மொழித்தூய்மை இயக்கம் போன்றவை ஏற்பட்டு மொழியில் பிறமொழித் தாக்குதல் இன்றித் தானே எழும் மாற்றமாகும். மேலும் மொழியைப் பரவலாகப் பலரும் பயன்படுத்துவதால் ஏற்படும் மாற்றங்களும் உள்நிலைஆக்கத்தின் கீழ் அடங்கும்

தமிழில் புதுமையாக்கம் ஏற்பட்ட முறையும் புதுமையாக்கத்தால் ஏற்பட்ட வளர்ச்சியும் அந்த வளர்ச்சிக்குக் காரணமான சமூக பண்பாட்டுச் சூழ்நிலையும் இங்கு விளக்கப்படும்

## தமிழில் புதுமையாக்கம்

தமிழில் மேலைநாட்டுச் செல்வாக்கு பதினாறாம் நூற்றாண்டிலிருந்து ஏறபட்டிருக்க வேண்டும் அதனால், தமிழுக்கு இரண்டு பெரும் நன்மைகள் உண்டாயின ஒன்று தமிழ் நூல்கள் அச்சிடப்பெற்றன மற்றொன்று உரைக்கு மட்டுமே பெரும்பாலும் பயன்பட்ட உரைநடை தனி இலக்கிய வகையாக மலரத் தொடங்கி, பல பொருள் குறித்து உரைநடை நூல்கள் எழுதப்பட்டன எனினும், புதுமையாக்கத்தின் முழுப் பயனும் இந்த நூற்றாண்டுத் துவக்கத்திலேதான் ஏற்பட்டது என்று வரலாறறு ஆசிரியர்கள் கருதுகிறார்கள் ஏனெனில தமிழின் முதல் செய்தித்தாள் கி.பி.1899-இல் துவங்கப்பட்டது விஞ்ஞானக் கருத்துகளைத் தமிழில் எழுதுவதற்கு அடிப்படையான கலைச்சொற்களைத் தயாரிக்க 1916-இல் தமிழ்க்கலைச் சொல்லாக்கக்கழகம் அமைக்கப்பட்டது அதே ஆண்டிலிருந்து அரசியல் பிரச்சாரத்திற்குத் தமிழ் பயன்படுத்தப்பட்டது வானொலி, திரைப்படம் போன்றவறறிலும்

பயன்படுத்தப்பட்டது முதல் கால் நூற்றாண்டை ஒட்டி இருக்கலாம். 1956-இல் இருந்து ஆட்சி மொழியாகத் தமிழ் ஆக்கப்பட்டது. 1960-ஆம் ஆண்டு முதல் கல்லூரிகளிலும் மாற்றுப் பாடமொழியாகக் கையாளத் துவங்கப்பட்டது இத்தகைய பல்வேறு நிகழ்ச்சிகளால் தமிழின் சொல் வளம் மட்டுமின்றி வேறுபல துறைகளிலும் மாற்றம் ஏற்பட்டது. அவற்றை விரிவாகக் கீழே காண்போம்.

## எழுத்தாக்கம்

எ, ஒ என்ற இரண்டு எழுத்துகளின் உயிர் வடிவத்திலும் உயிர்மெய் வடிவத்திலும் வேறுபாடு செய்து இன்று நாம் எழுதி வருகிறோம் இந்த எழுத்துச் சீர்திருத்தம் 18-ஆம் நூற்றாண்டில் வீரமாமுனிவர் செய்தது என்று பரவலாக வழங்கும் கருத்து பொருந்துமா என்று தமிழ் ஆய்வுலகில் சந்தேகம் எழுப்பப் பட்டுள்ளது ஆனால், உயிர்மெய் வடிவங்களில் செய்த மாற்றத்துக்குக் கொடுந்தமிழ் இலக்கணத்திலேயே (1728) நேரடிக் குறிப்பு இருப்பதை எடுத்துக்காட்டிச் சாலினி இளந்திரையன் (1985) சந்தேகத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார் (சண்முகம், 1993. 80-82) உயிர் எழுத்து வரிவடிவத்தில் செய்த சீர்திருத்தம் தொன்னூல் விளக்கச் சூத்திரத்தில் (12) தெளிவு படுத்தப்பட்டுள்ளது அதன் உரையே மயக்கத்தை உண்டாக்கி விட்டது என்றும் அண்மையில் விளக்கப்பட்டுள்ளது (சண்முகம்,1993 118-20) எனவே, ஒகர, ஒகரத்தில் சீர்திருத்தம் செய்த பெருமை வீரமாமுனிவருக்கே உரியது

கூட்டெழுத்தாகச் சிலவற்றை எழுதும் முறை(த்து என்பதை ஹு என்று எழுதுவது போன்றது) சென்ற நூற்றாண்டுவரை பயிற்சியில் மிகுதியாக இருந்தது, இன்று குறைந்துள்ளது இதற்கு அச்சு (Printing) ஒரு காரணமாக இருக்கலாம்

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் என்று உயிர்மெய் எழுத்துக்களில் காணப்படும் ஒழுங்கின்மையை நீக்கப் பலரும் பாடுபட்டார்கள் அச்சுப்பொறி, தட்டுப்பொறி, தொலைஅச்சு (Teleprinter) போன்றவற்றிற்கு எளிய முறையில் பயன்படும் வகையில் சீர்திருத்தம் செய்ய 1947-இல் அன்றைய தமிழ்நாடு அரசு ஒரு குழு நியமித்தது அதில் பேராசிரியர் தெபொமீனாட்சிசுந்தரனார் பங்கு ஏற்று நல்ல பரிந்துரைகளை வழங்கியுளார் சுதேசமித்திரன் நாளிதழும் இந்த துறையில் சில திருத்தங்களைக் கையாண்டு வந்தது கொஞ்சநாளில்

அந்த முறையை விட்டுவிட்டது. 'விடுதலை' நாளிதழ்தான் சில எழுத்துக் களைப் புது முறையில் ( - லை, - ணா) எழுதுவதை விடாப்பிடியாகக் கையாண்டு வந்தது எனவே, தமிழக அரசு 1978-இல் ஆகார, ஐகார உயிர்மெய் வடிவங்களில் செய்த சீர்திருத்தமும் அதன் எதிர் விளைவுகளும் சண்முகம் (1978) நூலில் விளக்கப்பட்டுள்ளது.

தமிழில் புதிய எழுத்துகளை உண்டாக்கும் முயற்சியும் நடைபெற்று வருவது புதுமையாக்கத்தின் ஒரு விளைவே பாவேமாணிக்க நாயக்கர் இந்நூற்றாண்டு துவக்கத்தில், F, X போன்ற ஒலிகளைத் தமிழில் ஆய்த எழுத்தையும் வல்லெழுத்தையும் சேர்த்து எழுதுவதன்மூலம் குறிப்பிடலாம் என்று கூறினார். f என்பதை ஃப் என்றும் X என்பதை ஃக் என்றும் அந்த முறைப்படி எழுத வேண்டும்

இன்று சில பத்திரிக்கைகள் b போன்ற ஒலிப்புடைய வல்லின ஒலிகளை (Voiced stop sounds) எழுதத் தடித்த எழுத்துகளைப் பயன்படுத்தி வருகின்றன இவற்றுள் ப என்ற ஒலியைக் குறிக்க 'ப' என்று எழுதும் பழக்கமே மிகுதியாகக் காணப்படுகிறது இவையெல்லாம் அனைவராலும் ஒத்துக் கொள்ளப்படாத நிலையில் உள்ளன புதுமை யாக்கத்தால் ஏற்பட்ட மாற்றங்களில் பெரும்பாலராலும் ஒத்துக் கொள்ளப்பட்டது, கால்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி இட்டு எழுதும் முறையேயாகும் இந்த முறை இந்திய மொழிகள் எல்லாவற்றிலும்கூட புதுமையாக்கத்தால்தான் நடைமுறைக்கு வந்தது

எழுத்தாக்க மரபில் இன்று நடைபெற்று வரும் ஷ, ஹ, ஸ, க்ஷ, ஜ, போன்ற கிரந்த எழுத்துக்களை நீக்கிவிட்டு அதற்கு இணையான எழுத்துக்களைப் போட்டு எழுதுவதுதான் இதனால்தான் வரதராஜன் என்பது வரதராசன் என்றும் மீனாக்ஷிசுந்தரம் என்பது மீனாட்சிசுந்தரம் என்றும் அகஸ்தியலிங்கம் என்பது அகத்தியலிங்கம் என்றும் இன்றும் எழுதப்படுகின்றன

தமிழ் மொழிச்சொற்களை ரோமன் எழுத்தில் எழுதுவதற்குரிய எழுத்துப் பெயர்ப்பு முறையைப் பலரும் பலவாறாகப் பயன்படுத்துவது மொழி ஆராய்ச்சிக்கு ஒரு தடையேயாகும் சென்னை பல்கலைக்கழகத்தார் தமிழ் அகராதியில் குறிப்பிட்ட முறையையே தமிழ்மொழி வரலாற்று ஆராய்ச்சியாளரும் திராவிடமொழி ஒப்பிலக்கண ஆராய்ச்சியாளரும் கையாண்டு வருகிறார்கள் ஆனால்

கல்வெட்டு ஆராய்ச்சியாளர் வேறு ஒரு முறையைப் பின்பற்றி வருகிறார்கள் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது ஒரு புதிய முறை வற்புறுத்தப்பட்டது. இவ்வாறு பலமுறையும் இருந்து வருவது தமிழ்க் கல்வியாளருக்கும் ஆராய்ச்சியாளருக்கு குழப்பம் தரும் எனவே சரியான எழுத்துப் பெயர்ப்பு முறையை அமைத்து அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி செய்ய வேண்டும்

## தகுமொழியாக்கம்

தமிழின் இன்றைய தகுமொழி பற்றிக் கருத்து வேறுபாடு அதிகம் இல்லை ஆயினும், சிற்சில துறையில் மாறுபட்ட கருத்துகள் காணப்படுகின்றன; மாறுபட்ட முறையும் காணப்படுகின்றன

இன்றைய தகுமொழி எந்தப் பேச்சுமொழியையும் அடிப்படையாகக் கொண்டு எழுந்தது அல்ல எனினும் இப்பொதுமொழி தனக்கென பல மரபுகளை ஏற்படுத்திக் கொண்டு தமிழ்மொழி வரலாற்றில் ஒரு தனி நிலையை அடைந்துவிட்டது

புணர்ச்சியைப் பொறுத்தவரையில் இரண்டு சொற்களுக்கு இடையே புணர்ச்சி இல்லாமல் எழுதும் முறை பரவி வருகிறது. இதனால் உடம்படுமெய் இட்டு எழுதும் முறை குறைந்து வருகிறது சான்றாகப் பேராசிரியர் ராபி சேதுப்பிள்ளை அவர்கள் எழுதிய 'கடற்கரையிலே' என்ற நூலில் 'சும்மா இரு' (சும்மா விரு) 'செலுத்த இசை ' (செலுத்த விசை) என்ற பல உதாரணங்களைக் காணலாம் அவவாறே குற்றியலுகர ஈற்றுச் சொற்கள் உயிர் முதல் மொழியாக வரும்போது குற்றியலுகரம் கெடாது அப்படியே எழுதும் பழக்கம் வளர்ந்து வருகிறது 'அதற்கு அளித்தேன்' (அதற்களித்தேன்) போன்ற பலவற்றை அந்த நூலில் காணலாம் புணர்ச்சி இல்லாமல் எழுதும் முறை பழந்தமிழ் நூல்களைப் பதிப்பிக்கும்போதும் கையாளப்படுகிறது அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கம்பராமாயணத்தின் ஆராய்ச்சிப் பதிப்பு வெளியிட்டபோது பாடல்களைச் சந்தி பிரித்து ஒரு முறையாகவும் சந்தி பிரிக்காது ஒரு முறையாகவும் அச்சிட்டுள்ளது தமிழ் இலக்கியக் கல்வி தமிழைச் சிறப்பாகப் பயிலும் பட்டதாரிகளுக்கு மட்டுமே உரியது என்பது போய், தமிழ் அறிவு குறைவாக உள்ள பலருக்கும் உரியதாக மாறிய நிலையை இது காட்டுகிறது இதுவும் புதுமையாக்கத்தின் விளைவாகும்

இன்றைய வாக்கிய அமைப்பு பலவற்றில் ஆங்கில மொழிச் செல்வாக்கு உண்டு. அதனால், பல புதிய முறை வாக்கியங்கள் பயிற்சியில் உள்ளன. எனவே, இன்றைய எழுத்துத் தமிழின் இலக்கணம் தனித்தன்மை உடையது என்பதில் ஐயமில்லை.

## சொல்லாக்கம்

தமிழில் பெரும்பான்மையும் உள்நிலை ஆக்கமே சொல்லாக்கத்திற்குப் பயன்படுகிறது. அங்கும் தமிழ்ச் சொற்களையே அடிப்படையாகக் கொள்வது தமிழின் தனிச்சிறப்பாகும். மாறாக, கன்னடம், மலையாளம், போன்ற பிற திராவிட மொழிகள் வடமொழிச் சொற்களைப் பெரிதும் சொல்லாக்கத்திற்குப் பயன்படுத்திக் கொள்கின்றன. இந்திய அரசு 'ரேடியோ' என்ற ஆங்கிலச் சொல்லிற்குப் பதிலாக இந்திய மொழியில் பரவலாகப் பயன்படும் ஆகாஷவானி என்பதைப் பொதுச் சொல்லாகத் தேர்ந்தெடுத்தது. ஆனால் தமிழ்நாடு அரசு அதை ஏற்றுக் கொள்ளாது வானொலி என்ற சொல்லே பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூறிவிட்டது. அதனால் இன்று 'ஆல் இந்தியா ரேடியோவின் திருச்சி வானொலி நிலையம்' என்று ஆங்கிலத் தொடரையும் தமிழ்த்தொடரையும் சேர்த்து திருச்சி வானொலி நிலையம் ஒலி பரப்புகிறது.

கலைச்சொற்களில் காணப்படும் மற்றொரு சிறப்புப் பண்பு சங்கத் தமிழ்க் கூறுகளைப் பயன்படுத்துவது. இதைச் செம்மையாக்கம் (Classicalisation) என்று கூறலாம். வரத ராசனார் (1957) சங்கத் தமிழுக்கும் பிற்காலத் தமிழுக்கும் காட்டிய வேறுபாடு செம்மையாக்கத்திற்கான காரணம் கூறுவதுபோல அமைந்துள்ளது. சங்கத் தமிழ் தொகைநிலை (Synthetic)யாக உள்ளது என்றும் பிற்காலத் தமிழ் விரிநிலை (Analytic) வகையாக உள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். கலைச் சொற்கள் கூடியவரையில் ஒரு சொல் நீர்மைத்தாக அதாவது தொகைநிலையாக (Unit term) இருப்பது சிறப்புடையது என்பார் மொழியியலார். இந்த உண்மையை மனதில் கொண்டே பல்வேறு சங்கத்தமிழ் கூறுகள் கலைச் சொல்லாக்கத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக எதிர்மறைப் பெயரெச்சத்தைப் பயன்படுத்தும் போது இன்று பேச்சுத்தமிழிலும் எழுத்துத்தமிழிலும் உள்ள - ஆத என்ற எதிர்மறைப் பெயரெச்ச விகுதியைக் கையாளாமல் சங்கத் தமிழில் உள்ள - ஆ என்ற விகுதியைக்

கையாளுதலைச் சுட்டிக்காட்டலாம். மாறாச் செலவு 'Constant cost' பற்றாக்குறை 'Deficit' திறன் பெறாத் தொழிலாளி 'Unskilled Labourer' முதலிய கலைச் சொற்களில் அந்த உண்மையைக் காணலாம். அவ்வாறே வினைச் சொல்லையும் பெயர்ச்சொல்லையும் சேர்த்து உண்டாக்கும் வினைத்தொகை இன்றும் பயிற்சியில் உள்ளது. உயர்கூலி 'High Wage' குறைந்துசெல் விளைவு 'Diminishing return போன்ற பல கலைச் சொற்களில் வினைத்தொகை அமைக்கப் பட்டுள்ளதைக் காணலாம். சில சமயங்களில் இன்றைய வழக்கிலுள்ள சொற்களுக்குப் பதிலாகப் பழந்தமிழ்ச் சொற்களைக் கலைச் சொற்களாகக் கையாளும் பழக்கமும் காணப்படுகிறது. உதடு, நடுநிலைமை, பிச்சைக்காரர் என்பன முறையே இதழ், நொதுமல், இரவலர் எனக் கலைச் சொற்களில் வழங்கப்பட்டுள்ளன. •

தமிழில் பெரும்பான்மையும் கடனாக்கம், கடன்மொழி பெயர்ப்பு என்ற இருமுறையே சொல்லாக்கத்தில் மிகுதியும் கையாளப்பட்டு வருகின்றன நிழல் படம் 'Photo' பல்கலைக்கழகம் 'University' காசோலை 'Cheque' பேருந்து 'Bus' முதலிய பல சொற்கள் கடனாக்கத்தால் ஏற்பட்டவை செய்தித்தாள் 'Newspaper' நூல் அஞ்சல் 'Book-post' பதிவாளர் 'Register' பணவிடை 'Moneyorder' போன்றன கடன் மொழி பெயர்ப்பால் உண்டானவை நாள்தோறும் பரவலாகப் புயன்படுத்தப்படும் பொருள்களைக் குறிக்கக் கடனாக்கமும் விஞ்ஞான, தொழில் துறையைச் சேர்ந்த பொருள்களைக் குறிக்க கடன்மொழி பெயர்ப்பும் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன

• கல்வெட்டிலும் பழைய இலக்கியத்திலும் காணப்படும் சொற்களைக் கடன் விரிவாகப் புதுப் பொருள்களைக் குறிக்கப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று சிலர் அடிக்கடி வற்புறுத்தி வருகின்றார்கள் எனினும் அந்த முறையில் இன்றைய தமிழில் புகுந்த சொற்கள் குறைவே அண்மையில் 'Board' என்ற சொல்லைக் குறிக்க வாரியம் (குடிசை மாற்று வாரியம், குடிநீர் வாரியம்) உண்டாக்கியது கடன் விரிவு முறையில் ஏற்பட்டதாகும் வானொலி, பேராசிரியர் போன்ற சில சொற்கள் கொஞ்ச காலத்திற்கு முன்னிருந்தே பயன்படுத்தப்பட்டு வருவது இந்த முறையில் எழுந்ததாகும்

கன்னடம். மலையாளம் ஆகிய பிறமொழிகளைப் போன்று நிறைய சொற்களைக் கடன் வாங்காவிடினும் 'கடன் ஆட்சி' Borrowing)

தமிழுக்குப் புதிதல்ல. கிலோ, லிட்டர் என்பன மிக அண்மையில் தமிழில் கடன் வாங்கப்பட்ட சொற்களாகும்

கடன் ஆட்சி மூலம் மொழித்தூய்மை கெட்டுவிடும்; மொழி புது மொழியாக மாறிவிடும் என்ற பரவலான கருத்து தமிழகத்தில் இருந்து வருகிறது உலக மொழிகள் பலவற்றையும் பார்க்கும்போது அது தவறு என்பது புலனாகும் பிறமொழியாளரோடு தொடர்பு ஏற்படும்போது கடன் வாங்குதல் இயற்கை. அவசியமான பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்குவதில் தவறு இல்லை

## நடையாக்கம்

தமிழ் எழுத்து நடையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பத்து பதினைந்து வரி வரையுள்ள பெரிய வாக்கியங்கள் போய் இரண்டு மூன்று வரிக்கு மேற்படாத சிறுசிறு வாக்கியங்களே இன்று மிகுதியாக பயன்படுத்தப்படுகின்றன மிக அண்மையில் ஏற்பட்ட மற்றொரு மாற்றம் எதுகை மோனையோடு கூடிய அடுக்குமொழி நடை 1940 முதல் 1960 வரை பெற்றிருந்த செல்வாக்கை இழந்து விட்டதாகும்

ஆராய்ச்சிக் கட்டுரை எழுதத் தனிமுறை ஒன்று உருவாகி வருவதும் குறிப்பிடத் தகுந்தது பத்தியெண், சிறுசிறு உட்தலைப்பே கொடுத்தல், அடிக்குறிப்பு, மேற்கோளைக் கூறும் முறை போன்ற புதிய பழக்கங்கள் ஆராய்ச்சிக் கட்டுரையின் சிறப்புப் பண்புகளாகக் கருதப்பட்டு வருகின்றன

உரைநடை வளர்ச்சி பற்றிய விரிவான ஆராய்ச்சி இன்னும் பல புதிய மாற்றங்களை அறிந்து கொள்ள உதவும்

'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற புதிய கோட்பாட்டால் தமிழ் மொழி அமைப்பிலும் சொல் வடிவத்திலும் சொல் தொகுதியிலும் பிறமொழிச் செல்வாக்கு இன்றியும் மாற்றம் ஏற்பட்டு வருவது புதுமையாக்கத்தின் விளைவு எனலாம்

புணர்ச்சி முறையில் இரண்டு மாற்றம் ஏற்பட்டதில் ஒன்று ஏற்றுக் கொள்ளப்பட்டு மற்றது மறுக்கப்பட்ட நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கது மதராஸ் என்றிருந்த நம் மாநிலத்தின் பெயர் தமிழ்நாடு என்று மாற்றப்பட்டது அந்தச் சொல்லைப் பெயரடையாகப் பயன்படுத்தியபோது தமிழ்நாடு என்றே (தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மின்வாரியம) உள்ளது, தமிழ் இலக்கண முறைக்கே

மாறுபட்டதாகும். ஏனெனில் நாடு என்ற சொல் பெயரடையாக அமைய 'நாட்டு' என்று மாற்றிக் கொள்ளவேண்டும் அப்படி மாற்றம் ஏற்படாத போதும் கருத்து மாறுபாடு இன்றி ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது. ஆனால் குடும்பக்கட்டுப்பாடு பிரச்சார மொழிகளில் ஒன்றான 'அளவோடு பெற்று வளமோடு வாழ்வோம்' என்பது மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது ஏனெனில் மகர ஈற்றில் முடியும் சொற்கள் வேற்றுமை ஏற்கும்போது அத்து சாரியை கட்டாயமாக வர வேண்டும் (மரம், மரத்தை, மரத்தோடு) என்பது இன்றைய தமிழின் ஒரு புணர்ச்சி விதி அதன்படி வளமோடு என்பது வளத்தோடு என்று இருக்க வேண்டும் என்று பத்திரிகைகளில் பலர் கடிதம் எழுதியதால் தமிழ்நாடு இன்று 'அளவாகப் பெற்று வளமாக வாழ்வோம்' என்று மாற்றி எழுதி விட்டது. ஆனால் ஒடு/ ஒடு என்ற மூன்றாம் வேற்றுமை உருபுக்கு முன் அத்துச் சாரியை இல்லாமலே, நெஞ்சமொடு (தொல் 1059), காலமொடு (தொல் 683) போன்றவை பெரு வழக்கமாக உள்ளன எனவே, சாரியை இல்லாமல் வருவது முழுவதும் இலக்கண வழு என்று சொல்ல முடியாது. சங்க இலக்கிய மரபை யாரும் சுட்டிக் காட்டி 'வளமோடு' என்பது வாதிடாததே வளமோடு என்பது தவறான வழக்கு என்று அரசும் கருதி அளவாக — வளமாக என்று மாற்றும்படி ஆகிவிட்டது.

தனித்தமிழ் இயக்கம் தமிழில் ஏற்கனவே உள்ள பிறமொழிச் சொற்களை நீக்கவேண்டும் என்று பாடுபட்டது. இதற்கு முதலில் தமிழில் உள்ள பிறமொழிச் சொற்கள் எல்லாவற்றையும் கண்டுபிடிக்க வேண்டும். ஒப்பிலக்கண அறிவும் வரலாற்று மொழி அறிவும் இதற்கு வேண்டும் அந்த நிலையிலும் கருத்து வேறுபாட்டாலும் சிலவற்றை எந்த மொழியைச் சார்ந்தது என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாமல் போகலாம் எனவே, அது ஒரு அரிய முயற்சியே எனினும், தனித்தமிழ் இயக்கத்தின் செல்வாக்கால் தேவையற்ற நிலையில் வழங்கிய பல சொற்கள் மறைந்துவிட்டது அந்த வியக்கத்தின் பெருமையாகும் அக்கிராசனர், சிரம், ஜலம் போன்ற சொற்கள் போய் முறையே தலைவர், தலை, தண்ணீர் என்ற நல்ல தமிழ்ச் சொற்கள் உயிர் பெற்றன பேராசிரியர் சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் எழுத்துத் தமிழில் 50 விழுக்காடு பிறமொழிச் சொற்கள் பயன்படுத்தப்பட்டதாயும் 50 ஆண்டுக்குப் பிறகு 20 விழுக்காடாகக் குறைந்து விட்டதாயும் குறிப்பிட்டுள்ளார் கடந்த பத்து ஆண்டுகளில் பிற மொழிச் சொற்களின் விழுக்காடு இன்னும்

குறைந்திருக்கும் என்பதில் சற்றும் ஐயமில்லை ஆனால், மொழித்தூய்மை எல்லா நிலையிலும் ஒரே முறையில் கடைப்பிடிக்கப்பட்டு வருவதாக கூறமுடியாது செய்தித்தாள்கள், வார, மாதப் பத்திரிக்கைகளில் ஓரளவு அதிகமான பிறமொழிச் சொற்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன சில பத்திரிகைகள் மொழித் தூய்மையில் முழுதும் ஈடுபடாமலும் உள்ளன சில தயக்கமும் காட்டி வருகின்றன 'கலைமகள்' சில ஆண்டுகளுக்கு முன்னால் தலையங்கத்தின் தலைப்பில் 'நமஸ்காரம்' என்ற சொல்லைப் பயன்படுத்தியதை நிறுத்திவிட்டது; ஆயினும் நமஸ்காரத்திற்கு இணையான வணக்கம் என்ற சொல்லைக் கையாளாமல் இன்று தலையங்கச் செய்திக்கேற்ற முறையில் புதுப்புதுத் தலைப்பு கொடுத்து வருகிறது

1967-இல் திமுக அரசு பதவிக்கு வந்தபோது Expressbus என்பது முதலில் 'துரித வண்டி' என்று மாற்றப்பட்டதும் பொதுமக்களில் சிலர் 'துரித' என்பது வடமொழிச் சொல் என்று சுட்டிக்காட்டியதால் 'விரைவு வண்டி' என்று மாற்றியமைக்கப் பட்டதும் பலருக்கு நினைவு இருக்கலாம் இந்த நிகழ்ச்சி தனித்தமிழ் இயக்கம் இன்றும் உயிர் ஓட்டம் உடையதாக இருந்து வருகிறது என்பதற்குச் சான்று ஆகும்

மொழித் தூய்மை இருவகையாக நடைபெறுகிறது பிறமொழிச் சொற்களை நீக்கும்போது இணையாகத் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவது ஒரு முறை, பரிட்சை - தேர்வு, மந்திரி - அமைச்சர், சுவாசி - மூச்சுவிடு போன்றவை இந்த முறையைச் சார்ந்தவை மற்றொரு வகை பிறமொழிச் சொல்லிற்கு இணையாகப் புதுத்தொகைகளை அமைத்துக் கொள்வது சர்வகலாசாலை - பல்கலைக்கழகம், மனோ தத்துவம் - உளவியல், பிராணவாய்வு - உயிர்க்காற்று போன்றவை இந்த வகையை ஒட்டி எழுந்தவை

உள்நிலை மாற்றத்தினால் வழக்கிலுள்ள சில தமிழ்ச் சொற்களுக்குப் பதிலாக வேறு தமிழ்ச் சொற்கள் பயன் படுத்தப்படுவதும் குறிப்பிடத் தகுந்தது இதற்கும் நாம் சில காரணங்களைக் கற்பிக்கலாம்

முன்னர் உள்ள சொல்லிலிருந்து அதனோடு பொருள் தொடர்பு உடைய வேறு சொற்களை உண்டாக்க முடியாத போது அசசொல்லை நீக்கி வேறு சொல்லைப் பயன்படுத்துகிறார்கள் எடுத்துக்காட்டாக

Library - ஐ குறிக்க நூல் நிலையம் என்ற சொல்லே பெருவழக்காக உள்ளது. இந்தச் சொல்லிலிருந்து Librarian, Library science ஆகிய சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை உண்டாக்குவது சற்று கடினம். எனவே இப்போது 'நூல் நிலையம்' என்பதற்குப் பதிலாக 'நூலகம்' என்ற சொல் பயிற்சிக்கு வந்துள்ளது இதிலிருந்து நூலகர் 'Librarian' நூலக இயல் 'Library science' ஆகிய சொற்களை எளிதில் படைத்துக் கொள்ள முடியும் என்பதால்தான்

மற்றொரு காரணம் ஒரு சொல்லிருந்து தொடர்பான பொருளைக் குறிக்கும் சொற்களை உண்டாக்கக்கூடிய வரையில் ஒரே முறையைப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கம் ஆகும் ஏறக்குறைய மூன்று ஆண்டுகளுக்கு முன் வரையில் சாலைகளில் 'Travellers bunglow' என்பது பயணிகள் விடுதி என்று குறிக்கப்பட்டு வந்தது. இப்போது பயணர் விடுதி ஆகிவிட்டதைப் பலரும் கவனித்திருக்கலாம் இதற்குக் காரணம் மருத்துவம் - மருத்துவர், வீரம்-வீரர் என்பது போன்றே பயணம் என்ற சொல்லிலிருந்து உண்டாக்கப்படும் சொல்லும் பயணர் என்று இருப்பது எளிதாக அமையும் என்பதே ஆகும் இவ்வாறே 'Science' என்பதைப் பெரும்பாலும் 'இயல்' என்று குறிக்கவேண்டும், என்பது கருதி இன்று பல புதிய சொற்கள் அமைக்கப்பட்டு வருகின்றன விலங்குநூல் - விங்கியல், மொழிநூல் - மொழிஇயல், உள நூல் - உளவியல் என்ற மாற்றமும் இந்தவுண்மையை வலியுறுத்தும்.

மூலச் சொல்லின் சரியான பொருளையே உருவாக்கப் பட்ட சொல்லும் குறிக்கவேண்டும் என்று கருதுவதும் சொல் மாற்றத்திற்கு இன்னொரு காரணம் ஆகும் 'Police station' என்பது முதலில் காவலர் நிலையம் என்று தமிழாக்கப்பட்டது இப்போது காவல் நிலையம் என்று ஆக்கப்பட்டுள்ளது ஏனெனில் 'Police' என்ற ஆங்கிலச் சொல்லின் முதற்பொருள் காவல் துறையையே குறிக்கும். துணைநிலையில்தான் காவலரைக் (Police men) குறிக்கும் இதை உணர்ந்ததால் காவலர் நிலையம் என்பது காவல் நிலையம் என்று மாற்றப்பட்டது விஞ்ஞானக் கலைச்சொற்களிலும் இம்முறையால் பல சொற்கள் மாற்றப்பட்டுள்ளன ஜலவாயு (Hydrogen) என்பது நீர்க்காற்று என்று தமிழ்ச் சொல்லால் மாற்றப்பட்ட பின்னரும் நீரகம் என்று குறிப்பிடுவதற்குக் காரணம் அஜன் என்பதன் சரியான பொருள் நீரை உண்டாக்கும் சக்தியை உடையது என்பதேயாகும்

சில சொற்களைச் சுருக்கமாகச் சொல்லும் முறையும் உள்நிலை மாற்றத்தின் விளைவு எனலாம் செயலாளர் - செயலர், பொருளாளர்- பொருளர் என்பது இந்த வகையைச் சார்ந்தவை

இவ்வாறு தமிழில் இன்று புதுமையாக்கத்தால் மொழியில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன அவற்றை ஒழுங்குபடுத்த வேண்டும். மொழியைச் சற்று எளிமைப் படுத்த வேண்டும் தமிழ் மொழியியல் அறிஞர்கள் இன்றைய எழுத்துத் தமிழில் கருத்து செலுத்த வேண்டும். மொழிபற்றிய பல சிக்கல்களை மொழியியலாரும் கல்வியாளரும் ஆட்சித் துறையினரும் விஞ்ஞான, தொழில்நுட்ப அறிஞர்களும் ஒன்றுகூடி ஆராய மொழித் திட்டக்குழு அமைக்க வேண்டியது இன்றியமையாததாகும்

தமிழகத்தில் இன்றைய மொழி பற்றிய கருத்துகள் உருவானதற்குக் காரணமாக சமூக - பண்பாட்டு - வரலாற்றுக் கூறுகளை இனிக் காண்போம்

## சமூக - பண்பாட்டு -வரலாற்றுக் கூறுகள்

தமிழ்மொழியில் சமூக பண்பாட்டு வரலாற்றுச் சூழ்நிலை பற்றி ஹார்டுகிரேவ், இர்ஷ்சிக், தாஸ்குப்தா, சீனிவாஸ் போன்ற சமூகஇயல் ஆராய்ச்சியாளர்களும் ஆஷர், ஷிப்மென் போன்ற மொழியியல் அறிஞர்களும் விரிவாக ஆராய்ந்துள்ளார்கள் அவர்களின் கருத்தைச் சுருக்கமாக விளக்குவோம்

இந்திய சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் வடமொழிச் செல்வாக்கு (Sanskritization), மேலைநாட்டுச் செல்வாக்கு (Westernization) என்று இரண்டு பெரும் காரணத்தால் ஏற்பட்டவை என்பார் சீனிவாஸ் இந்த வுண்மை தமிழ்ச் சமூகத்துக்கும் பொருந்தும்

கிட்டதட்ட கிபி மூன்றாம் நூற்றாண்டிலிருந்து வடமொழிச் செல்வாக்கு மிகுதிப்படத் துவங்கியது எனலாம் இடைக்காலத்தில், அதுவும் சிறப்பாக பிற்கால சோழர், பாண்டியர், நாயக்கர் காலங்களில் வடமொழியைப் படித்த பிராமணரின் செல்வாக்கு அரசியல் நிலையிலும் வாழ்க்கையின் பிறதுறையிலும் மிகுதியாய் இருந்தது அவ்வாறே, தமிழகத்தில் மேலை நாட்டார் வந்து ஆட்சி செய்யத் தொடங்கியபோது பிராமணர்கள் ஆங்கில மொழியைக் கற்று அரசாங்கப் பதவிகளில் அமர்ந்தார்கள் அதனால, மேலைநாட்டுச்

செல்வாக்கு காலத்திலும் பிராமணர் செல்வாக்குடன் இருந்தார்கள். பெரும்பான்மையினரான பிராமணரல்லாதார் எனப்பட்டோர் சமூக நிலையிலும் கல்விநிலையிலும் பிற்பட்டோராக கருதப்பட்டார்கள். எனவே பிற்பட்டோர் நல இயக்கம் என்று தென்னிந்தியாவில் தோன்றிற்று என்கிறார் சீனிவாஸ். எனவே சமூக பண்பாட்டு வேறுபாடு காரணமாக எழுந்த இயக்கம் ஆரியர்-திராவிடர் போராட்டமாகக் கற்பிக்கப் பட்டது பிராமணர்கள் ஆரியராகவும் ஏனையோர் திராவிடராகவும் கருதப்பட்டு திராவிடர் • தாழ்ந்த நிலைக்குக் காரணம் ஆரியர் சூழ்ச்சி என்று வரலாற்று நிலையிலும் விளக்க ஆரம்பித்தார்கள்

இந்த நிலையில் இலக்கிய - பண்பாட்டில் மறுமலர்ச்சி உண்டாயிற்று கால்டுவெல், போப் போன்ற மேலை நாட்டு ஆராய்ச்சியாளர்களும், சுந்தரம்பிள்ளை, பொன்னம் பலம்பிள்ளை போன்ற நம்நாட்டு அறிஞர் பெருமக்களும் தமிழின் தொன்மை, தனித்தன்மை ஆகியவற்றை எடுத்துக்கூற ஆரம்பித்தார்கள் அதை மெய்ப்பிக்கும் வண்ணம், சொல் அளவில் மிகக் குறைந்த பிறமொழி செல்வாக்கு உடைய, அதே சமயத்தில் பொருள் நிலையில் தனித்தன்மை வாய்ந்த சங்க இலக்கியங்கள் எனப்படும் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, திருக்குறள் போன்ற இலக்கிய நூல்கள் வெளிக் கொணரப்பட்டன. அவை சிறந்த இலக்கிப் படைப்பாகவும் சமயச் சார்பற்றதாகவும் இருந்தது மறுமலர்ச்சிக்குப் பெரிதும் உதவின

மறைமலையடிகள் தனித்தமிழ் இயக்கத்தைத் தொடங்கி, தமிழ் தனித்தியங்கக்கூடிய தன்மையது என்ற கருத்தையும் பரப்பினார் எனவே, மொழியைப் பொறுத்த வரையில் வடமொழி எதிர்ப்புணர்ச்சியும் தோன்றியது

இந்த நிலையில் நாடு விடுதலையடைந்தது மொழிவழி மாநிலம் அமைக்கப்பட்டது எனவே ஒவ்வொரு மாநிலத்திலும் அந்த மாநில மொழி ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவும் சிறப்பிடம் பெற்றது அரசியலிலும் மாநில உணர்ச்சி மிகுந்தது எனவே நாடெங்கும் மாநில மொழி உணர்ச்சி மிகுந்தது தமிழகத்தில் இந்தி எதிர்ப்பு வலுத்தது

இன்றைய தமிழகத்தில் மொழி பற்றிய சரியான, விஞ்ஞான முறையிலான கருத்துகள் பரவவில்லை எனவே, மொழி வளர்ச்சியில் திட்டவட்டமான கொள்கைகளும் உருவாகவில்லை இந்த நிலை நீடித்தால் தமிழின் எதிர்கால ஆக்கம் ஓரளவு பாதிக்கப்படும் எனவே, மேலே குறிப்பிட்டதுபோல மொழியியல் அறிஞர்களும் விஞ்ஞான தொழில்துறை அறிஞர்களும் ஒன்றுகூடி, தமிழ்மொழி வளர்ச்சி பற்றிய கொள்கைகளை உருவாக்கி நடைமுறையில் செயல்படும்படி உழைக்க வேண்டும்

## இந்தக் கட்டுரை குறித்து நா. வானமாமலை கருத்து:

1 இந்தக் கட்டுரை ஆராய்ச்சி (மலர்4, இதழ் 1-13) அக்டோபர், 1973 இல் (39 - 47) வெளிவந்தது

2. மொழி வளர்ச்சியில் புதுமையாக்கம் பற்றிய கட்டுரை அறிவுவளர்ச்சியின் காரணமாக, அதனை வெளியிடும் மொழியில் ஏற்படும் புதுமையான வெளிப்பாடுகளை மொழியியல் கண்ணோட்டத்தில் வரையறுத்துக்காட்ட முயலுகிறது. தமிழ்மொழியைப் பொறுத்தமட்டிலும் கடந்த 70 ஆண்டுகளாகப் புதிய விஞ்ஞான அறிவின் வாகனமாக வளர்ச்சிபெற்று வருகிறது மொழியியல் ஆய்வுகள் வளராத காலத்திலிருந்தே இதழ்களும், நூல்களும் புதியபுதிய சொற்கள், சொற்றொடர்களை ஆக்கிப் பயன்படுத்தி வருகின்றன பல புதிய சொற்கள் கருத்துக் குழப்பங்களை விளைவித்த போதிலும் முன்னேற்றம் தடைப்படவில்லை புதிய புதிய அறிவுத் துறைகளில் அறிவு மக்களிடையே பரவும்பொழுது அவற்றை வெளியிடும் அளவுக்கு மொழி தன்னைத் தகுதியாக்கிக் கொள்ளவேண்டும் உரையாடலில் ஏற்படும் மொழி - சொல் வளர்ச்சியைவிட, அறிவியல் துறைகளில் வளர்ச்சியின் விளைவுக்கேற்றபடி புதுமையாக்கம் நிகழ வேண்டியது அவசியம் பண்டைய காலச் சொற் களஞ்சியம் புதிய புதிய அறிவுத்துறைகளான விண் அறிவியல், இயற்பியல், ரசாயனம், உயிரியல் கட்டுமான அறிவியல் போன்ற வளர்ச்சி பெற்றுவரும் விஞ்ஞானக் கருத்துக்களை வெளியிட சிறிதும் தகுதியறறவை

எனவே நமது மொழி இயலாரும், புதிய அறிவியல் துறை விஞ்ஞானிகளும், புதிய சொல்லாக்க முறைகளைக் கண்டுபிடித்தல் அவசியம்.

இலக்கியம், பண்பாடு, கலை முதலியவற்றைவிட புதுமையாக்கப் பிரச்சனை அறிவியல் கருத்துக்களிலேயே தீவிரமாக உள்ளது. தற்போது தமிழில் உள்ள அறிவியல் சொற்களஞ்சியம், சொற்றொடர் முறை, கிளாவியாக்க முறைகள் ஒளிவேகத்தில் வளர்ந்துவரும் அறிவியல் கருத்துக்களை வெளியிடப் போதுமானவையல்ல பழமைக்குத் திரும்பும் முறையில் இப்பிரச்சனையைத் தீர்க்க இயலாது பிற மொழிகள், நமது மொழியைப் போல வளர்ச்சிபெற்றிராத மொழிகள் 50 ஆண்டுகளில் ,எப்படி விஞ்ஞான வெளியீட்டு மொழிகளாகியுள்ளன அவற்றின் புதுமை முறைகள் யாவை என்பதை அறிந்து, நாமும் நமது மொழிக்கேற்ற புதுமை யாக்கமுறைகளை விரைவில் உருவாக்கிக் கொள்ளவேண்டும். செ வை சண்முகம் நிலைமையை ஆராய்ந்து சில பரிகாரங்கள் கூறியுள்ளார். இது இன்னும் பரவலாகவும் (Width) ஆழமாகவும் (Depth) ஆராயப்படுதல் வேண்டும் அண்ணாமலை மொழியியலாளர்கள் இப்பிரச்சனையை ஆராய்வார்கள் என்று நம்புகின்றேன்.

# 2. கலைச்சொல்லாக்க நெறிமுறைகள்: ஒரு வரலாற்று அளவீடு

மனிதன் உலகத்துப் பொருள்களைக் குறிக்க எப்படிச் சொற்களைக் கையாளுகிறான் என்பதைச் சரியாக அறிந்துகொள்ள முடியவில்லை ஆனாலும், மனிதன் புதிய பொருளைப் பார்த்தாலோ படைத்தாலோ அதற்குரிய சொற்களை ஆக்கிக் கொள்ளும் திறன் படைத்தவன் என்பதை அறிய முடிகிறது இதைச் சொல்லாக்கம் என்று கூறலாம் இந்தத் திறன் படித்தவர், படிக்காதவர் ஆகிய எல்லோருக்கும் உண்டு.

கலைச் சொல்லை,

> ஒரு கூட்டத்தார் அல்லது ஒரு சாஸ்திரக்காரரர் விசேஷார்த்தம் தோன்றும்படி உடன்பட்டு வழங்கும் பொதுவழக்கம் இல்லாத சொல்

என்று பாரதியார் அஸ்திவாரக்காரியம் என்ற கட்டுரையில் விளக்கியுள்ளார் எனவே கலைச்சொல் என்பது அறிவுத் துறைக்காகப் படித்தவர்கள் படைத்துக் கொள்வதைக் குறிக்கும்

கலைச் சொல்லாக்கம் ஒரு மொழியில் நடைபெற்றால் அந்த மொழியில் அறிவுத்துறை வளர்ந்து வருகிறது என்று பொருள் பொதுவாக, அறிவுத்துறை வளர்ச்சி நேரடியாக அந்தச் சமூகத்தாரிடையே அவர்கள் தாய்மொழியிலே நடைபெறலாம், அல்லது இன்னொரு சமூகத்தாரிடையே இன்னொரு மொழியில் ஏற்பட்ட வளர்ச்சியின் தாக்கத்தாலும் நடைபெறலாம் முன்னதை அகநிலை வளர்ச்சி என்றும், பின்னதைப் புறநிலை வளர்ச்சி என்றும் அழைக்கலாம் மானிட இயலார் புறநிலை வளர்ச்சியை அதன் தாக்கத்தின் தன்மைக்கு ஏற்ப இரண்டாகப் பகுத்துப் பேசுகிறார்கள் ஒன்று, தொடர்பு ஏற்படும் பிற சமூகத்தின் பழக்க வழக்கங்களையோ, பிறவற்றையோ அப்படியே ஏற்றுக் கொள்வது புறப்புற வளர்ச்சி அப்படி இல்லாமல் தன்னுடைய பண்பாட்டுக்கும் சமூகச்

சூழல்களுக்கும் ஏற்ப மாற்றி ஏற்றுக் கொள்வது அகப்புற வளர்ச்சி. இதை மானிட இயலார் தூண்டிய விரவு (Stimulus diffusion) என்று குறிப்பார்கள் (Hymes, 1974: 4). கலைச் சொல்லாக்கத்திலும் இந்த வேறுபாடு காணப்படுகிறது. பிறமொழிச் சொற்களை, அப்படியே கடனாள்வது புறப்புற வளர்ச்சி; அப்படி இல்லாமல் பொருள் அடிப்படையில் புதுச்சொல்லாக்கம் செய்வது அகப்புற வளர்ச்சி

அகநிலை வளர்ச்சியில் கலைச்சொல்லாக்கம் செய்யும்போது சொல்லாக்கம் பற்றிய பிரச்சினை இருக்காது பின்னால் தரப்படுத்தும்போது கலைச் சொல்லாக்க நெறிமுறை தெளிவுபடும் புறநிலையில் கலைச்சொல்லாக்கம் ஏற்படும்போது பலரும் தனித்தனியே ஈடுபடுவதால் ஒன்றுக்கு மேற்பட்ட கலைச்சொற்கள் தோன்றும்; மேலும் கலைச் சொற்களின் தேவையும் புதிய கருத்துகளை வெளிப்படுத்த வேண்டும் என்ற உணர்வும் கூடப் பரவலாகக் காணப்படும். எனவே தரப்பாடு பற்றிய சிந்தனையும் தோன்றும்.

தமிழில் கலைச் சொல்லாக்கம் இன்று புறவளர்ச்சியால் ஏற்பட்டு வருகிறது ஆனாலும் முற்காலத்திலும் தமிழில் சில அறிவுத்துறைகள் வளர்ந்திருப்பதால் அவை பற்றிய விவரங்களையும், அங்கு புதைந்துள்ள கலைச் சொல்லாக்க நெறிமுறைகளையும் தெரிந்துகொண்டால் இன்றைய பிரச்சினைக்குத் தீர்வு காண, சில தெளிவு கிடைக்கும்

## தமிழில் அறிவுத்துறை வளர்ச்சி வரலாறு

இந்தியாவிலேயே முதன்முதலில் செப்பம் அடைந்த அறிவுத்துறை மொழியில் அது வடமொழியில் வியாகரணம் (பகுப்பாய்வு) (Hymes, 1974) என்றும் தமிழில் இலக்கணம் என்றும் அழைக்கப்பட்டது.

## வரலாறு

தமிழிலும் சங்ககாலத்தில் எழுந்த தொல்காப்பியம் மொழி அமைப்பை விளக்கும் அறிவியல் நூலாக மட்டும் இல்லாமல் இலக்கியத்தின் பண்புகளை விளக்கும் இலக்கிய இயல் நூலாகவும் அமைந்துள்ளது எல்லோருக்கும் தெரிந்ததே மேலும் பொருளதிகார மரபியலில் உலகத்து உயிர்களை உணர்வு அடிப்படையில் பிரிக்கும்

பாகுபாட்டு ஆய்வின் (Taxonomy) ஆரம்ப முயற்சியும் இன்னும் சில பாகுபாடுகளும் காணப்படுகின்றன எனவே தொல்காப்பியத்தைத் 'தமிழின் முதல் அறிவியல் நூல்' என்று கூறுவது தவறு ஆகாது

மணிமேகலையில் இரண்டு காதைகளில் (27,29) தருக்கவியல் செய்திகள் காணப்படுகின்றன எனவே வீரகத்தி (1985 6),

> மணிமேகலை இந்தியத் தருக்கவியலின் முதலாவது தமிழ்நூல் என மதிப்பிடக் கூடியது. வடமொழித் தொடர்பால் தமிழ் மொழியில் ஏற்பட்ட முதலாவது புதுத்துறை தருக்கவியல் ஆகும்

என்று குறிப்பிட்டுள்ளார் அறிவியல் நிலையில் முதல் மொழிபெயர்ப்பு நூல் வடமொழியில் எழுதப்பட்ட தண்டியலங்காரத்தின் தமிழாக்கமே '

> 'அலங்காரங்கள் தண்டி சொன்ன கரைமலி நூலின்படியே உரைப்பன்'

என்று வீரசோழியம் (சூ 141-3,4) கூறி, அலங்காரப் படலம் என்று தமிழ்ப்படுத்தியுள்ளது அதே வடமொழி நூல் பன்னிரண்டாம் நூற்றாண்டில தண்டியலங்காரம் என்று தனி நூலாகவே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளி வந்துள்ளது

சங்க இலக்கியத்தில் சிற்ப நூல், இசை நூல், சமையல் நூல், குதிரை நூல், அறநூல், களவுநூல் ஆகிய நூல்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன (சண்முகம், 1989 74-79) பல்லவர்கால இலக்கியங்களில் கோழிநூல் (புறப்பொருள் வெண்பாமாலை,348) கூவநூல் (கிணறு தோண்டுவது பற்றியது திவாகரம் 216) பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன பிற்காலத்தில் காணப்படும் பல சுவடிகளை அடியொற்றி சுப்பிரமணியன் (1980) கூவநூல் என்ற தனிநூலே வெளியிட்டுள்ளார் சமையல்நூல், (2735) பால்சிகிச்சை (குழந்தை மருத்துவம்) சீவகசிந்தாமணி 364) ஆகியவை பற்றிய குறிப்புகள் இருக்கின்றன கூத்தநூல் பற்றி இறையனார் களவிய உரை (சூ 40) குறிப்பிட்டுள்ளது

இந்தக் காலக் கட்டத்தில் மருத்துவம், சோதிடம் போன்ற நூல்களும் வெளிவந்துள்ளன ஐரோப்பியர வருகைக்குப் பிறகு தமிழில் வெளிவந்துள்ள நூல்கள் பற்றியும் கலைச்சொல்லாக்கம்

பற்றியும் சுந்தரம் (1983, 1986) எழுதிய கட்டுரைகள் வரலாற்று நோக்கில் சிறப்பு வாய்ந்தவை.

## கலைச் சொல்லாக்க நெறிமுறை

தமிழுக்கு அறிவியல் புதியது அல்ல என்னும்போது கலைச் சொல்லாக்கம் பற்றிய சிந்தனைகள் ஏதாவது இருக்கிறதா? கலைச்சொல்லாக்கம் எப்படி நடைபெற்றது? என்று, பார்ப்பது நல்லது.

தொல்காப்பியம் 'முதல், வழி என உரைபடுநூல் இரண்டு வகைப்படும்' என்றும், (மரபியல் 95) நூல்களில் மொழிபெயர்ப்பு நூல் உள்பட நான்கு வகை உண்டு என்றும் (மரபியல், 98,99) கூறிய கருத்துகளின் சமூக இயல் அர்த்தம் தமிழகத்தில் உணரப்படவில்லை என்றே நினைக்கவேண்டியிருக்கிறது ஏனெனில் மொழிக் கொள்கை, மொழி உணர்வு பற்றிய இன்றைய பிரச்சனைகள் தொல்காப்பியத்தைச் சரியாக உணர்ந்திருந்தால் பெரிதுபடுத்தப்படமாட்டாது என்றே நினைக்க வேண்டி யிருக்கிறது

தொல்காப்பியர் காலத்திலேயே தமிழர்கள் பிற சமூகம் வளர்த்த அறிவியல் துறைகளை அவர்களின் மொழியில் படித்து தங்கள் அறிவை வளர்த்துக் கொண்டதோடு, அந்த மொழி தெரியாத தமிழர்கள் அந்த அறிவுத் துறையில் அறிவு பெற அந்த மொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்க வேண்டும் என்பதே தொல்காப்பியர் கூறிய 'மொழிபெயர்ப்பு நூல்' என்பதன் பொருள் அதாவது தொல்காப்பியர் காலத்தில் தமிழும் இன்னொரு மொழியும் தெரிந்த இருமொழி அறிஞர்கள் இருந்தார்கள்; அவர்கள் தமிழில் இல்லாத அறிவுத் துறைகள் பிறமொழியில் இருப்பதை ஒப்புக்கொண்டு தமிழ் மொழியில் அந்தக் கருத்துகளை வெளிப்படுத்துவதன் மூலம் தமிழர்களை அந்தத் துறையில் அறிவு பெறச் செய்து தமிழ் மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு உதவியிருக்க வேண்டும் இந்த முறையிலேயே தொல்காப்பியரும் அந்தக்கால மக்களின் தேவையை உணர்ந்து பிறமொழியில் உள்ள கருத்துகளைத் தமிழர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்கு 'மொழி பெயர்ப்பு' நூல்களுக்கு இலக்கண அங்கீகாரம் கொடுத்துள்ளார் எனலாம்

இதற்கு ஏற்பவே சொல்லதிகாரத்திலும் 'செய்யுள் ஈட்டச் சொற்களில்' இலக்கியத்தில் பயன்படுத்தும் சொற்களில் வட

சொற்களையும் ஒன்றாகக் கூறியதன் மூலம் (எச்சம் 1) பிறமொழிக் கருத்துகளோடு பிறமொழிச் சொற்களையும் தமிழ் இலக்கியத்தில் கையாள அனுமதி அளித்துள்ளார் எனலாம். வடசொல் என்பது கடனாட்சி (Borrowing) அல்லது ஒலிபெயர்ப்பு (Transliteration) என்பது தான் மேலும் அந்தச் சொற்களைத் தழுவும் முறையையும் - ஒலிபெயர்க்கும் முறையையும் சுருக்கமாகக் கூறியுள்ளார் துரதிருஷ்டவசமாக, இந்தச் சூத்திரம் செம்மையாக்க வாதிகளாலும், அறிவியல் தமிழறிஞர்களாலும் எல்லாக்காலத்துக்கும் எல்லா மொழிக்கும் பொருந்துவதாகக் கொள்ளப்பட்டுள்ளது தொல்காப்பியருடைய வேறுபல சூத்திரங்களைப் போலவே இதுவும் அவர் கால மொழியை மட்டும் பிரதிபலிப்பது எனவே மொழியில் ஏற்படும் மாற்றம் பிறமொழிகளை ஒலிபெயர்க்கும் முறையிலும் காலந்தோறும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை மறுக்க முடியாது.

தொல்காப்பியர் செய்யுள் ஈட்டச்சொற்களில் 'திரிசொல்' என்ற ஒன்றையும் குறிப்பிட்டுள்ளார் அவர் திரிசொல் 'ஒரு பொருள் குறித்த பல சொல்லாகவும் பலபொருள் குறித்த ஒரு சொல்லாகவும் வரும்' என்று மட்டுமே (எச்சவியல் - 3) விளக்கியுள்ளார் இதற்கு உரையாசிரியர்கள் கூறிய 'செய்யுளில் ஓசை இன்பம் பெறுவதற்காகத் திரித்துக் கொள்ளப்பட்டது' என்ற விளக்கம் பொருந்தாது என்பது முன்னரே விளக்கப்பட்டுள்ளது (சண்முகம், 1984 75 - 82) சேனாவரையர் திரிசொல்லைக் ' கட்டிய வழக்கு' என்று சிலர் கொள்வதாகக் குறிப்பிட்டதும், கா மீனாட்சி சுந்தரம் (1973 . 54) 'அறிஞர்கள் அமைத்துக் கொண்ட சிறப்புச் சொற்களும் திரிசொல்லும் ஒருங்கு வைத்து எண்ணத் தகுந்தவை' என்று கூறுவதும் (விளக்கத்துக்குச் சண்முகம், 1984.82-5 பார்க்கவும்) திரிசொற்களைக் கலைச் சொற்களாகக் கருதலாம் போலத் தோன்றுகிறது அப்படியானால் ஒருபொருள் குறித்த பலசொல் என்பது துறைவழக்கை (Register) குறிப்பதாகக் கொள்ளலாம் (தொல்காப்பியருக்குத் துறைவழக்கு என்ற கருத்து உண்டு என்பதற்கு வேறுபல உதாரணங்கள் நூலில் உள்ளன, மூன்றாவது கட்டுரை) ஒரே பொருள் ஒவ்வொரு துறையிலும் வெவவேறு பெயர் பெறுவதைக் குறிப்பதே துறைவழக்கு சாதாரண உப்பை சோடியம் குளோரைடு என்று வேதியியலில் கூறுவது; ஒவ்வொரு மரப்பெயரகளும தாவர இயலில் இன்னொரு பெயரால் அழைக்கப்படுவது, தமிழிலும்

கணவன் மனைவி சேர்ந்து நடத்தும் இல்வாழ்க்கை என்று உலக வழக்கில் குறிப்பிடப்படுவது அக இலக்கியத்தில் கற்பு என்றும்; கணவன் - மனைவி பிரிந்து இருப்பதைப் பிரிவு என்று உலக வழக்கில் அழைக்கப்படுவது அக இலக்கியத்தில் பாலை என்றும் குறிப்பிடப்படுவது; ஆகியவை ஒரு பொருள் துறைதோறும் வேறுவேறு சொல்லால் குறிக்கப்படுவதைக் காட்டும் பலபொருள் ஒருசொல் என்பது கலைச் சொல்லாக்கத்தில் ஒரு முறையே அதாவது வழக்கிலுள்ள சொற்களுக்கும் புதிய பொருள்களைக் கொடுக்கும் பொருள் விரிவைக் (மெய் என்பது வழக்கில் உடலைக் குறிக்கும்; இலக்கணத்தில் மெய்யெழுத்துகளைக் குறிக்கும். புணர்ச்சி என்பது நெருங்கிப் பழகுவது அல்லது உடல் உறவு; இலக்கணத்தில் இரண்டு சொற்கள் சேருவது) குறிப்பதாகக் கொள்ளலாம் நன்னூலாரும் திரிசொல்லுக்கு 'அரிது (உ)ணர் ' பொருள்' (சூ 2723) என்ற விளக்கத்தைச் சேர்த்ததன் மூலம் அதன் பொருளை எல்லோராலும் சுலபமாகத் தெரிந்து கொள்ள முடியாது என்று கொண்டால் திரிசொல்லின் இலக்கணம் கலைச்சொல்லின் பொது இலக்கணத்தோடு ஒத்துப்போவதைப் பார்க்கலாம். நன்னூல் உரையாசிரியர்களும் 'கற்றார் உணரும் பொருளால் வருவன' என்று விளக்கியுள்ளது நம்முடைய ஊகத்தை உறுதிப்படுத்துவதாக உள்ளது

சுருங்கச் சொன்னால், கலைச் சொல்லாக்க ஆய்வு நோக்கில் தொல்காப்பியம் கடனாட்சி, பொருள் விரிவு, ஒலிபெயர்ப்புமுறை ஆகியவைகளைக் குறிப்பாக உணர்த்தி யுள்ளதாகக் கொள்ளலாம்.

## கலைச்சொற்கள்

இங்குத் தொல்காப்பியம், மணிமேகலை ஆகிய இரண்டு நூல்களில் காணப்படும் கலைச்சொற்கள் ஆக்கப்பட்ட நெறிமுறைகள் கோடிட்டுக் காட்டப்படுகின்றன.

மாத்திரை, காலம், சூத்திரம் போன்ற பிறமொழிச் சொற்கள் தொல்காப்பியத்தில் கலைச் சொற்களாகக் கடனாளப்பட்டுள்ளன எனவே, அவை கடன் சொற்கள் (Loan words)- அதாவது வடிவமும் பொருளும் பிறமொழியிலிருந்து கடனாளப்பட்டவை ஆகும். ஆனாலும் அங்குக் கையாண்ட நெறிமுறை சுட்டிக்காட்டத் தகுந்தது

| தமிழ்ச் சொல் | பொதுப் பொருள் | கலைச்சொல் பொருள் | வட சொல் கலைச் சொல் பொருளில் |
|---|---|---|---|
| அளவு | | எழுத்து உச்சரிக்கும் அளவு (எழுத்து 3,4) | மாத்திரை (எழுத்து 7, செய்யுள், 1) |
| பொழுது | நேரம் | வினைச்சொல் குறிப்பிடும் மூன்று வகை நேரம் | காலம் (சொல். வினை 1) |

1அ அந்தப் பொருளைக் குறிக்கும் தமிழ்ச் சொற்கள் இருந்தும் கலைச் சொல்லுக்கு வடமொழியைப் பயன்படுத்துவது இதன் மூலம் தமிழ்ச் சொல் பொருள் குறுக்கம் அடையாமல் போற்றப்பட்டுள்ளது ஆனாலும் தமிழ்ச்சொல்லும் கலைச்சொல்லாக ஆங்காங்கே பயன்படுத்தப்பட்டுள்ளது

1ஆ தமிழில் தொடர்மொழியாக இருப்பனவற்றிற்குப் பதிலாகத் தனிமொழியாக இருக்கும் வடசொல்லைப் பயன்படுத்துவது இங்கும் தமிழ் தொடரும் வடசொல்லும் தொல்காப்பியத்தில காணப்படுகின்றன

| தமிழ் | வடமொழி |
|---|---|
| நூற்பா | சூத்திரம் செய்யுள் (1612). |

உலக வழக்கிலுள்ள சொற்களை கலைச் சொல்லாக்குதல் இது பொருள் விரிவு' என்ற வகையில் அடங்கும்

| சொல் | பொதுப் பொருள் | கலைச்சொற் பொருள் |
|---|---|---|
| உயிர் | (மூச்சு) | உயிரெழுத்து (Vowel) |
| மயக்கம் | சேர்க்கை | இரண்டு எழுத்துகளின் சேர்க்கை (Cluster) |
| தொகை | மறைவது | இரண்டு சொற்கள் ஒருசொல் போலப் பயன்படுதல் (Compound) |
| பெயர் | Name | பெயர்ச்சொல் (Noun) |
| வினை | செயல் | வினைச்சொல் (Verb) |
| தொடை | பாட்டு | செய்யுள் உறுப்பு |

தொடர் மொழிகளைக் குறிப்பாக வினைகளைத் தொழிற் பெயராக்கிக் கலைச்சொல் ஆக்குதல்:

| தொடர்வினை | கலைச்சொல் | பொருள் |
|---|---|---|
| எதிர்மறு(த்தல்) | எதிர்மறை | Negative |
| முன்னில் (முன்னிற்றல்) | முன்னிலை | Second Person |

தொடர்களில் தலைமைச் சொல்லை நீக்கிவிடுதல் :

வேற்றுமை அல்வழி - அல்வழி (Non-Case)

உயரல் திணை - அஃறிணை (Neuter or Non-human)

புதிய தொகைச் சொற்களைப் படைத்தல்:

அ) ஆகுபெயர்

ஆ) உயிர்மெய்

இ) திசைச் சொல் (கிளைமொழிச்சொல்). இங்கு 'திசை' என்பது வடமொழிச்சொல். இது கடன்கலவை (Loan blend) ஆகும்.

*1.* இங்கு 'திசை' என்ற வடசொல்; (Direction) என்பது பொதுப்பொருள்) பொருள் விரிவுபடுத்தியே 'வட்டாரக் கிளை மொழி' என்ற கலைச்சொல் பொருளில் கையாளப்பட்டுள்ளது எழுத்ததிகாரத்தில் (குற்றியல். 26) பொதுப்பொருளிலும் சொல்லதிகாரத்தில் கலைச் சொல் பொருளிலும் (எச்சம். 4) அது வந்துள்ளது

புதிய விகுதிகளைச் சேர்த்து கலைச்சொல்லாக்குதல்.

- - இல் . நெடில் (நெடு - இல்)
குறில் (குறு - இல்)

- - தம் . ஆய்தம் (ஆய் - தம்)

இங்கு இரண்டு செய்திகள் அறியத்தகுந்தவை அ) தொல்காப்பியரே பொதுப் பொருளைக் குறிக்க 'குறுமை, நெடுமை' (எழுத்து. 501) என்ற சொற்களைக் கையாண்டுள்ளது. எனவே வடிவநோக்கில் பொதுச் சொற்களிலிருந்து கலைச்சொற்கள்

வேறுபட்டு இருப்பதற்குப் புதிய விகுதிகளைச் சேர்ப்பது. ஆ) தம் என்ற விகுதி வரலாறு அது கணி-தம் போன்ற வடமொழிச் சொற்களிலியே வருவது.

தொல்காப்பியம் கலைச்சொல்லாக்கமானது அகநிலை வளர்ச்சியாகப் பொருள்விரிவு போன்று பலவிதமாகச் சொல்லாக்கம் நடைபெற்றதைப் புலப்படுத்துகிறது மணிமேகலையில் கடன்மொழிபெயர்ப்பாகக் கலைச் சொல் லாக்கப்பட்டிருப்பதைக் கந்தசாமி (1978:18) குறிப்பிட்டுள்ளார்.

| வடமொழி | தமிழ் |
|---|---|
| பிரமான் | அளவை |
| அனுமான் | கருதுதல் |
| பூர்வதத் | முதல் |

உண்மையில் இந்தச் சொற்கள் முன்னரே தமிழில் இருப்பதால் 'கடன் பொருள் விரிவு' (Loan extension) என்றே கருத வேண்டும் சாத்தனார் கடனாட்சியாகவும் (Loan word) சிலவற்றை கையாண்டுள்ளார்

அனுமானம் 'கருதுதல்' 27.26

சுவாபம் 'இன்மை' 27.11

பிரத்தியக்கம் 27.38

பாரிசேடம் என்பதை 'மீட்சி ஒழி அறிவு' என்று கூறியிருப்பது கடன் மொழிபெயர்ப்பே (Loan translation) ஆகும்.

ஐரோப்பியர் வருகைக்கு முன்னால் உள்ள அறிவுத் துறைகளில் கலைச் சொல்லாக்கம் எப்படி மேற்கொள்ளப் பட்டது என்பது விரிவான ஆய்வுக்குரியது இங்கு சில உதாரணங்களே தரப்பட்டுள்ளன

## அறிவியல் தமிழ்

இருபதாம் நூற்றாண்டில் அறிவியல் தமிழ் என்பது புறநிலை வளர்ச்சியால் புதிய துறையாக வளர்ந்து வருகிறது அறிவியல்தமிழ்க் கட்டிடத்துக்குச் செங்கல் போன்றவையே கலைச்சொற்கள் ஆரம்ப காலத்தில் - பத்தொன்பதாம் நூற்றாண்டில் அறிவியல் தமிழ் நூல்கள்

எழுதத் துவங்கிய காலத்திலேயே கலைச் சொற்களின் முக்கியத்துவத்தைச் சிலர் உணர்ந்திருந்தார்கள். அறிவியல் தமிழ் நூல்களை முதலில் எழுதிய கிரீன் என்ற மேலைநாட்டார் தன்னுடைய மேற்பார்வையில் வெளிவந்த நூல் ஒன்றில் கலைச் சொற்களின் நெறிமுறைகளையும், தனியே இரண்டு அகராதிகளையும் வெளியிட்டிருப்பதால் அந்த உண்மையை அறியலாம். பாரதியாரும் அது பற்றிக் கருத்து தெரிவித்திருக்கிறார் 'கூடியவரை சாஸ்திர பாஷையை (கலைச்சொல்லை) நிச்சயப்படுத்தி வைத்தால் பிறகு மொழிபெயர்ப்புத் தொடங்குவோர்க்கு அதிக சிரமம் இராது' என்று கூறியதோடு 'இதற்கெல்லாம் முன்னதாகவே பண்டிதர் செய்து வைக்க வேண்டிய அடிப்படைக் காரியம்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார் இந்தக் கருத்து இன்றுவரை நீடித்துள்ளது என்பதை 'அறிவியற் கருத்துகளைத் தமிழில் தருவதில் கலைச்சொற்களே உயிர்நாடியாக விளங்குகின்றன' என்ற இராதா செல்லப்பனின் (198532) வாசகம் காட்டுகிறது அறிவியல் தமிழ் பற்றி வெளிவந்துள்ள பல கட்டுரைகள் கலைச் சொற்களோடு வேறு பலவும் அறிவியல் தமிழாக்கத்துக்கு அவசியம் என உணர்த்தியுள்ளன

> முதலில் தமிழுக்கு வேண்டியது அறிவியல் கலைச் சொற்கள் என்பது எல்லோரும் ஒத்துக் கொண்ட கருத்து. ஆனால் கலைச்சொற்களே அறிவியல் மொழி ஆகிவிடும் என்னும் கருத்து தவறானதாகும். சொல்லே மொழி ஆகாது. எனவே தமிழ் அறிவியல் மொழியாகக் கலைச்சொற்கள் மட்டும் போதாது.

என்ற அண்ணாமலையின் வாசகம் (1986 . 76) இதைக் கொள்கை அளவில் தெளிவுபடுத்துகின்றது. மொழி நடை, உரைப்பாங்கு (Discourse) ஆகியவை பற்றியும் அறிவியல் தமிழில் ஆராய வேண்டும் எப்படி ஆனாலும் கலைச் சொல்லாக்கம் அறிவியல் தமிழில் ஒரு முக்கிய பிரச்சனை என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது

## கலைச்சொல்லாக்க நெறிமுறைகள்

கலைச் சொல்லாக்கத்துக்கு அடிப்படையாக இருப்பது சொல்லாக்க நெறிமுறைகள் அதோடு அந்தச் சொல்லாக் கத்துக்குத் தேவையான சொற்களை எந்த மொழியிலிருந்து அல்லது எந்தெந்த

மொழி களிலிருந்து தேர்ந்தெடுப்பது என்பதை அந்த மொழிச்சமூகத்தின் மொழிக் கொள்கை - உண்மையில்-மொழி உணர்வு வழிகாட்டும்

கலைச் சொல்லாக்கநெறி முறைகள் உலகப் பொதுவானவை எனவே, அவைகளை மொழியியல் தந்துவிடும் ஆனால், மொழி உணர்வு கலைச்சொல்லாக்கம் செய்யப்படும் மொழிக்கு உரியது அறிவியல் த்மிழ் நூல்கள் எழுதிய கிரீன் என்ற வெளிநாட்டார் (இலங்கையில் வாழ்ந்த அமெரிக்கர்) மருத்துவ நூல்களைத் தமிழாக்கம் செய்யும் போது மொழிக் கொள்கையையும் மொழியியல் கொள்கை யையும் வரையறுத்துக் காட்டியுள்ளார் (சுந்தரம், 1986) பாரதியாரும் இந்த இரண்டு உண்மை பற்றியும் கருத்து தெரிவித்துள்ளார் இன்று சொல்லாக்கம் பற்றிப் பல ,கட்டுரைகளும் தனிநூல்களும், வெளிவந்துள்ளன அங்கு சொல்லபபட்ட கருத்துகளைக் - கலைச் சொல்லாக்க நெறிமுறைகளைக் கீழ்க்கண்டபடி பொதுமைப் படுத்தலாம் (வரைபடம் 1)

## மொழிக்கொள்கை.

மொழிக் கொள்கையில் இரண்டு வகை உண்டு ஒன்று இலட்சிய நிலை; மற்றொன்று செயல் நிலை 1) இலட்சிய நிலையில் தான் மொழி உணர்வின் செயல்பாடு முழுநிலையில் இருக்கும், 2) செயல் நிலையில் அன்றைய மொழி வழக்கின் நிலை வெளிப்படும்

கிரீன் கலைச்சொல்லாக்க மொழிக் கொள்கை பற்றி மூன்று கருத்துகளை இலட்சிய முறையிலேயே வெளிப்படுத்தியுள்ளார் அவையாவன.

## வரைபடம் 1


அறிவியல் கருத்து
மொழிக் கொள்கை
உள்நிலை ஆக்கம்
பொருள் விரிவு
மொழிபெயர்ப்பு
புதுசொல்லாக்கம்
கடன்சொல்
ஒலிபெயர்ப்புக் கொள்கை
கலைச் சொற்கள்

(1) 'அச்சொல் தமிழில் உண்டோ என்று பின் சொல்லப்படும் எட்டு விதங்களுள் ஓர் விதப்படி முதற்தேடிப் பார்க்கவும்

(2) பூரணமான சொல் தமிழிலேயே பெற வழுவும்போது பின் காட்டப்படும் பத்து விதங்களுள் ஓர் விதப்படி சமஸ்கிருதத்திற் தேடவும் . . .

(3) தமிழிலாவது சமஸ்கிருதத்திலாது சொல் காணாதபோது பின் சொல்லப்படும் மூன்று விதங்களில் ஓர் விதப்படி இங்கிலீஷ் சொல்லைச் சேர்க்கவும்

இதிலிருந்து அவருடைய மொழிக் கொள்கை - மொழித் தேர்வின் இலட்சிய நிலை தெளிவாகிறது ஆனால் Anatomy, Physiology and Hygiene என்ற நூல் 'அங்காதிபாத சுகரணவாத உற்பாவன் நூல்' என்று மொழி பெயர்த்துள்ளதில் 'நூல்' என்ற ஒரு சொல் மட்டுமே தமிழ் இதற்குக் காரணம் அன்றைய தமிழில் வடசொற்கள் நிறைய பயன்படுத்தப்பட்டதே. அதாவது அன்றைய மொழிநிலை செயல்நிலையை வரையறுத் துள்ளது அந்தக் காலத்தில் மொழித்தூய்மை உணர்வு இல்லாத காரணத்தால் தமிழில் வழக்கிலுள்ள சொற்கள் எல்லாம் தமிழ்ச் சொற்களாகக் கருதியே வடமொழிச் சொற்கள் கையாளப்பட்டிருக்க வேண்டும்

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த பாரதியின் மொழிக் கொள்கை சிறப்பாகக் - கலைச் சொல்லாக்கம் பற்றிய மொழிக் கொள்கை பற்றி நுஃமான் (1984 . 42 -5) விரிவாக ஆராய்ந்துள்ளார் பாரதியும் கிரீனைப் போலவே தமிழ், வடமொழி, ஆங்கிலம், என்ற வரிசையில் சொற்களைத் தேர்ந்தெடுக்கலாம் என்று கூறியுள்ளார் இதில் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியது எந்தெந்த பொருளுக்கு உரிய சொற்களை எந்தெந்த மொழியிலிருந்து கடனாள வேண்டும் என்று பாரதியார் வரையறுத்துக் சுட்டிக் காட்டியதுதான்

> பதார்த்தங்களுக்கு (பொருள்கள் - Physical objects) மட்டுமேயன்றி கிரியை (வினை), அவஸ்தைகளுக்கும் (நிலைமைகளுக்கும்) தமிழ், சமஸ்கிருத மொழிகளையே வழங்குதல் பொருந்தும் . . . ஆனால் குணங்கள், செயல்கள், நிலைமைகள் இவற்றுக்கு இங்கிலிஷ் பதங்களை ஒருபோதும் வழங்கக்கூடாது.

பதார்த்தங்களின் பெயர்கள் மாத்திரமே இங்கிலீஷில் சொல்லலாம், வேறுவகையில் உணர்த்தாவிடில்.

என்பதே பாரதி வாசகம் பிற மொழியிலிருந்து பெயர்ச் சொற்களே கடன்சொற்களாக அதிகம் கையாளப்படுகின்றன என்று மொழியியலாளர்கள் இன்று கண்டுள்ளார்கள் சங்க இலக்கியத்தில் உள்ள வடமொழிச் சொற்களை ஆராய்ந்ததும் இந்த உண்மையை உறுதிப்படுத்துகிறது *(சண்முகம், 1984 . 110)*. எனவே பாரதியின் கருத்து மொழியியலார் கண்ட கருத்தோடு ஒத்துள்ளது. இது பாரதியின் மொழி இயல்பு பற்றிய நுண்புலத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு.

பிராணவாயு, ஜலவாயு என்ற சொற்களையே தமிழ் சொற்களாகக் கருதி பாரதியார் குறிப்பிட்டிருப்பது வழக்கிலுள்ள சொறகளை எல்லாம் தமிழ்ச் சொற்களாகக் கருத வேண்டும் என்ற எண்ணத்தையோ, மொழித் தூய்மை அதிகம் பாராட்டப்படாத தன்மையையோ புலப்படுத்துகிறது

நாற்பது, ஐம்பதுகளில் மொழித் தூய்மை இயக்கம் தீவிரமாக இருந்தபோது கலைச்சொல்லாக்கத்தில் வடமொழிச் சொற்களை நீக்கி விட்டு, தனித்தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது அதனால் தமிழ், ஆங்கிலம் என்ற இரு மொழிக் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதே சமயத்தில் எல்லாக் கலைச் சொற்களும் தமிழ்ச் சொற்களாக இருக்க வேண்டும் என்னும் தமிழ்த் தீவிரவாதிகளும், எல்லாச் சொற்களும் அனைத்துலகச் சொல்லாக இருக்க வேண்டும் என்னும் ஆங்கில தீவிரவாதிகளும் தமிழ் கலைச் சொல்லாக்கக் கட்டுரைகளிலும் நூல்களிலும் காணப்படுகிறார்கள் இரண்டு தீவிரவாதமும் நடைமுறைக்கு ஒவ்வாதவை எனவே, கலைச்சொல் ஆக்கத்தில் இன்றைய நிலையில் இருமொழிக் கொள்கையே ஏற்றுப் போற்றத்தகுந்தது இங்கு தமிழ் என்னும் போது இலக்கியத்திலும் பேச்சிலும் இருக்கும் வடமொழிச் சொற்களையும் சேர்த்துதான் ஏனெனில், பல வடமொழிச் சொற்கள் வடமொழியில் இல்லாத புதிய பொருளைத் தமிழில் குறித்துநின்று நுண்பொருட்பேறு உடையனவாக அமைந்துள்ளன. அவைகளை நீக்கினால் மொழியின் பொருள் வளம் கொஞ்சம் குறையத்தான் செய்யும் மேலும் இலக்கியங்களைக் கற்பதற்கு அந்த சொற்களைத் தமிழ் மாணவன் தெரிந்து கொள்ள வேண்டியிருப்பதால் சுமையாக இருக்காது

இந்த நிலையில் அறிவியல்தமிழ் நூல்களில் இலக்கியவழக்கிலும் பேச்சு வழக்கிலும் காணப்படும் பிறமொழிச் சொற்கள் வரலாற்று நோக்கில் அடையாளம் காட்டப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தகுந்தது. இது மொழித்தீவிரவாதத்தை ஆதரிப்பதாக உள்ளது ஆனால் அந்த ஆசிரியர்கள் மொழித்தீவிரவாதத்தில் உடன்பாடு இல்லாதவர்கள் எப்படியானாலும் அந்த எடுத்துக்காட்டுகள் சில சொற்களைக் கூட ஏற்றுக் கொள்ள தயக்கம் ஏற்படுத்தி அவைகளைத் தனித் தமிழாக்க வேண்டும் என்ற உணர்வைத் தூண்டித் தரப்படுத்தலைத் தள்ளிப் போடுகிறது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். உதாரணமாக கருணாகரன் (1981:103) 'தமிழ் கலைச் சொல்லாக்கத்தில் பிறமொழிக் கூறுகள்' என்று நிதி, இயந்திரம், அனுபவம், அதிகாரம் போன்ற பல சொற்களை எடுத்துக்காட்டி விமர்சனம் செய்யாமல் போயிருந்தாலும் அந்த இயலில் கூறிய வேறு செய்திகள், அவை மாற்றத்துக்கு உரியவை என்ற தோரணையில் அமைந்துள்ளதால் அந்த வடசொற்களை நீக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது மேலே காட்டிய சொற்கள் சங்க இலக்கியத்திலேயே காணப்படுகின்றன நிதி (அகம்:60-14; மதுரைக் காஞ்சி), அதிகாரம் (தொல், மரபு 112,2, சிலம்பு பா59) அனுபவம், அனுபவி, (மணிமேகலை 27-100) இயந்திரம் (எந்திரம் - புறம் 1775, ஐங்குறு 55-1)

இராதா செல்லப்பனும் (1985 .62) இப்படி வடமொழிச் சொற்கள் கலைச் சொற்களாகப் பயன்படுத்துவதைச் சுட்டிக் காட்டிவிட்டு எவ்வித விமர்சனமும் செய்யாமல் போயுள்ளார் அவர் எடுத்துக்காட்டிய சொற்களில் புயம் என்பது சிலப்பதிகார காலத்திலிருந்தும் (சிலம்பு 26.16) சக்தி என்பது பெருங்கதை (சத்தி 6.56) காலத்திலிருந்தும் வழக்கில் இருந்துவருகின்றன இவைகளை வரலாற்று நோக்கில் மட்டுமே வடசொல் என்று குறிப்பிட வேண்டும் தமிழ் கலைச் சொல்லாக்கத்தில் அந்தச் சொல் வழக்கில் இருக்கிறதா, எளிமையாக இருக்கிறதா, ஆகியவையே முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டும் இதைப் புறக்கணித்துவிட்டு, வேண்டாத வரலாற்று உணர்வைத் தூண்டுவது அறிவியல் தமிழாக்கத்தில் தயக்கத்தையே ஏற்படுத்தியுள்ளது உதாரணமாகக் குழந்தைசாமி (1985-70) மாற்றம் இல்லாமல் ஒலி பெயர்ப்பதா' அல்லது புதிய சொல்லை உருவாக்குவதா என்ற கருத்து வேறுபாடுகட்கு இடந்தரும் சொற்களாக Concrete, Cement, Pump ஆகியவற்றைக் கொடுத்துள்ளது

மொழி உணர்வின் ஆதிக்கத்தையே புலப்படுத்தும் சிமெண்ட் போன்று வழக்கில் அறிமுகமாகிவிட்ட சொற்களை அப்படியே ஒலி பெயர்த்தல் 'நலம்' என்று வேறு சிலர் (உ-ம் கண்ணபிரான், 1986, ஆ. 29; கொடுமுடி சண்முகம், 1986 39) குறிப்பிட்டிருந்தாலும், தீவிரவாதம் என்று வரும்போது ஒரு சிலர் இதுபோல சொற்களை எடுத்துக்காட்டி அவைகளை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று வாதிடலாம்.

உண்மையில் அறிவியல் மொழியில் எழுதுபவர்களின் உணர்ச்சிக்கு இடம் கிடையாது. இதைத்தான் அண்ணாமலை (1986 . 78).

> அறிவியல் மொழியின் இன்னொரு தன்மை எழுதுபவனிடமிருந்து பிரிந்து நிற்றல். அவனுடைய உணர்வுகள், ஆசைகள், நம்பிக்கைகள் முதலியன மொழியில் பிரதிபலிக்காது.

என்று பொதுவாகக் கூறியுள்ளார் உணர்வு என்பது மொழி உணர்வையும் சேர்த்ததுதான் இதனாலேயே அறிவியல் மொழியும் இலக்கிய மொழியும் வித்தியாசப்படுகிறது மேலும் செயல்நிலையில் பிறமொழிச் சொற்களை ஏற்றுக் கொள்ளலாம் என்பது அறிவியல் தமிழ் நூல்களில் பரவலாகக் காணப்படுகிறது

## கடன்சொல்

மொழியியலார் பாரோயிங் (Borrowing) அதாவது கடனாட்சி என்று பொதுவாகவும். பிறமொழிச் சொற்களை அப்படியே வழங்குவதைக் கடன்சொல் (Loan word) என்று குறிப்பாகவும் வழங்குகிறார்கள் அறிவியல் தமிழ் நூல்களில் (உ-ம் மகாதேவன், 1973, குழந்தைசாமி, 1985) இதுவே ஒலிபெயர்ப்பு என்று குறிக்கப்படுகிறது

தொலகாப்பியர 'வடசொல்' (சொல். 880) என்று சிறப்பாகக் குறித்தாலும் அதைக் கடன் சொல் என்று பொதுமைப் படுத்தலாம் அதனால்தான் அந்தச் சொற்களைத் தழுவிக் கொள்ளும் முறையை இரண்டு சூத்திரங்களில் பேசியுள்ளார் (சொல் எச்சம் 5,6)

அறிவியல் நூல்களில் கலைச்சொல்லாக்கத்தில் கடன் சொற்களைப் பயன்படுத்துவது பெரும்பான்மையோரால் ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளது என்றாலும், இங்கு இரண்டு

பிரச்சனைகள் சிறப்பாக விவாதிக்கப்பட்டுள்ளன. ஒன்று: எப்படிப்பட்ட அல்லது எந்தெந்த சொற்களைக் கடனாள்வது என்பது; இதை சொல் தேர்வு என்று பொதுமைப் படுத்தலாம். இரண்டு; கடனாளும் சொற்களை எப்படித் தழுவிக் கொள்வது அல்லது ஒலிபெயர்ப்பது என்பது. இதைத் தழுவல் முறை (Fashion of adaptation) என்றும் ஒலிபெயர்ப்புமுறை (Transliteration) என்றும் பொதுமைப் படுத்தலாம் முன்னது சுருக்கமாகவும் பின்னது விரிவாகவும் அறிவியல் தமிழ் நூல்களில் விவாதிக்கப்பட்டுள்ளன.

## சொல் தேர்வு

கிரீனும் பாரதியாரும் தமிழ்ச் சொற்கள் கிடைக்காத போது பிற மொழிச் சொற்களைப் பொதுவாகக் கடனாளலாம். எனக் கூறியுள்ளது மேலே எடுத்துக்காட்டப்பட்டது

அனைத்துலகக் கலைச் சொற்களை அப்படியே ஒலிபெயர்த்துக் கையாளலாம் என்ற கருத்து இன்று பரவலாகக் காணப்படுகின்றது ஏனெனில் அறிவியல் குறியீடுகள், சமன்பாடுகள், வாய்பாடுகள் ஆகியவற்றில் அனைத்துலக மரபை ஏற்றுக் கொள்வது மேற்படிப்புக்கும், அனைத்துலக மொழிகளைப் படித்துப் புரிந்துகொள்வதற்கும் அறிவியல் மாணவர்களுக்குச் சுலபமாக இருக்கும் என்பதே இந்த உண்மை இயற்பியல், வேதியியல், கணிதம், பொறியியல் போன்ற துறைகளுக்கே பொருந்தும் மேலும் இந்தத் துறை பற்றி அறிவியல் மாணவர்களுக்கு எழுதாமல் அறிவு பரப்பலுககாகப் பொதுமக்களுக்கு எழுதினால் எல்லாவற்றையும் அனைத்துலகச் சொற்களாக வைத்துக் கொள்ள வேண்டியதில்லை

இங்கு அறிவியல நூல்களில் இரண்டு வகை இருப்பது தெளிவாக உணரத்தகுந்தது ஒன்று அறிவியல் கருத்து பொதுமக்களிடையே பரவுவதற்கு எழுதுவது இது பொது விஞ்ஞானம் (Popular Science) என்றும் அழைக்கப்படுகிறது இன்னொன்று துறை விஞ்ஞானம்; இது பாடநூல்களையும், ஆய்வுநூல்களையும் குறிக்கும் இது அந்தந்த அறிவுத் துறைகளைப் பாடமாகப் படிக்கும் மாணவர்களுக்கும் துறையில் ஆய்வுசெயபவர்களுககும் உரியது இங்கு துறைவிஞ்ஞானம் பற்றியே பேசப்படுகிறது

நிச்சயமாகப் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட தனிமங்களின் பெயர்கள், சிறப்புப் பெயரை (Propernouns) ஒட்டி அமைந்த சொற்கள்,

ராடார் போன்ற எழுத்துச் சுருக்கமாகவும், சொற்சுருக்கமாகவும் அமைந்த சொற்கள், பேச்சு வழக்கில் இரண்டறக் கலந்து விட்ட சொற்கள் போன்றவைகளைக் கடன் சொற்களாகவே ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் உண்டு

'இலங்கை கலைச்சொல் தொகுதியில் ஒலிபெயர்ப்பு செய்யப்பட வேண்டிய சொற்கள் இவையிவை என்று ஒரு வரையறை செய்துகொண்டு அதிலிருந்து மாறாமல் ஒலிபெயர்த்துள்ளனர்' என்று இராதா செல்லப்பன் (1985 : 64) கூறியுள்ளார் எனவே அவைகளை இன்று நாம் பரிசீலித்து பொதுவாகக் கடன்சொற்களாக ஏற்றுக் கொள்வதற்கு ஒரு நடைமுறைக் கொள்கையை வரையறுத்துக் கொள்ள வேண்டும்

## தழுவல்

அறிவியல் தமிழ் நூல்களில் ஒலிபெயர்ப்புப் பிரச்சனையாக இரண்டு மட்டுமே விவாதிக்கப்பட்டுள்ளன. ஒன்று எழுத்து எண்ணிக்கை, மற்றொன்று, எழுத்துகளின் வருமிடம் (பகிர்வு - Distribution). இந்த இரண்டில் எழுத்து எண்ணிக்கையே தழுவல் முறை பிரச்சனையாகக் கருதப்பட்டு பெரிதுபடுத்தப்பட்டுள்ளது

## தழுவல் முறை

தழுவல் முறை என்பது பிறமொழியிலிருந்து கடனாளும் போது தாய்மொழியில் இல்லாமல் பிறமொழியில் காணப்படும் ஒலிகளை எப்படி ஒலிபெயர்ப்பது என்பதே அதற்கு முன்னால் தமிழிலுள்ள எழுத்துகள் எத்தனை? அவைகளின் ஒலி மதிப்பு என்ன? என்று தெரிந்துகொண்டே ஒலிபெயர்ப்பு விதிகளை நிர்ணயிக்க வேண்டும் அறிவியல் தமிழ் ஆராய்ச்சியில் இவை மொழியியல் நோக்கில் ஆராயப்படாததால் பல பிரச்சனைகள் எழுந்துள்ளன மேலும் ஒலிபெயர்ப்பு முறையும் காலந்தோறும் மாறும் என்ற மொழியியல் உண்மையும் நினைவில் கொள்ள வேண்டும் தமிழிலும் ஒலிபெயர்ப்பு முறை காலந்தோறும் மாறிவந்துள்ளது என்று தமிழ் மொழி வரலாறு காட்டுவதையும் இலக்கணங்களில் சூசகமாகக் குறிப்பிடுவதையும் மறந்துவிடக் கூடாது (Ŝ) என்ற ஒலி சங்க காலத்தில் யகரமாகத் தழுவப்பட்டது அதனால்தான் தேயம் ஆகாயம் என்ற வடிவங்களே சங்க இலக்கியத்தில் உள்ளன இடைக்காலத்தில் சகரமாக

தழுவப்பட்டதால் இடைக்கால இலக்கியங்களில் தேசம், ஆகாசம் என்ற வடிவங்கள் காணப்படுகின்றன இதை நன்னூலார் 'முப்பது சயவும்', (1474) என்று குறிப்பிட்டுள்ளார் எனவே இப்பொழுதுள்ள மொழியின் அமைப்பைத் தெரிந்து கொண்ட அதற்கு ஏற்ப தழுவல் விதிகள் அமைக்கப்படவேண்டும்

## எழுத்து எண்ணிக்கை

> நம் மொழியில் இல்லாத ஒலிகளைக் குறிப்பிட என்ன செய்வது? புதிய ஒலிகள் ஒரு புறம் இருக்க, ஜ,ஷ,ஸ,ஹ போன்ற புழக்கத்தில் இருக்கும் ஒலி எழுத்துகளைப் பயன்படுத்துவதா என்பதிலும் முடிந்த முடிவு காண்பது இயலுவதன்று,

என்று குழந்தைசாமி (1985 . 73) கூறும்போது எழுத்துகளின் எண்ணிக்கையை நிர்ணயிப்பதில் பிரச்சனை இருக்கிறது என்பது தெளிவாகிறது அவரே,

> இது தொடர்பான வாதங்களில் அறிவுத்துறைகளைச் சேர்ந்த விற்பன்னர்கள், நூல்களை இயற்ற வேண்டியவர்கள் ஒதுங்கி நிற்க இலக்கணப் புலவர்கள், இலக்கியவாதிகள் ஆகியோர் இதுதான் முடிந்த முடிவு என்று அறுதியிட்டுக் கூறி வருகிறார்கள்,

என்று இன்னொரு இடத்தில் (ப.61) கூறும்போது முடிவுக்கு வரத் தடையாய் இருக்கும் நிலையை எடுத்துக் காட்டியுள்ளார் அதாவது இன்றைய மொழி அமைப்பையும் மேலே குறிப்பிட்ட எழுத்து மொழியில் பல்வேறு பண்புகளையும் தெரிந்து மொழியியலார் வழிகாட்ட முடியாமல் இருக்கும் சமூக உணர்வு இங்குச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

இராதா செல்லப்பன் (198519) இதைச் சொல்லெழுத்து (Spelling) பிரச்சனையாகக் கருதி ஒரு தழுவல் முறையைக் குறிப்பிட்டு ஏனையவற்றை எடுத்துக்கூறத் தயங்கி விட்டுவிட்டார்

> ஒரே சொல் கிரந்த எழுத்துக்களைக் கலந்தும், தனித்தமிழ் எழுத்துகளாலும் எழுதப்பட்டுள்ளது இந்நிலை மாறி ஒலி பெயர்ப்பில் ஒருமைப்பாடு காணும் முறை வகுக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக மொழி

முதலில் வரும் ஷ, ஒலியை மெய்யில்லாமல் தனி உயிராகவே எழுதலாம். Hysteria என்ற சொல்லை ஹிஸ்டீரியா என்று எழுதாமல் இஸ்டீரியா என்று எழுதலாம். இது போன்ற ஏனைய பிறமொழி எழுத்துக்களையும் பற்றி ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும். இம்முடிவுகள் அறிஞர் பலருடைய ஆழ்ந்த சிந்தனையின் அடிப்படையில்தான் உருவாகும்,

என்று கூறும்போது அவர் பிரச்சனைக்குத் தீர்வு காணுவதில் தயங்குவதை உணரலாம். மேலும் ஒரு சிறந்த எழுத்தை (ஸ்) பயன்படுத்த மறைமுகமாகப் பரிந்துரைத்தது ஏன் என்று தெரியவில்லை அவரே இன்னொரு இடத்தில் (ப. 18) 'ச,ஜ என்ற எழுத்து தேவையில்லை' என்ற கா. மீனாட்சிசுந்தரத்தின் கருத்தை எடுத்துக்காட்டியுள்ளார் அதாவது மறைமுகமாக அதை உடன்படுகிறார் என்று பொருளா? அதே சமயத்தில் வேறொரு இடத்தில் சில புதிய எழுத்துக்களைச் சேர்த்துக் கொள்வது அறிவியல் வளர்ச்சிக்கு உதவும் என்று குறிப்பிட்டுள்ளார்

'மொழிமுதல் ஒலிப்புடைய வல்லொலியையும் (b,d,g) ஒலிப்பிலா வல்லொலியையும் (p,t,k) வேறுபடுத்திக் காட்டுவது அறிவியல் வளர்ச்சிக்கு உதவும்', என்று இராதா செல்லப்பன் கூறும்போது (ப32) இன்றைய பேச்சு மொழியின் நிலையையும் அறிவியல் தமிழின் தேவையையும் அவர் உணர்ந்திருப்பது புலப்படுகிறது. எனவே, எழுத்து எண்ணிக்கை அறிவியல் தமிழ் அறிஞர்களையும் குழப்பியுள்ளது என்றே கருத வேண்டியிருக்கிறது வேறு பலருடைய ஒலிபெயர்ப்பு பற்றிய கட்டுரைகளிலும் இப்படிப்பட்ட முரண்கள் காணப்படுகின்றன. (உம் கொடுமுடி சண்முகம் 1986) கடைசியாக ஒரு எடுத்துக்காட்டு. 'அறிவியல் நூல்களைத் தமிழில் எழுதுவது என்பது தமிழில் அறிவியல் இலக்கியம் படைப்பதாகும் அதற்கான இலக்கணம் உருவாக வேண்டும்' பாரம்பரியம் உருவாக வேண்டும்' என்ற பெரிய நோக்கத்தோடு வெளிவரும் ஒரு இதழ் தன்னுடைய ஒலிபெயர்ப்புக் கொள்கையைக் கீழ்கண்டவாறு பிரசுரித்துள்ளது.

'பிறமொழிச் சொற்களை ஒலிபெயர்ப்பதில் இயன்ற அளவில் கம்பன் காட்டிய வழியே ஆசிரியர் குழுவின் வழியாயினும், கட்டுரையாளர்களின் உணர்வுகளை மதித்து அவர்கள் எழுதிய வண்ணமே பிரசுரித்திருக்கிறோம்' என்பதே அந்த வாசகம் இங்கு

ஆசிரியர் குழுவின் கொள்கையும் அதே நேரத்தில் பிறர் கருத்தை மதிக்கும் தாராள மனப்பான்மையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன கொள்கை குறைந்த பட்சம் பன்னிரெண்டாம் நூற்றாண்டின் இலக்கியத் தமிழை ஒட்டியது என்பதும், அதற்குப் பிறகு மொழியில் நிறைய மாற்றம் ஏற்பட்டு விட்டது என்பதும் சுட்டிக் காட்டத் தகந்தது ஆனாலும் கட்டுரையாளர்களின் உணர்வுகளை மதிப்பதற்கு முன்னால் 'தங்களுடைய உணர்வுகளை மதித்து இருபதாம் நூற்றாண்டுத் தமிழை அதாவது பாரதி காட்டிய வழியை ஆசிரியர் குழுவினர் (அதன் மன்ற குழுவினர் உட்பட) பின்பற்றியுள்ளார்கள் அதாவது தங்கள் பெயர்களை எழுதும்போது கம்பன் காட்டிய வழிக்கு மாறுபட்டு பாரதி வழியைப் பின்பற்றி மூன்று கிரந்த எழுத்துக்களையும் (ஜ,ஷ,ஸ) புதிய எழுத்துப்பகிர்வையும் (புதிய மெய்மயக்கம். த்ம், ப்ர், சொல்லுக்கு இறுதியில் வல்லின எழுத்து - க் என்ற எழுத்து) பயன்படுத்தி யுள்ளார்கள் சுருக்கமாகச் சொன்னால் அவர்களின் இலட்சியக் கொள்கை ஒன்று, நடைமுறைக் கொள்கை மற்றொன்று (ஆனால் அந்த இதழ் இப்பொழுது ஒலிபெயர்ப்பு பற்றிய தன்னுடைய கொள்கையைப் பிரசுரிக்கக் காணோம்)

எதையும் விதிவிலக்காக அல்லது வழு அமைதியாக ஏற்றுக் கொள்வது மனப் போராட்டத்தை உண்டாக்கும்; அதனால் புதிய இலக்கணம் உருவாகாது; உருவாக்கவும் முடியாது, எனவே மொழித் துறையில் அன்றன்றைய நிலையை - அந்தக்கால மொழி அமைப்பைச் சரியாகப் புரிந்துகொண்டு அவைகளை விதியாக ஏற்றுக் கொண்டால்தான் புதிய இலக்கணம் உருப்பெற முடியும்

இந்த மயக்கமும், தயக்கமும் தீர வழி என்ன? அந்தப் பிரச்சனைக்குரிய காரணத்தைப் புரிந்து கொண்டும், அதுபற்றிய வரலாற்றைத் தெரிந்துகொண்டும் பிற அறிவுத் துறையினையும் பார்த்தால் தெளிவு கிடைக்கும்

எழுத்து எண்ணிக்கை பற்றிய பிரச்சனைக்குக் காரணம் இருபது முப்பதுகளில் இருந்த தீவிர மொழித் தூய்மை இயக்கமே என்று நினைக்க வேண்டியிருக்கிறது ஏனெனில் அந்த இயக்கத்தார் சில சமூக, பொருளாதார, பண்பாட்டு, அரசியல் காரணங்களுக்கு வடமொழியின் செல்வாக்கை அறவே ஒழிக்க வேண்டும் என்று பாடுபட்டார்கள் இந்த வரலாற்று நோக்கில் பார்க்கும்போது நம்முடைய ஊகம் சரியானதாகவே இருக்கும் என்று நினைக்க வேண்டியிருக்கிறது

இந்த மொழித்தூய்மை இயக்கம் பிறதுறைகளை எப்படி பாதித்தது? அவர்களின் எதிர்வினை என்ன என்று பார்ப்போம்.

மொழித்தூய்மை இயக்கத்தால் படைப்பு இலக்கியங்களிலும் அரசியல் எழுத்துகளிலும் வேறுபல துறைகளிலும் ஓரளவு பாதிப்பு உண்டாகி வடமொழிச் சொல்வாக்கின் குறைவு ஏற்படத்தான் செய்தது ஆனால் அவர்கள் மொழித் தூய்மையை முழு அளவில் ஆதரிக்கவும் இல்லை; பின்பற்றவும் இல்லை முழு மொழித் தூய்மை வாதம் நடைமுறைப்படுத்தமுடியாது, கூடாது என்பதைக் கோட்பாட்டு அளவிலேயே மபொ. சிவஞானமும் (1960, மொழியும் கலப்படமும் என்ற சிறு நூல் மூலமும்) ஜெயகாந்தனும் (1972 ஒரு கட்டுரை மூலமும்) விளக்கித் தங்கள் கருத்துகளை நிலைநாட்டியுள்ளார்கள் மேலும் அவர்கள் கிரந்த எழுத்துக்களையும். தேவையான பிறமொழிச் சொற்களையும், தைரியமாக அப்பொழுதிலிருந்தே கையாண்டு வருகின்றார்கள். இதற்கு அவர்கள் தங்களுடைய தமிழ் அறிவில் தன்னம்பிக்கை பெற்றிருந்ததும் ஒரு காரணம் ஆகும்

இந்த நிலையில் அறிவியல் கருத்துகளைத் தமிழில் எழுத முன்வந்தவர்கள் தாங்கள் முறையாகத் தமிழ் படிக்கவில்லை; தமிழில் எழுதிப் பழக்கம் இல்லை என்ற உணர்வோடு தமிழ் ஆசிரியர்களின் துணையை நாடினார்கள் மேலும் இளங்கலை வகுப்பில் அறிவியல் பாடம் படித்து முதுகலையில் தமிழ் படித்த சிலர் தங்களுக்கு அறிவியல் தெரியும் என்று ஒரு சில கட்டுரைகளை மட்டும் எழுதியதோடு செம்மையாக்கத்தை அறிவியல் தமிழில் பின்பற்ற வேண்டும் என்று பேசியும் எழுதியும் வந்தார்கள் அவர்களே கிரந்த எழுத்துகளைக் கூட அறிவியல் தமிழில் பயன்படுத்தக்கூடாது என்று பலவித வாதங்களை அடுக்கிக்கொண்டுபோனார்கள் எழுபதுகளில் அவர்கள் கொடுத்த வாதங்களின் வன்மை மென்மை முன்னரே விரிவாக விளக்கப்பட்டுள்ளது (சண்முகம் 1978) அந்த எதிர் வாதங்களை அறிந்து கொள்ள வாய்ப்பு இல்லாமல் பலரும், வாய்ப்பிருந்தும் அதை அலட்சியப்படுத்திய சிலரும் எண்பதுகளிலும் அறிவியல் தமிழ் நூல்களில் மேலே எடுத்துக்காட்டியபடி செம்மையாக்க வாதத்தை ஆதரிப்பதற்கு. யார்தான் என்ன செய்ய முடியும்? அப்படி ஆதரிப்பதற்குக் காரணம் என்ன என்று ஆராய்வது சுவையான சுய உணர்வு ஆராய்ச்சியாக இருக்கும்

இன்றைய பேச்சு மொழியை ஆராய்ந்த பல மொழியியல் அறிஞர்கள் கல்லாதவர் பேச்சிலும் ஜ,ஸ போன்றவை ஒலியனாக - சொல்லை வேறுபடுத்தி அறியப் பயன்படும் ஒலியாக - இருப்பதை எடுத்துக்காட்டியுள்ளார்கள் (உம். சண்முகம் பிள்ளை, *1965*. zvelebil,1964). சில கிளை மொழிகளில், படித்தவர்கள் பேச்சு மொழியில் ச,ஜ, ஒலியனாக - (ஜாதகம் - சாதகம்); ஜோதி - சோதி (த்தல்); ஜாதி - சாதி (த்தல்); அமைந்துள்ளன. இவைகளைத் தமிழ்ச் சொற்கள் இல்லை என்று தள்ளிவிட வேண்டும் என்றால் இன்றைய பொது மக்கள் எப்படித் தமிழைப் பயன்படுத்துகிறார்கள் என்ற உண்மையை அலட்சியப்படுத்துவதாகும். சமூக அறிவியல் நோக்கைப் புறக்கணிப்பதாக ஆகும். இந்த நிலையில் வரலாறு பற்றியும் புதிய எழுத்துகள் உண்டாக்கிக் கொள்ளும் முறை பற்றியும் பாரதியின் கருத்தையும் அறிவியல் தமிழ் அறிஞர்கள் கருத்தில் இருத்திக் கொண்டால் அவர்கள் பிரச்சனையாகக் கருதுவதற்கு விடை கிடைக்கும்.

> தொல்காப்பியர் கட்டின அரிச்சுவடி போதா வண்ணமாக நமது பாஷை வளர்ச்சி பெற்றவுடனே நமது முன்னோர்கள் மேற்காட்டிய எழுத்துகளை (ஸ,ஷ,ஜ,க்ஷ) சேர்த்தார்கள். நாமும் அப்படியே இக்காலத்தில் ஏற்படும் உச்சரிப்புக் கஷ்டங்களை நிவிருத்தி செய்து கொள்வதற்குக் கிரந்த எழுத்துகளைச் சேர்க்கலாம் என்று சில பெரியோர்கள் கருதுகிறார்கள். ஆனால் அதைக் காட்டிலும் அடையாளம் போடுவது சுலபமான வழி

(பாரதி புதையல்) என்பதே பாரதி வாசகம்

பாரதி கூறியதற்கு இணங்க (f) ஒலியை பா. வே. மாணிக்கநாயக்கர் ஆய்த எழுத்தையும் பகரத்தையும் சேர்த்து (ஃப) என்று எழுதலாம் என்ற யோசனை பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது; அறிவியல் தமிழ் நூல்களிலும் பரவலாகக் கையாளப்படுகிறது. இதையும் செம்மையாக்கவாதிகள் (உம். மாணிக்கம் *1975*) எதிர்த்துள்ளார்கள்; ஆனால், இதை அறிவியல் தமிழ் நூலார் தங்கள் நூல்களில் கையாண்டு வருவது குறிப்பிடத்தகுந்தது; பாராட்டத்தகுந்தது.

வழக்கு அடிப்படையில் இலக்கணமே தவிர இலக்கண அடிப்படையில் வழக்கு அமைவதில்லை. இது மொழிக்கும் பண்பாட்டுக்கும் பொருந்தும். வழக்கைப் புறக்கணிப்பது பொதுமக்களை அலட்சியப்படுத்துவது ஆகும்.

## எழுத்துகளின் பகிர்வு

சொல்லில் முதலிலும் கடைசியிலும் வரும் 'எழுத்துகளின் வரன்முறை' இரண்டு எழுத்துகள் சேர்ந்து வருவதிலுள்ள கட்டுப்பாடு ஆகியவையே எழுத்துப் பகிர்வு ஆகும். எழுத்துகளின் பகிர்வு தமிழ் இலக்கணங்களில் விளக்கப்பட்டுள்ளதால் அறிவியல் தமிழ் நூலார் இதுபற்றி விவாதித்துள்ளார்கள். எழுத்துப் பகிர்வும் காலந்தோறும் மாறி வந்துள்ளது. அவைகளில் சிலவற்றையே இலக்கண நூல்கள் குறிப்பிட்டுள்ளன

அறிவியல் தமிழ் நூல்கள் பழைய மரபினைப் பின்பற்ற வேண்டும் என ஒரு சிலரும் (உ.ம். கணேசன், 1972 . 32) நெகிழ்ச்சி கொடுத்து, அதாவது அந்த மரபைப் பின்பற்றாமல் கலைச் சொல்லாக்கம் செய்யலாம் என்று வேறு சிலரும் வாதாடியுள்ளார்கள் தமிழறிஞர்களும் எழுத்துப் பகிர்வில் செம்மையாக்கம் பின்பற்ற வேண்டியதில்லை என்று குறிப்பிட்டுள்ளனர் (உ.ம். - கா. மீனாட்சிசுந்தரம், 1976 . 23). இருந்தாலும் அறிவியல் தமிழ் ஆய்வாளரிடமிருந்தும் அறிவியல் தமிழ் அறிஞர்களிடமிருந்தும் எழுத்துப் பகிர்வு பற்றிய தயக்கமும், மயக்கமும் போகவில்லை என்று அறிவியல் தமிழ் நூல்கள் காட்டுகின்றன.

தொல்காப்பியத்தை மேற்கோள் காட்டி சகரம் ('ச'வை முதலாக உடைய சொற்கள்) வருவது விதிவிலக்காகக் காணப்படுகிறது (கொடுமுடி சண்முகம் 1986 3) என்று ஓரிடத்தில் கூறி இன்னொரு இடத்தில் (ப.40) தொல்காப்பியர் சொல்லுக்கு முதலில் வராத எழுத்துக்களின் பட்டியலைக் கூறிவிட்டு,

> இவற்றில் ட,ர,ல ஆகிய எழுத்துக்களை முதலில் கொண்ட பிற மொழிச் சொற்கள் ஏராளமாக உள்ளன. ரப்பர், லாடம் போன்ற சொற்களை அவ்வாறே கொள்ளலாம் எனத் தமிழ்ப் புலவர்களே ஏற்றுக் கொண்டுள்ளனர்; அரப்பர் என்றோ, இரப்பர் என்றோ எழுதுவதை விட ரப்பர் நன்றென்பர். இதனையும்

ஒரே வழிதான் ஏற்றுக்கொள்ளலாம், இதைப் பொது வழக்காக்குவது நன்றன்று. இராமர், இலக்குவன், அரங்கம் போன்றவற்றை மாற்றாதிருத்தலே நல்லது

என்று முரணாகக் கூறும்போது என்னென்று சொல்வது அறிவியல் தமிழுக்கு மட்டும் இல்லாமல் பொதுத்தமிழுக்கும் அறிவியலார செந்தமிழ்க் காவலராக வாழ விரும்பி இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் மரபைப் புறக்கணித்தால் யார்தான் என்ன செய்வது?

ஒலிபெயர்ப்பு முறையைக் கடைப்பிடிக்கும்போது நாம் சில இலக்கண மரபுகளைக் கையாள வேண்டும். இலக்கண மரபுப்படி மொழிக்கு முதலாக ட,ல,ர என்பவை வாரா; ஆகவே இவ்வெழுத்துக்களைக் கொண்ட பெயர்களை இலக்கண மரபுப்படி அ,இ,உ உயிரெழுத்துச் சேர்த்து எழுதவேண்டும்.

என்று கூறிவிட்டு உதாரணங்களுக்கு அறிவியல் அறிஞர்கள் பெயர்களை எடுத்துக்காட்டி

'திசைச்சொல்லாகிய இவற்றிக்க மரபிலக்கணத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கலாம்'

என்று செம்மையாக்க வாதத்தையும் புதுமையாக்க வாதத்தையும் சேர்த்து கண்ணபிரான் (1986 ஆ 29 தொ) கூறியுள்ளார்

இலக்கண ஆசிரியர்கள் விலக்கிய, ஆனால், தற்காலத்தில் ஏற்புடைய வழக்கில் புகுந்து விட்ட சொல்லமைப்புகளைக் கண்டறிய வேண்டும். எடுத்துக்காட்டு: மொழி முதல் ட,ர. இலக்கண ஆசிரியர்கள் விலக்கிய, இப்போதும் மொழி வழக்கில் வராத அமைப்புகளைத் தொகுக்க வேண்டும். (எ.டு.) ஈருருளி. இது போல ர இரட்டித்து வரும் அமைப்பு தமிழரது நாவிற்குப் பொருந்தாத காரணத்தால் மிதிவண்டி என்ற பெயரே நிலைத்தது தமிழியல்புக்கு மாறுபட்ட ஒலி, சொல்லமைப்புகளை உருவாக்கினாலும் அவை வாழ்வு பெறுவதில்லை. எனவே தமிழ் ஒலி அமைப்பு நியதிகளைக் கண்டறிந்து விதி முறைகளை உருவாக்க வேண்டும்.

(இராதா செல்லப்பன், 1985:30) என்ற கருத்தில் செம்மையாக்கத்துக்கு ஆதரவாகவும் மொழிப்புதுமை யாக்கத்துக்கு எதிராகவும், காரணங்காட்டி லேசாகப் பயமுறுத்துவதை உணரலாம். இதே ஆசிரியர் இன்னொரு இடத்தில் (ப.29),

> 'மொழி முதல் ட,ர,ல நமக்குக் கடினமான ஒலிகள் அல்ல; இவை இப்போது வழக்கினுள் நுழைந்துவிட்ட ஒலிகளே ஆகும். எனவே, டீசல், ரேடார் எனச் சொற்களை ஒலிபெயர்ப்பதில் தவறில்லை'

என்றும் கூறும்போது செம்மையாக்க வாதத்தில் நெகிழ்ச்சியைக் காணலாம். செம்மையாக்கவாதிகள் சிலர் ஒத்துக்கொண்ட போதிலும் அறிவியல் தமிழ் நூலாசிரியரிடையே மயக்கத்துக்கும் தயக்கத்துக்கும் காரணம் என்ன? உண்மையில் ஈருருளி என்பது ஏற்றுக் கொள்ளப்படாததற்கு ஒலி அமைப்பு மட்டும் காரணம் இல்லை; அதிலுள்ள சொற்களும் காரணம். இரண்டைக் குறிக்கும் 'ஈர்' என்ற சொல் வழக்கில் இல்லை. அதாவது தொகைச் சொற்களில் (ஈரிழைத்துண்டு, போன்றவை) மட்டுமே உள்ளது. தனிச் சொல்லாக வழங்கவில்லை. எனவே அந்தச் சொல்லின் சொற்பொருள் பொதுமக்களுக்குத் தெரியவில்லை. அதே சமயத்தில் 'மிதிவண்டி' என்பது புகை வண்டி, மாட்டுவண்டி, குதிரைவண்டி போன்றவைகளோடு தொடர்பு இருப்பதால் எளிதாகப் புரிந்துகொள்ள முடிகிறது. எனவே தமிழ் இயல்பு, தமிழ் நடையமைப்புக்குரிய நியதிகள் என்பவை எல்லாக் காலத்துக்கும் பொருந்தி நிலைத்து நிற்பவை அல்ல. சுருக்கமாகச் சொன்னால் அறிவியல் தமிழில் எழுத்து எண்ணிக்கையோ எழுத்துப் பகிர்வோ பெரிய பிரச்சினையே இல்லை. அதைவிட சொல்லாக்கமும் அதை விட மொழிநடையும், அதையும்விட பாடமாக்கும் முறை (Textualisation) யுமே பெரிய பிரச்சனை. இருந்தாலும், எழுத்து எண்ணிக்கை பற்றியும் எழுத்துப் பகிர்வு பற்றியும் கொஞ்சம் விரிவாக இங்கு கூறியிருப்பதற்குக் காரணம் அறிவியல் தமிழ் நூலார் கடந்த கால் நூற்றாண்டுகளாக இதே பிரச்சனையைத் திரும்பத் திரும்பச் சலிக்காமல் கூறிப் பேனைப் பெருமாளாக்கிக் கொண்டிருப்பதுதான்.

எல்லா மொழியிலும் பேச்சுமொழியில் ஏற்படும் மாற்றத்தின் தாக்கத்தால் எழுத்து மொழியில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழிலும்

காலந்தோறும் எழுத்து மொழியில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை இலக்கியத்தமிழ் (படைப்பிலக்கியங்கள்) காட்டுகிறது ஆனால், அவைகளைத் தமிழ் இலக்கணங்கள் பிரதிபலிக்கவில்லைதான் மேலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பக் காலத்தில் இருந்த எழுத்து மொழி மரபில் மாற்றங்கள் ஏற்பட்டு இப்பொழுது சில புதிய மரபுகள் படைப்பிலக்கியவாதிகளாலும் பலதுறை அறிஞர்களாலும் பின்பற்றப்பட்டு வருகின்றன; அவைகளையும் அவற்றில் புதைந்துள்ள மொழியியல் தத்துவத்தையும் புரிந்து கொள்ள முயற்சி செய்து, அறிவியல் தமிழின் தேவைக்கேற்ப புதிய துறைவழக்கைக் கொஞ்சம் தைரியமாக அறிவியல் அறிஞர்கள் பின்பற்ற வேண்டும் அறிவியல் தமிழ் வழக்கை ஒட்டி அறிவியல் தமிழ் மொழி அமைப்பையும் உருவாக்க வேண்டும் அதற்கு மொழி பற்றிய அறிவியலை - மொழியியலைப் பின்பற்ற வேண்டும் அப்பொழுதுதான் கருத்து முரண்கள் குறையும்; தெளிவு ஏற்படும், கலைச்சொற்களில் சீக்கிரம் தரப்பாடு ஏற்படும்

## உள்நிலை ஆக்கம்

உள்நிலை ஆக்கம்தான ஒரு மொழியின் உள்ளார்ந்த ஆற்றலைப் புலப்படுத்துவது பிறமொழிச் சொற்களை நிறைய கடனாளும் மொழிகள் கூட உள்நிலை ஆக்கமாகப் பல சொற்களைப் படைத்துக் கொள்ளாமல் இருக்காது கடன் சொற்கள், உள்நிலை ஆக்கம் ஆகியவற்றில் மொழிக்கு மொழி சதவிகிதம்தான் மாறுபடும்

அறிவியல் தமிழ் நூல்களில் உள்நிலை ஆக்கம் 'மொழி பெயர்ப்பு' என்று பொதுவாகவும் (உம் குழந்தைசாமி, 1985 . 73) சொல்லாக்கம்' என்று குறிப்பாகவும் (உம் இராதா செல்லப்பன் 1985 . 17) குறிப்பிடப்பட்டுள்ளன மொழியியல் கருத்தை ஒட்டியும் பொருள் விரிவும் இதில் அடங்குவதைக் கருத்தில் கொண்டும் 'உள்நிலை ஆக்கம்' என்பது பொருள் விரிவு (Loan extension) புதுச்சொல்லாக்கம் (Loan creation) மொழிபெயர்ப்பு (Loan translation) ஆகிய மூன்றையும் குறிப்பதாகக் கொள்ளப்பட்டுள்ளது புறவளர்ச்சியால சொல்லாக்கம் ஏற்பட்டது என்பதைச் சுட்டிக காட்டுவதற்குக் கடன் என்ற அடை கொடுத்துக் கடன் பொருள் விரிவு, கடன புதுச் சொலலாக்கம், கடன் மொழிபெயர்ப்பு என்று மொழியியல் நோக்கில குறிப்பிடலாம்

## பொருள் விரிவு

மொழியில் முன்னரே வழங்கும் சொற்களுக்குப் புதிய பொருளை ஏற்றிக் கலைச் சொல்லாக வழங்குவதே பொருள் விரிவு ஆகும். இதை எல்லா அறிவியல் தமிழ் நூல்களும் சுட்டிக்காட்டியுள்ளன. இதுபற்றி அறிவியல் தமிழ் நூல்களில் காணப்படும் மூன்று செய்திகள் குறிப்பிடத் தகுந்தவை. அவையாவன : 1 இலக்கியங்களில் காணப்படும் சொற்களைப் புதிய பொருளில் வழங்குவது. அதாவது 'பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் சொற்களை இன்றைய தேவைக்கேற்ப புதிய பொருள் கொண்டு பயன்படுத்துவது.

வரைபடம் - 2

| சொல் | பழையபொருள் | மேற்கோள் | கலைச்சொல் |
|---|---|---|---|
| மின் | மின்னுதல் | புறம் 424 | மின்சாரம் |
| வடி | இரும்பைக் காய்ச்சி அடித்தல் | புறம் 37725 | Forge Shape by heating in fire and hammering (கணேசன் 1972) |
| எக்கி | நீர்வீச்சு பொறி | பரிபாடல் 5012 | (Pump - கொடுமுடி சண்முகம் 1987 : 45) |
| அணு | நுண்ணிய பொருள் | மணிமேகலை 27113 | Atom (இயற்பியல்) |
| வில் | Bow | புறம் 20-10 | Arc (இயற்பியல்) |
| வில்லை | வட்டமா யிருப்பது | கலைச்சொல் அகராதி (கலைக்கதிர்) | Lens (இயற்பியல்) |
| வான ஊர்தி | வானத்தில் செல்வது | வலவன் ஏறா வான ஊர்தி புறம் - 276 | Aeroplane (குழந்தைசாமி 1985 : 68) |

2 பேச்சு வழக்கில் பல கிளைமொழிகளில் (Dialects) வழங்கும் சொற்களை ஏற்றுப் புதிய பொருளைத் தரலாம் (கணேசன் 1972 . 39,

குழந்தைசாமி 1985 : 69) மேலும் பல்வேறு தொழில் செய்யும் மக்கள் வழங்கும் தொழிற் சொற்களை (Occupationaldialects) யும் கையாளலாம் என்றும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது (கொடுமுடி சண்முகம், 1987 கணேசன் 1972 . 43) . Coil,turn winding ஆகிய மூன்றுக்கும் முறையே சுருள், சுற்று, சுருணை என்ற சொற்களைக் கையாளலாம் என்பது கணேசன் கருத்து இங்கு அறிவியல் தமிழ் நூலார் பேச்சு வழக்கையும் கிளைமொழி வழக்கையும் மதிப்பது பாராட்டுவதற்கு உரியது பொதுவாக, இப்படிப்பட்ட சொற்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகிறது

3 தமிழில் ஒரு பொருள் பல சொல் (Synonyms) ஆக இருப்பவைகளைத் தொடர்பான பொருளைக் குறிக்கப் பயன்படுத்தல் ஒரு வகை இதைக் கிரீன் (ஆ 7),

> 'ஒரு பயனுக்குப் பல மொழியாவது, ஒரு மொழிக்குப் பல பயனாவது இருந்தால் சொல் தேவைக்கு இணங்கிய பொருள்படி அதை வரைவு செய்து கொள்ளவும்'

என்று குறிப்பிட்டுள்ளார் (சுந்தரம் ; 1983 20)

> மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் ஒரே பொருளுடையனவாக இருந்தாலும் ஆழ்ந்து நோக்கும் பொழுது பொருள் வேறுபாடுகளுடைய சொற்களைப் பயன்படுத்துவதில் தெளிவு வேண்டும்'

என்று குழந்தைசாமி பொதுவாகக் கூறியதோடு, காற்றைக் குறிக்கும் பல்வேறு சொற்களைக் காற்றின் பல நிலைகளைக் குறிக்கும் சொற்களாகக் கையாளும் முறையையும் சுட்டிக்காட்டியுள்ளார் (1985 77-8) இங்கு ஒரு சிறு உண்மையை எடுத்துக்காட்ட வேண்டும் ஒரு பொருள் பல சொற்களில் பொதுப் பொருளைக் குறிப்பதற்கு வழக்கிலுள்ள சொல்லையும் சிறபபுப் பொருளைச் சுட்டுவதற்கு வழக்கு இல்லாத பிற சொற்களையும் பயன்படுத்துவது எளிமையாக இருக்கும் என்று நினைக்க வேண்டியிருக்கிறது Air, Wind என்பனவற்றில் Wind என்பது Air in motion ஆகும் எனவே Air என்பது பொதுச் சொல், Wind என்பது சிறப்புச் சொல், இன்றைய தமிழில் காற்று என்பது பொதுச் சொல் எனவே Air என்பதற்குக் காற்று[4]

என்றும் Wind என்பதற்கு வளி என்றும் வழங்குவது பொருத்தமாக இருக்கும் இதை மொழியியலார் நுண்பொருள் ஆக்கம் அல்லது நுண்பொருட் பேறு (Intellectualisation) என்பார்கள். மொழித் தூய்மையின் பேரால் பேச்சு வழக்கிலும் , இலக்கிய வழக்கிலும் பயன்பட்டு நுண்பொருள் உணர்த்தும் பிற மொழிச் சொற்களை நீக்கும் முயற்சி மொழி வளர்ச்சிக்கு உதவி செய்யாது என்பதை இந்த இடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

## மொழிபெயர்ப்பு

மொழிபெயர்ப்பு என்பது மூலமொழியில் ஒன்றுக்கு மேற்பட்ட தனிச் சொல்லாக - இரண்டு தனிச்சொல்லாக இருப்பதைத் தாய்மொழியிலும் இரண்டு தனிச் சொற்களாக நேருக்கு நேர் மொழிபெயர்ப்பது ஆகும் இதைப்பற்றிக் கிரீனும் (ஆ8) குறிப்பிட்டுள்ளார் அவருடைய வாசகம். 'இங்கிலீஷ் தொடர் மொழியின் உறுப்புகளைத் தனித் தனியே மொழிபெயர்த்து அம்மொழிக்குச் சரியான சொல் பிறக்க இவைகளைப் புணர்த்தவும்,' என்பது இந்த உண்மை இன்றைய அறிவியல் தமிழ் நூல்களிலும் (உம். இராதா செல்லப்பன் *1985 ; 21, 60)* விளக்கப்பட்டுள்ளது

இங்கு மொழியியல் நோக்கில் ஒரு உண்மையை விளக்குவது (இது நடைமுறையிலும், உள்ளதுதான்) 'மொழி பெயர்ப்பைச்' சரியாக வரையறுத்துப் பயன்படுத்துவதற்கு உதவும்

*(1)* இரண்டு தனிச்சொற்கள் சேர்ந்து தொகையாக வருவது (அச்சிலும் இவை தனித்தனிச் சொற்களாக எழுதப்படுவது உம் (Acid Dye)

*(2)* இரண்டு தனிச்சொற்களாக இருந்தாலும் ஒரு சொல் போல அமைவது (இலக்கணத்தில் ஒரு சொல்நீர்மைத்து என்பார்கள்). இது அச்சில் இடம் விடாமல் ஒரு சொல்லாக எழுதப்படுவது (உம் Photograph)

*(3)* ஒரு சொல்லாகவே இருப்பது

இந்த மூன்றும் கலைச்சொல்லாக்க முறையிலும் வேறுபடுகின்றன. முதல் வகையில் இரண்டு தனிச்சொற்களாக இருப்பவை தனித்தனியாக சொல்லாக்கப்படும். இரண்டாவது

வகையில் மறித்துவரும் சொற்கள் ஒரே முறையில் ஆக்கப்படும் மூன்றாவது வகையைக் கலைச்சொல்லாக்கும் போது பல முறைகள் பின்பற்றப்படும். அது பின் பகுதியில் விளக்கப்படும். இங்கு முதல் வகையே "மொழிபெயர்ப்பு" என்று சிறப்பாகக் குறிப்பிடப்படுகிறது

Acid Dye - அமிலச்சாயம் (வேதியியல்)

Gun Cotton - துப்பாக்கிப் பஞ்சு (வேதியியல்)

இங்கு 'கலைச்சொல்' என்பதும் கூட மொழிபெயர்ப்புச் சொல்தான் என்பது சுட்டிக்காட்டத்தகுந்தது. ஏனெனில் Technical term என்பதில் Technical என்பது கலையின் 'of art' என்ற பொருள்படும் Technikos என்ற கிரேக்கச் சொல்லிருந்து உண்டானது

'மொழிபெயர்ப்பின் இரண்டு சொற்களையும் நேரடியாக மொழிபெயர்க்காமல் அது உணர்த்தும் கருத்துக்கேற்ற சொல்லால் மொழிபெயர்க்க வேண்டும்' என்று இராதா செல்லப்பன் (1985;61) கூறும் கருத்து மொழி பெயர்ப்பில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளில் ஒன்று ஆகும். இயற்பியலில் Closed circuit என்பதை இலங்கைத் தமிழறிஞர்கள் 'மூடிய சுற்று' என்று மொழி பெயர்த்தது சிறப்பாகக் கருத முடியாது ஏனெனில் அதில் 'மின்னோட்டம் கடந்து செல்ல முடியாது' என்ற பொருள் தோன்றுகிறது. உண்மையில் அது முழுமையான சுற்றுப்பாதையைக் குறிப்பதால் 'முழு சுற்றுப் பாதை' என்ற தமிழகக் கலைச் சொல்லே சிறப்பானது' (இராதா செல்லப்பன்).

'சொல்லை அப்படியே நேருக்கு நேர் மொழிபெயர்ப்பு செய்யாமல் அதன் கருத்தை அறிந்து சொல்லாக்கும் முறை' என்பதைக் 'கருத்துப் பெயர்ப்பு' என்று இராதா. செல்லப்பன் (1985 : 61) கூறியதைத் தனி வகையாகக் கொள்ளாமல் மொழி பெயர்ப்பில் கடைப்பிடிக்க வேண்டிய நெறி முறையாகக் கொள்ளலாம்.

Lamp black - சுடர்க்கரி (வேதியியல்)

Bad conductor - மந்தக்கடத்தி (இயற்பியல்)

Loud speaker - ஒலிபெருக்கி

2. மூல மொழியில் இரண்டு தனிச்சொற்களாக இருப்பவைகளைக் கருத்துத் தெளிவுக்காக மொழிபெயர்ப்பில் கூடுதல்

சொற்களைச் சேர்க்க வேண்டியதில்லை ஏனென்றால் அந்தக் கலைச்சொல்லின் முழுப்பொருளும் அந்தத் துறை வழக்கில் விளங்கிவிடும். பொதுவாக புரிய வேண்டும் என்று எண்ணிக் கூடுதல் சொற்களைச் சேர்க்கும் முறை தமிழில் பரவலாகக் காணப்படுகிறது. உதாரணமாக Direct current, Alternating current என்பனவற்றை முறையே நேர்திசை மின்னோட்டம், மாறுதிசை மின்னோட்டம் என்னும்போது 'திசை' என்ற சொல் கருத்துத் தெளிவுக்காகச் சேர்க்கப்பட்டிருக்கிறது ஆனால் கலைச் சொற்கள் என்ற முறையில் நேர்மின்னோட்டம், மாறுமின்னோட்டம் என்று ஆக்கினால் போதுமானது (இராதா செல்லப்பன் 1985.23). ஏனென்றால், கலைச் சொல்லே முழுப்பொருளையும் தராது; அந்தத் துறை அறிவின் மூலமே அதன் முழுப்பொருளையும் புரிந்து கொள்ள முடியும் என்பது கலைச்சொல்லாக்கத்தில் கடைப்பிடிக்க வேண்டிய முக்கியமான நெறிமுறையை உணர்த்துகிறது இதைத்தான்,

> கலைச்சொற்களின் பின்னணியில் அமைந்துள்ள பொருளை அறிவியல் கொடுக்கிறது; மொழியோ சொற்களைக் கொடுக்கிறது. ஒரு கலைச்சொல் வழக்கில் வந்தபிறகு அதன் பின்னணியில் அது குறிக்கும் பொருள் ஒட்டிக் கொள்கிறது. அறிவியல் வளரவளரச் சில கலைச் சொற்கள் குறிக்கின்ற பொருளும் விரிந்து கொண்டு செல்லும். ஆனால் கலைச்சொல் நிலைத்து நிற்கும்.

என்ற வாசகம் (கண்ணபிரான் 1986 ஆ 22) மேலே குறிப்பிட்ட உண்மையை இன்னும் பொதுமைப்படுத்தி உணர்த்துகிறது

## புதுச் சொல்லாக்கம்

மேலே குறிப்பிட்ட ஒரு சொல் நீர்மைத்தான கலைச்சொற்களையும், ஒரு சொல்லாக இருக்கும் கலைச் சொற்களையும் தாய்மொழியில் கூறுவதற்குப் புதிய சொற்களை ஆக்கிக் கொள்வதே 'புதுச் சொல்லாக்கம்' ஆகும்

இங்கு கலைச்சொற்கள் பகுபதமாகவும் (அடிச்சொல்லும் விகுதியும்(ஒட்டும்) சேர்ந்தது). பகாப்பதமாகவும் (அடிச்சொல் மட்டும் உடையது) இருக்கலாம் கலைச் சொல்லாக்கத்தில் பகாப்பதம் பகாப்பதமாகவோ, பகுபதமாகவோ அமையலாம், அப்படியே

பகுபதமும் பகாப்பதமாகவோ அமையலாம் இந்த இரண்டு செய்திகளையுமே அறிவியல் தமிழ் நூல்கள் எடுத்துக் காட்டியுள்ளன

1 புதுச்சொல்லாக்க நோக்கில் கலைச்சொற்களிடையே அமைந்துள்ள ஒரு பண்பும் அறிவியல் தமிழ் நூல்கள் விளக்கியுள்ளது இங்கு குறிப்பிட வேண்டும் Engineering என்ற சொல் Human Engineering, Safety Engineering என்று புதுத்தொடர்களில் கையாளப்படுவதும் மொழித் திட்டமிடுதலைச் சிலர் Language Engineering என்று கூறுவதும் குறிப்பிடத் தகுந்தது அதாவது ஒரு சொல்லை அது குறிக்கும் பொருளோடு ஏதோ ஒரு வகையில் தொடர்புடைய பொருளுக்கும் பயன்படுத்தும் முறை என்று இதைப் பொதுமைப்படுத்தலாம் *(குழந்தைசாமி 1985.80)* Budget என்பது Water Budget, Energy Budjet என்று புதிதாக வழங்கும் தொடர்களையும் அவர் சுட்டிக்காட்டி இங்கு கலைச் சொல்லாக்கத்தில் பின்பற்ற வேண்டிய முறையும் விளக்கியுள்ளார் அப்படியே *(கண்ணபிரான் , 1986 ஆ 22)* Hydrolysis என்ற சொல் முதலில் நீரால் பகுத்தல் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுவந்தது இன்று நீருடன் தொடர்பில்லாத சில வினைகளுக்கும் கையாளப்படுவது, காட்சிப் பொருளாகக் காட்டும் கருவிகளைக் குறித்த சொல் Syectroscope என்று ஒரு அளவியைக் குறிபபது, ஆகியவை இந்த வகையைச் சார்ந்தவை

> 'துறைச்சொற்கள் அவற்றிற்கு நேரான ஆங்கில சொற்கட்கு விளக்கமாக அமையக் கூடாது; ஏற்ற பொருள் தரக்கூடிய இன்னொரு சொல்லாக அமைய வேண்டும் '

என்று குழந்தைசாமி (மேற்படி) கூறியது கலைச் சொல்லாக்கப் பொதுக் கோட்பாடாக ஏற்றுக் கொள்ள வேண்டிய உண்மை ஆகும்

## பகாப்பதம் பகுபதமாவது

'குறிப்பான ஓர் பதத்தியை ஓசையான யாதேனுமோர் சுற்றை சேர்த்து வேறுபடுத்திச் சொலலாக்கவும்' என்ற கிரீன் கொளகையும் (விதி 25), 'ஒரு குறிப்பிட்ட பொருளுககுப பயன்படுத்தும் சொல்லை 'அம்' விகுதி சேர்பபதன் மூலம் அப்பொருளுககு இணையான

அடிப்படைப் பண்புகளுடைய எல்லாப் பொருள்களையும் குறிக்கும் சொல்லாக மாற்றலாம்''என்ற குழந்தைசாமியின் கருத்தும் (1985 . 78 தொல்) இந்த உண்மையைத் தெரிவிப்பன 'அம்' என்ற விகுதி ஆக்க விகுதியாகும் எனவே, இதை எல்லாச் சொற்களோடும் பயன்படுத்த முடியாது எனவே இதை ஒத்த வேறு பல விகுதிகளையும் உபயோகப் படுத்திக் கலைச் சொற்கள் உண்டாக்கப்பட்டுள்ளன.'

(உம்). கனி - Fruit, கனிமம் - Mineral ; நீர் - Water, நீர்மம் - Liquid. இங்கு மூலமொழியில் பகாப்பதமாக இருக்கும் சொற்கள் தமிழில் பகுபதமாக அமைக்கப்பட்டிருக்கிறது இப்படி தமிழில் கலைச் சொல்லாக்கும்போது பயன்படுத்தும் ஆக்க விகுதிகளின் பட்டியல் தயாரிக்க வேண்டும்

## பகுபதம் பகுபதமாவது

கலைச்சொற்களில் பகுபதம் இருப்பதும், அவைகளில் அடிச்சொற்களும் விகுதியும் (முன்னொட்டும் பின்னொட்டும்) இருப்பதும் அறிவியல் தமிழ் நூல்களில் எடுத்துக் காட்டப்பட்டு அவைகளைக் கலைச்சொல்லாக்கும் முறையும் விவாதிக்கப் பட்டுள்ளது

'குறிப்பான பகுதியும் விகுதியும் சேர்த்துச் சொல்லாக்கவும்' (ஆ, 4) என்ற கிரீன் வாசகம் இந்தக் கருத்தைக் குறிக்கிறது.

> **புதிய சொற்கள் அமைப்பதற்குச் சில முன்னொட்டுக்கள் (Prefixes), பின்னொட்டுக்கள்** (Suffixes) **உருவாக்கப் பட** வேண்டும். **அவற்றை அடிப்படை அல்லது கூட்டு சொற்களுடன் இணைப்பதன் மூலம் - புதுச் சொற்களுடன் இணைப்பதன் மூலம் - புதுச் சொற்கள் அமைக்க இயலும்; அச்சொற்களின் பொருளும் எளிதில் விளங்கும்.**

என்ற குழந்தைசாமி (1985 . 73) வாசகமும் இதையே உணர்த்துகிறது மருத்துவக் கலைச் சொற்கள் அகராதியில் சுமார் 30,000 சொற்கள் இருப்பதாகவும், அவை அனைத்தும் சுமார் 100 முன்னொட்டுக்களையும் சுமார் 40 பின்னொட்டு களையும் உடலுறுப்புக்களின் பெயர்களையும் இணைத்துக் கலைச் சொற்களாக ஆக்கப்பட்டவை என்று அறிவியல் தமிழ் நூல்கள்

எடுத்துக்காட்டியிருப்பதும் இந்த உண்மையை வலியுறுத்தும். (கண்ணபிரான் 1986 ஆ 33)

இங்கு ஆங்கிலக் கலைச் சொற்களிடையே காணப்படும் இரண்டு பண்புகளை அறிந்து கொள்வது தமிழ்ச் சொல்லாக்கத்தில் சில நெறிமுறைகளையும் தெளிவையும் கொடுக்கும்

1 ஆங்கில மொழியில் ஒரு பொருளுக்கே ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களோ• விகுதிகளோ இருக்கின்றன (உ.ம்) Science என்பதை குறிப்பதற்கு logy (Psychology, Philology), tics (Acoustics, Linguistics), -ics (Bionics, Mechanics) போன்று பல விகுதிகள் உள்ளன மேலே குறிப்பிட்டபடி ஒரே விகுதி ஒன்றுக்கு மேற்பட்ட பொருளையும் குறிக்கின்றன (இராதா செல்லப்பன் 1985 74) ஒரு பொருளைக் குறிப்பதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் இருப்பது மொழியின் பொதுப்பண்பு, அது அறிவியல் மொழியிலும் பிரதிபலித்துள்ளது இது ஓசை இனிமைக்கும் நடை அழகுக்கும் உதவி செய்யலாம் எனவே தமிழில் கலைச் சொல்லாக்கம் செய்யும்போது ஆங்கிலத்தில் உள்ளபடி ஒரு சொல் ஒரேவிதமாக அமைக்க வேண்டும் என்றோ, ஒரு பொருள் ஒரே விகுதியால் உணர்த்த வேண்டும் என்றோ நியதிப்படுத்தத் தேவை இல்லை

2 ஆங்கிலக் கலைச் சொற்கள் (இவை அனைத்துலகக் கலைச் சொற்களும் ஆகும்) பேச்சு மொழியிலிருந்தும் இலக்கிய மொழியிலிருந்தும் எடுத்துக் கொள்ளப்படாமல கிரேக்க, லத்தின் மொழிகளிலிருந்தும் எடுத்தாளபபட்டிருககின்றன

| பொருள் | பொதுச் சொல் | கலைச்சொல் ' |
|---|---|---|
| நீர் | Water | Hydro - |
| ரத்தம் | Blood | Haero - |
| பல் | Teeth | Odonto |
| கண் | Eye | Oculo - |

முதலியன

பொதுச்சொற்கள் தனிமொழியாகவும் அதாவது கட்டிலா (Free) சொல்லாகவும் கலைச்சொற்கள் கட்டுண்ட (Bound) வடிவமாகவும்

அமைந்துள்ளன. இதனால் இரண்டு அடிச்சொற்கள் சேர்ந்த தொகையாக அமைய வேண்டியவை ஒரு முன்னொட்டும் ஒரு அடிச்சொல்லும் சேர்ந்த ஒரு சொல் நீர்மைத்தாக அமைந்துவிட்டன. தமிழில் தொகைச் சொற்களாகவே கலைச்சொற்கள் ஆக்கப்பட்டு வருகின்றன. தமிழிலும் கட்டுண்ட வடிவங்களைக் கையாண்டு பின்னொட்டு போல அமைக்க வழி இருக்கிறதா என்று ஆராய வேண்டும். அகம் என்ற தனிச்சொல்லே இன்று விகுதிபோல பொது மொழியிலே (இனிப்பகம் - Sweet shop) துணியகம் (Cloth store) நகலகம் (Xeroxing Centre) பயன்படுத்துகிறோம். அறிவியல் தமிழிலும் இந்த முறையைக் கையாள இடமிருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

3. அறிவியல் நூல்களிலும் ஒரு சொல்லின் பல இலக்கண வடிவங்கள் (பெயர், பெயரிலிருந்து வினை, பெயரடை; வினை, வினையிலிருந்து பெயர், பெயரடை உண்டாகுதல்) பயன் படுத்தப்படுகின்றன. எனவே தமிழில் கலைச்சொல் உண்டாகும்போது அந்த மூலச் சொல்லிலிருந்து பல இலக்கண வடிவங்களை எளிதில் உண்டாக்கிக் கொள்ளும்படி அமைக்க வேண்டும்.

'ஒரு சொல்லின் வேர் அதன் வினைச்சொல், பெயர்ச்சொல், உரிச்சொல் ஆகியவை எளிதில் அமைய ஏற்றதாக இருக்க வேண்டும்' என்று குழந்தைசாமி (1985 : 81) கூறுவதும் கலைச் சொல்லாக்கத்தில் கவனிக்க வேண்டிய நெறிமுறைகளில் ஒன்றாகக் கொள்ள வேண்டும்.

## முடிவுரை

இங்குக் கலைச்சொல்லாக்க நெறிமுறைகளில் அறிவியல் நூல்களில் கூறப்பட்டவை மொழியியல் நோக்கில் பொதுமைப் படுத்திக் காட்டப்பட்டுள்ளன. அதிலும் எழுத்தியல் பிரச்சனை விவாதித்த அளவு சொல்லியல் ஆய்வு விவாதிக்கப் படவில்லை என்பது சுட்டிக்காட்டத் தகுந்தது[5]

## அடிக்குறிப்புகள்

1 'It (linguistics) is one of the oldest intellectual activities to become codifiedand distinct' (P.2). In India, it was linguistics that was considered the norm of a science, a status to which other traditional subjects aspired.

2 இராமாயண வான்மீகியாருக்குத் தமிழ் தாய்மொழி என்று கருதலாம் என்பார் மாணிக்கம் (1986 .60) அப்படியானால் இன்றுள்ளதைப் போலவே சங்க காலத்திலும் சில தமிழர்கள் தாய் மொழியிலும் இரண்டாம் மொழியிலும் இலக்கியம் எழுதியிருக்க வேண்டும் மேலும் வடமொழி இராமாயணம் எழுதிய வான்மீகி தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர் என்றால் அந்தக் காலத்தில் தமிழர்களுடைய வடமொழி அறிவின் ஆழமும் அகலமும் வியக்கத் தகுந்த அளவு உடையது என்று பொருள்

3 இந்தப் பழமொழியின் அடுத்த பகுதியாக 'தூணைத் துரும்பாக்குவது' என்பது அறிவியல் தமிழுக்கும் பொருந்தும் எப்படி என்றால் அறிவியல் தமிழில் மேலே எடுத்துக் காட்டிய பெரிய பிரச்சனைகளாக சொல்லாக்கமும், மொழி நடையும் அறிவியல பாடமாக்கமும் போதிய அளவு விவரிக்க ப் படவில்லை. இந்த உண்மை இந்தக் கட்டுரைக்கும் பொருந்தும் இதற்குக் காரணம் கட்டுரை ஆசிரியன் எழுத்து மொழியை ஆராய்ந்த அளவு பிற பிரச்சனைகளை ஆராய்ச்சி செய்யாததே.

4 குழந்தைசாமி (1985 78) Air என்பதற்கு வளி என்றும் Wind என்பதற்குக் காற்று என்றும் கூறியதற்குக் காரணம் கலைச்சொல்லாக்கத்தின் கோட்பாடு தெளிவுபடுத்தப்பட்டு அதன் அடிப்படையில் கலைச்சொல் உருவாக்காததுதான் அப்படி செய்யாவிட்டால் தரப்படுத்தும்போது இந்தக் கோட்பாட்டை மனதில கொண்டு மேற்கூறியபடி திருத்தம் செய்யவேண்டும்

5 தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் அறிவியல் தமிழ்த்துறையினர் நடத்திய 'அறிவியல் தமிழ் அமைப்பு' என்ற கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரை இது மொழியியல் 11 43-82(1988) வெளிவந்தது

# 3. கலைச்சொல்லாக்கமும் தரப்பாடும்

நாடு முழுவதும் புதிய கல்வித்திட்டம் பற்றி விவாதம் நடந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் மொழியியல் வல்லுநர்களாகிய நாம் இங்கே கூடி மொழியியல் வளர்ச்சி, அதன் மூலம் மொழி வளர்ச்சி என்ற ஆக்கப்பணிக்கு அடிகோலும் வகையில் விவாதிக்க இருக்கிறோம்

புதிய கல்விக் கொள்கையின் அடிநாதம் எல்லோரையும் கூடியவரையில் கற்றவர்களாக்கி அவர்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் நல்ல வாழ்வுக்கும் ஊன்றுகோலாகவும் துணையாகவும் இருக்க வேண்டும் என்பதுதான் எனவே, இன்றைய கல்வித்துறை அறிஞர்களின் பணி, கடமை அதிகரித்துள்ளது பொது நிலையில் விஞ்ஞான உணர்வையும் விஞ்ஞான அறிவையும் பரவலாக்குவது உயர்மட்டத் தாரையும் பொதுமக்களையும் ஒன்றுசேர்க்கவல்லது; தொழில் வளர்ச்சிக்கு துணைசெய்வது; இதன்முலம் பொது மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவது இந்த மாபெரும் பணியில் மொழியியலாரின் கடமை என்ன? பண்டித ஜவஹர்லால் நேரு

> நாட்டின் முன்னேற்றம் பொது மக்களிடையே விஞ்ஞான அறிவு பரவுவதைப் பொறுத்தே உள்ளது. அதற்கு நம்முடைய மொழிகள் பொது மக்கள் மொழியாகச் செயல்பட வேண்டுமே தவிர புலமை பெற்ற சிலரின் மொழியாக ஆகக்கூடாது.

என்று கூறியுள்ளது நினைவு கூரத்தகுந்தது இந்தக் கருத்துகளை இந்த நூற்றாண்டு ஆரம்பத்திலே மகாகவி பாரதியார் சொல்லியுள்ளார்

> காலம் மாறமாற பாஷை மாறிக் கொண்டு போகிறது. பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன. புலவர்கள் அந்த அந்தக் காலத்துச் சனங்களுக்குத் தெளிவாகத் தெரியக்கூடிய பதங்களையே வழங்க வேண்டும்.

என்பது மொழியை எளிமைப்படுத்துவது பற்றிய பாரதி கருத்து. சொல்லாக்கம் பற்றியும் அதற்கும் சமுதாயத்துக்கும் உள்ள உறவு பற்றியும் அவருடைய கருத்தும் இங்குக் குறிப்பிடத் தகுந்தது.

> மனுஷ பாஷைகள் மனுஷ வாழ்க்கையோடு ஒட்டி உடன் வளர்ந்த பொருட்கள் அல்லவோ? தலைமுறை தலைமுறையாய் எத்தனையோ நூற்றாண்டுகளாக ஒரு நாட்டார் பேசிவரும் பாஷை அவர்களின் உயிரோடு ஒன்றிவிடுகின்றது. மனித அறிவு வளர்ச்சிக்குப் பாஷை ஒரு கண்ணாடி. ஒரு நாட்டில் அறிவு வளர்ந்து கொண்டு வரவர அந்நாட்டின் பாஷையும் விசாலம் அடைந்து வருகிறது ... இந்த நாட்டார் பொதுவாக அறிவு சுருங்கிப்போய் இருக்கிறார்கள். இதற்குப் பாஷை என்ன செய்யும்? .. நீராவியினால் ஓட்டப்படும் ரயில் வண்டி இந்தியாவில் வழக்கமாயிருக்கிறது. இப்போது பொது ஜனங்கள் அதற்கு வார்த்தை ஏற்படுத்திக் கொள்ளாமலா இருக்கிறார்கள்? மின்சார சக்தியால் தந்தி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்குத் தமிழ் வார்த்தை உண்டாக்கிக் கொள்ளவில்லையா? கோவணம் இல்லாத நிர்வாண தேசத்தாரின் பாஷையிலே பட்டு அங்கவஸ்திரத்துக்குப் பெயர் கிடையாது என்றால் அதற்கு அவர்களுடைய பாஷை மேல் என்ன குற்றம் இருக்கிறது? துணியைக் கொண்டு கொடுத்து வழக்கப்படுத்தினால் முறையே வார்த்தைகளும் உண்டாக்கிக் கொள்வார்கள். தமிழ் நாட்டில் தொழில் வகைப்பாடும் ஆலோசனை மிகுதியும் ஏற்பட்டால் தமிழ் பாஷை அன்றைக்கே வளர்ந்துவிடும்.

என்பதே அந்த வாசகம். இங்கு இரண்டு உண்மைகள் சுட்டிக்காட்டத் தகுந்தவை. அவையாவன: (1) மொழி வளர்ச்சி சமுதாய வளர்ச்சியை ஒட்டியது; அல்லது மொழி வளர்ச்சி சமுதாய வளர்ச்சியில் அடங்கும். (2) பொருள் - சிறப்பாக உருவப் பொருள் தெரிந்தால் பொது மக்களே சொற்களைப் படைத்துக் கொள்வார்கள். உண்மையில் விஞ்ஞான - தொழில்நுட்ப அறிவு என்பது நுண்நிலையிலும் அமையலாம். அதற்கு எப்படிப் புதுச் சொற்கள்

பொதுமக்களால் படைக்க முடியும்? என்ற கேள்வி எழும். 'தொழில் வகைப்பாடும் ஆலோசனை மிகுதியும் ஏற்பட்டால் தமிழ் .பாஷை அன்றைக்கே வளர்ந்துவிடும்' என்று பாரதியார் கூறுவது புறச்சாதனங்களான அறிவு வளர்ச்சியை மட்டும் அல்லாமல் அகச் சாதனங்களான அறிவு வளர்ச்சியையும உணர்ந்திருக்கிறார் என்பதைப் புலப்படுத்துகிறது இயல் வல்லுநர்களால் கலைச்சொல்லாக்கப் படுவதை இது குறிக்கும்.

எனவே, பலதுறை அறிவு தமிழில் வளருவது சமுதாய வளர்ச்சிக்குத் துணை செய்யும் என்பதில் ஐயமில்லை. ஆகவே இன்று நாம் ஒன்றுகூடியிருப்பதற்குக் காரணம் மொழியியல் கலைச் சொல்லாக்கம் பற்றியும் அவற்றைத் தரப்படுத்துவது பற்றியும் சிந்தித்துச் சில முடிவுக்கு வருவதற்குத்தான் இது மொழியியல் கல்வி பரவவும், அதன் பயனாக மொழி பற்றிய சிந்தனைத் தெளிவு பிறந்து தமிழை ஒரு செய்திப் பரவல் தொடர்பு சாதனமாக ஆக்கவும், அதன் மூலம் மக்கள் வாழ்க்கை வளத்துக்கு மறைமுகமாக உதவவும் வழி வகுக்கும் என்ற சமுதாய உணர்வோடு செயல்பட வேண்டும்.

நாம் விவாதிக்க எடுத்துக் கொண்ட பட்டறைப் பொருள் பற்றிய சில தனிச் சிறப்புகளை உங்கள் நினைவிற்குக் கொண்டுவர விரும்புகின்றேன் ஒன்று தாய்மொழி மூலம் பல விஞ்ஞானப் பாடங்களை மாணவர்கள் படிக்கவும், பொதுமக்கள் விஞ்ஞானக் கருத்துகளை அறிந்து கொள்ளவும் பல துறை அறிஞர்கள் பல காலமாகப் பாடுபட்டு வருகிறார்கள் ஆனால் இப்பொழுதுதான் இந்த முயற்சியில் மொழியியலின் தேவையை உணர்ந்து வருகிறார்கள் மொழியியலாளரும் சமீப காலமாகத்தான் அறிவியல் கலைச் சொல்லாக்கத்தில் அக்கறை காட்டி வருகிறார்கள் இந்தச் சமயத்தில் நாம் நம்முடைய துறைக்குரிய பிரச்சினையை ஆராய முதன்முதலாகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில கூடியிருக்கிறோம் இது ஓரளவு சுயநலம் போலத் தோன்றினாலும் - குறுகிய நோக்கு என்று கருதப்பட்டாலும் நம்முடைய பட்டறை வெற்றிகரமாக அமையுமானால் பரந்த அளவுள்ள நன்மைகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது ஒரு துறை பற்றிய - சிறப்பாக மொழியியல் கலைச் சொல்லாக்கம் பற்றிய ஆழ்ந்த விவாதம் கலைச் சொல்லாக்கத்தில் உள்ள பல பிரச்சனைகளைத்

தெளிவுபடுத்தும்; கருத்தைக் கூர்மை ஆக்கும் அதாவது நாம் நம்முடைய பிரச்சனைகளைப் பொதுமைப்படுத்திப் பிற துறையினருக்கு வழிகாட்டும் வகையில் விவாதித்து முடிவுக்கு வரவேண்டும்.

மொழியியல் கலைச் சொல்லாக்கத்தின் இன்னொரு சிறப்பும் குறிப்பிடத் தகுந்தது. மொழியியல் துறை பல பிற விஞ்ஞானத் துறைகளைப் போல முற்றும் புதிய துறை அல்ல; இந்தியாவிலும் சரி, தமிழகத்திலும் சரி, மொழியியல் ஆய்வுதான் முதலில் வளர்ந்த விஞ்ஞானத்துறை. ஆனால் அந்தத் துறை தனிப்பட்ட மொழியின் அமைப்பை விளக்கும் இலக்கண ஆய்வாக, இன்றைய மொழியியல் நோக்கில் கூறுவதானால் வருணனை முறை ஆய்வாக மட்டுமே மலர்ந்து, போன நூற்றாண்டுவரை தளர்நடை போட்டு வந்தது. பிற விஞ்ஞானத் துறை மேலை நாட்டுத் தாக்கத்தால் இங்கு ஏற்பட்டது போல, மொழியியல் துறை முதலில் திராவிட மொழி ஒப்பிலக்கண ஆராய்ச்சியாகத் தொடங்கி இந்த நூற்றாண்டில் பல உள் துறைகளைக் கொண்டும் பல கோணங்களைக் கொண்டும் ஓட்டமும் விறுவிறுப்பும் உடையதாக அமைந்துவிட்டது. அதுதான் புதிய கலைச் சொற்கள் படைக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாக்கியுள்ளது. எனவே, இந்த வரலாற்றுப் பின்னணியும் வளர்ச்சியும் கூடத் தனி ஆய்வுக்கு உரியது. பழைய மரபிலுள்ள நன்மைகளை எடுத்துக் கொண்டு புதிய மரபுகளை ஏற்றுக்கொள்ளத் தயங்கும் தயக்கத்தை நாம் போக்க முன்வர வேண்டும்.

கலைச் சொல்லாக்கம் பற்றிய பொதுக் கோட்பாடுகளைப் பலரும் விவாதித்துள்ளார்கள். ஒரு மொழியிலுள்ள சொற்களைப் புதிய பொருளில் கையாளுதல் (மின் என்பது மின்னலைக் குறிக்க இன்று மின்சாரத்தைக் குறிக்கப் பயன்படுத்துதல்); புதிய விகுதிகளைச் சேர்த்துப் புதிய சொல் உண்டாக்கிப் புதிய கருத்தை விளக்குதல் (ஒலி 'Sound'-ஒலியன் 'Phoneme' வளி 'காற்று' - வளியம் 'gas');புதிய தொகைச் சொற்களை உண்டாக்குதல் (ஒளி 'Light' ஒளிச்சேர்க்கை 'Photosynthesis'; ஒலியியல் 'Phonetics'; புகைவண்டி 'Train' அனைத்துலகச் சொற்களையும் கடனாக ஏற்றுக் கொள்வது (ஓல்ட், வாட் போன்றவை) ஆகிய முறைகளில் கலைச்சொல் ஆக்க வேண்டும் என்பதை எல்லோரும் பல காலமாகச் சொல்லி வருவதுதான். இங்குள்ள முக்கிய பிரச்சனை, தனிப்பட்ட சொற்களுக்குரிய கலைச் சொல்லை ஆக்கும்போது எந்த முறையில் ஆக்குவது என்பதும் - முன்னர் ஆக்கப்பட்ட சொற்களின்

பொருள் விளங்கும்படி அமையவில்லை என்று கருதிப் புதிய சொற்களைப் படைக்க முன்வருவதும்தான் மொழித் தூய்மையின் பெயரால் எல்லோருக்கும் தெரிந்த எளிமையான சொற்களைத் தாய்மொழிச் சொற்களாகத் - தனிச் சொற்களைத் தொகைச் சொற்களாக மாற்றும் முயற்சி நடைபெற்று வருவதும் அறிவியல் நோக்கில் விவாதத்துக்கு உரியது

கலைச்சொல்லாக்கத்தில் முக்கியமாக மொழியியல் நோக்கில் எல்லா அறிவுத்துறையிலும் கவனிக்க வேண்டிய சில பொதுமைகள் உண்டு எழுத்தியல், சொல்லியல், தொடரியல், அகராதியியல் ஆகிய நான்கும் மிக முக்கியமானவை எழுத்தியலில் உள்ள சிக்கல்களை எழுத்துச் சீர்திருத்தவாதிகள் எடுத்துக்காட்டியுள்ளார்கள் அதைவிட முக்கியமானது கலைச்சொல் ஆக்கும் முறைதான்

சொல்லியலைப் பொறுத்தவரையில் முன்னொட்டு களையும் பின்னொட்டுகளையும் வரையறுக்க முடியுமானால் ஓர் அடிப்படைச் சொல்லிலிருந்து பல சொற்களை எளிதாகப் படைக்க முடியும் பொதுவாக ஒரு உண்மை குறிப்பிடத் தகுந்தது மூல மொழியில் பகுதியிலோ விகுதியிலோ வடிவ ஒற்றுமை இருந்தால் தாய்மொழியிலும் இந்த வடிவ ஒற்றுமை இருக்கும்படி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை; மாறாக மூலமொழியில் ஒற்றுமை இல்லாவிட்டாலும் தாய்மொழியில் ஒற்றுமை பெற வாய்ப்பு உண்டு. Hydel power station, Thermal power station என்பன முறையே புனல் மின் நிலையம், அனல் மின் நிலையம் என்று படைத்துள்ளதில் மூல மொழியில் இல்லாத ஒலி ஒற்றுமை தாய்மொழியில் ஏற்பட்டுள்ளது என்றாலும், ஒற்றுமை வேண்டும் என்பதைக் கூடிய வரையிலே நடைமுறைக் கொள்கையாக அமைத்துக்கொள்ள வேண்டும் அடுத்து, தரப்படுத்துவதில் கவனிக்க வேண்டிய சில கருத்துகளைப் பார்ப்போம்

Sub-என்பதற்கு மொழியியல் அகராதியில் உள் - , அடி - என்ற இரண்டு சொற்கள் கையாளப்பட்டுள்ளன இங்கு அடி என்பது Sub-conscious என்ற சொல்லிலே மட்டும் பயன்படுவதால் அதையும் உள்மனம் என்று அமைப்பது சரியாக இருக்கும் இங்கு ஓர் ஒட்டு எங்கும் அமைய வேண்டும் என்ற அடிப்படையே இந்த மாற்றத்து க்குக் காரணம் Semi என்பது Semivowel என்பதில் அரை உயிர் என்றும் Semi plosive என்னும் போது அடைப்பு உரசொலி என்றும்

ஆக்கப்பட்டிருப்பது ஏற்றுக்கொள்ளத் தகுந்தது தான் இங்கு ஒட்டு ஒன்றாக இருந்தாலும் கருத்தை ஒட்டியே வெவவேறாக ஆக்கப்பட்டிருக்கிறது ஏற்புடையதுதான்

Standardisation என்பதற்கு நிலைபேறாக்கம். மொழியியல் நிலைபேறு, நிலையாக்கம், செம்மொழியாக்கம் போன்ற பல தொகைகளும் Classicalisation என்பதற்குச் செம மொழியாக்கம் என்ற தொகையும் தரப்பட்டுள்ளன அவை இரண்டு வேறுபட்ட கருத்துகள் ஆனதால் பின்னதை செம்மையாக்கம் என்றும் முன்னதை நிலையாக்கம் என்றும் ஏற்றுக் கொள்ளலாம் இந்த உண்மைப்பொருள் ஒரு துறைசார்ந்த பல நுண்ணிய கருத்து வேறுபாடு உடைய பொருளுக்கும் வேறு வேறு பெயர்கள் வைக்க வேண்டும் என்பதை வற்புறுத்தும் இதையே அறிவாக்கம் என்பார்கள் Abastract, Summary, Abbrevation என்ற மூன்று கருத்துக்குச் 'சுருக்கம்' என்ற ஒரே சொல்லைப் பயன்படுத்தாமல வேறு வேறு சொல் ஆக்குவது அவசியம் இதுவே சொற்களஞ்சியம் பெருகவும் மொழி நுண்மை பெறவும் வழி

தொடர்களைக் கையாளும்போது தொகையாக இருக்கும்படி செய்வது ஒரு சொல் என்ற எண்ணத்தைத் தோற்றுவிகக வல்லது Theory of language என்பது 'மொழி பற்றிய கொள்கை என்று ஆக்கப்பட்டிருக்கிறது அது தொடர் (Phrase) ஆகும் ஆகவே 'மொழிக் கொள்கை' என்று அது அமையுமானால தொகையாக ஆகி ஒரு சொல் போல அமையும் தொடரில் பொருள் அழுத்தம் உடைய பகுதியை ஒட்டிக் கலைச் சொலலாக்கம் அமைய வேண்டும Prehistoric age, prehistoric archaeology, prehistoric period என்பனவற்றில் Prehistoric எனபதே அழுத்தம பெறுவது அதற்கேற்ப தமிழாக்கம் காணபபடவிலலை

Prehistoric age - முன் வரலாற்றுக் காலம்

Prehistoric archaeology - வரலாற்றுக்கு முற்பட்ட தொல்பொருளியல்

Prehistoric period - வரலாற்றுக்கு முறபட்ட காலம்

இங்கு மூன்று சொல்லும் மூன்று வகையாக ஆக்கப்பட்டிருந்தாலும் முதல் இரண்டிலும் ஓரளவு ஒற்றுமை உண்டு மேலும் Age. period என்ற இரண்டு சொல்லும் ஒரே முறையில் ஆக்கப்பட்டிருக்கிறது இங்கு Prehistory என்ற மற்றொரு பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது Prehistory என்பது அரசியல், சமுதாய, மொழி வரலாறுகளில் காணப்படும் கருத்து. எழுத்துச் சான்றுகள் கிடைக்கும் காலத்துக்கு முற்பட்ட கால வரலாறே Prehistory அது முன் வரலாற்றுக் காலமாகும் எனவே ஒரு புதுக்கருத்து என்ற முறையில் ஒரே முறையில் எங்கும் தமிழாக்குவது நல்லது எனவே, மேலே குறிப்பிட்ட மூன்று சொற்களையும் முறையே முன் வரலாற்றுக் காலம், முன் வரலாற்றுத் தொல்பொருளியல், முன் வரலாற்றுக் கட்டம் என்று கூறலாம் இங்கு Prehistory என்பது ஒரே முறையில் ஆக்கப்பட்டிருப்பதோடு Age. period என்பனவும் வேறுபடுத்தப் பட்டிருக்கின்றன பின்னது கொஞ்சம் மாறுபட்ட ஒரு பொருளைக் குறிப்பதால் அறிவாக்கம் என்ற முறையில் வேறு வேறு சொல்லாக்கப் பட்டிருக்கிறது

Proto- என்ற சொல் மொழி வரலாற்றில் பயன்படுத்தப்படும் ஒரு முன்னொட்டு தமிழ்மொழி வரலாறு பற்றிப் பேசும்போது Proto - Dravidian Proto South Dravidian என்ற கருத்து அடிக்கடி குறிப்பிடப்படும்

Proto Dravidian - முந்தைத் திராவிடம்,
மூலத்திராவிடம்,
திராவிடத் தாய்மொழி,
தொல் திராவிட மொழி.
பழந்திராவிட மொழி
முன்னைத் திராவிடம்.

Proto South Dravidian - தென் திராவிட மூல மொழி

இங்கு Proto என்பதற்குப் பலவகையான சொல் கையாளப்பட்டிருப்பதோடு அது ஒரே இடத்தில் வராமல் முன்னும் பின்னும் வந்துள்ளது சொல்லும் தொடரியலும் மாறுபட்டுள்ளன Proto என்பது முக்கியமான கருத்து ஆனதால்

ஒரே ஒட்டை முதல் சொல்லாகப் பயன்படுத்தலாம் அவையாவன முறையே தொல் திராவிடம், தொல் தென் திராவிடம்.

தமிழ் ஒரு வளரும் மொழி என்பதற்கு ஏற்ப கலைச் சொல்லாக்கத்திலும் மொழி தொடர்பான பிறவற்றிலும் (சொல்லெழுத்து, புணர்ச்சி) உறழ்ச்சி அதிகமாக இன்று காணப்படுகிறது எது சரியானது, பொருத்தமானது என்ற சந்தேகம் பலருக்கு இருந்தும் வருகிறது தரப்படுத்துவதும் அதை அகராதியாக வெளியிடுவதும்தான் பலரைத் தமிழ் எழுத முன்வரத் தூண்டும்

கலைச் சொல்லாக்கமும் தரப்படுத்துவதும் அறிவுத் துறையைச் சார்ந்தவை கருத்துப் பரிமாற்றத்துக்கும் கருத்து வளர்ச்சிக்கும் அதாவது புதிய கருத்துகள் உருவாவதற்கு வழி வகுக்கும்

நிலையாக்கம் மொழியியல் துறையிலும், மொழியிலும், மொழி அமைப்பிலும் செய்யப்பட வேண்டும் எனவே மொழியியலாளர்களாகிய நாம் மொழியியலில் மொழி அமைப்பு, மொழி வரலாறு போன்ற கோட்பாட்டு நிலையில் சிறப்பாகக் கருதப்படுகிற துறையை மட்டும் அல்லாமல் உடனடியாக மக்களுக்குப் பயன் அளிக்கவல்ல பயிறறுமொழி, தாய்மொழிக் கல்வி, கலைச்சொலலாக்கம், மொழிப் புதுமையாக்கம் ஆகிய பயன்பாட்டு மொழியியலிலும் உழைக்க முன்வர வேண்டும் இங்கு நாம் சமுதாயத்தோடு மாறுபட நேரிடலாம் அறிவு வழிநின்று கருத்தை விளக்கிப் பொதுமக்களை நம் பக்கம் இழுக்க வேண்டும்

இந்திய அரசின் ஆட்சி மொழிக் குழு மொழியியலாளர் பற்றிக் கூறியது இங்குப் பொருந்துமாயினும் அதனைக் கொஞ்சம் மாற்றிக் கூறுவது மிகவும் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன் திருத்தப்பட்ட வாசகம் பின் வருமாறு [2]

இப்பொழுது தமிழ் மொழியியலாளருககு ஒரு சவால் விடப்பட்டுள்ளது, அதுபோல நல்ல சந்தரப்பமும் அமைந்துள்ளது தமிழர்கள அறிவியலைச் சுலபமாகக் கற்றுக் கொள்வதற்கும், சமுதாயத்தில் அறிவியல் அறிவு பரவி விஞ்ஞான மனப்பானமை

பெருகுவதற்கும் வழி செய்யும் வகையில் தமிழ் மொழியியலாளர்கள் அறிவியல் தமிழை உருவாக்க வேண்டும். வரலாற்றில் இதுவரை மொழி நூலாருக்கும் மொழியியலாளருக்கும் இப்படிப்பட்ட கடமை ஆற்றும் சூழல் ஏற்படவில்லை எனவே கிடைத்தற்கு அரிய இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தமிழ் மொழியை வளப்படுத்துவோமாக

## அடிக்குறிப்புகள்

1 இந்தக் கட்டுரை தமிழ்ப் பல்கலைக்கழக மொழியியல் துறை *16-8-86* முதல் *20-8-86* வரை நடத்திய 'தமிழில் மொழியியல் கலைச் சொற்களைத் தரப்படுத்தலும் இயற்றுதலும்' என்ற தலைப்பில் நடத்திய பணிப்பட்டறையின் போது தொடக்க விழாவில் ஆற்றிய சிறப்புரை, களஞ்சியம் *3222-8(1988)* - இல் வெளியிடப்பட்டது

மூலவாசகம் :

2 Here is a tremendous challenge to the Indian linguists and a like opportunity to help inforegoing linguistic ties to match and sustain the cultural and political unities of the Communities of Indian people Nowhere in history could Philogists and linguists have been called to the greater dutv

# 4. அறிவியல் தமிழ்ப் பாடம்

அறிவியல் தமிழ் என்பது தமிழ்மொழிக்கு ஒரு புதிய துறை என்பது எல்லோரும் அறிந்ததே அதனால் முத்தமிழ் என்ற வழக்கை ஒட்டி இன்று சிலர் நால் (வகைத்) தமிழ், ஐந்தமிழ் என்றெலலாம் புதிய வழக்கை ஏற்படுத்தி வருகிறார்கள் இதனுடைய உட்கிடை என்ன என்பது அறியத் தகுந்தது

மொழியியலார் ஒரு மொழி பல துறைகளில் பயன்படுத்துவதையும் அந்தத் துறைகளுக்கு இடையே மொழியைப் பயன்படுத்தும் முறையில் காணப்படும் மாறுபாட்டையும் ஒட்டித் துறைவழக்கு (Register) என்ற புதிய கருததை உருவாக்கியுள்ளார்கள் அதே சமயத்தில் மொழியைப் பயன்படுத்துவோரை ஒட்டிக் காணப்படும் மாறுபாட்டைக் கிளைமொழி (Dialect) என்றும் அவர்கள் குறிப்பிடுவார்கள்

கிளைமொழி வழக்கு என்பது மொழியியல் ஆராய்ச்சியின் ஒரு கூறு என்பது அனைவரும் அறிந்ததே ஆனால் துறைவழக்கு என்பது புதிய கருத்து ஆனதா ல் அது விளக்கத்துக்கு உரியது

தமிழை முத்தமிழ் என்று குறிப்பிடுவது பழைய மரபுதான் ஆனாலும் அது பொருளை ஒட்டி இயல், இசை, நாடகம் என்று செய்யப்பட்டதாகவே கருத வேண்டி யிருக்கிறது இவைகளுக்கு இடையே மொழி அமைப்பிலோ, மொழிப் பயன்பாட்டிலோ உள்ள மாறுபாட்டை யாரும் விளக்கவில்லை அதே சமயத்தில் தமிழில் மிகப் பழைய நூலான தொல்காபபியத்தில் துறைவழக்கு பற்றிய குறிப்பு இலைமறை காயாக இருப்பதாகவே தோன்றுகிறது

தொல்காப்பியர் இலககியத் தமிழுககு இலக்கணம் எழுதினாலும் இலக்கியத் தமிழுக்கும் இலக்கணத் தமிழுக்கும் உள்ள மாறுபாட்டைக் குறிப்பிட்டுளளார் இலக்கியம் இலக்கணம் என்பன இரண்டு வேறுபட்ட துறைவழக்காகக் கொளளத் தகுநதவை உதாரணமாகத் தொல்காப்பியர் எழுத்ததிகாரததில் சொல்லுககு முதலில் வரும் எழுத்துகளைப் பட்டியல் போட்டுச் சொல்லிறு - டு கடை சியாக,

*முதலா என தம்பெயர் முதலும்.*

என்று (எழுத்து66) ஒரு சூத்திரம் செய்துள்ளார் அதாவது சொல்லுக்கு முதலில் வராத எழுத்துகள் தம்முடைய பெயரைக் குறிப்பிடும்போது முதலில் வரும் என்பதே கருத்து இங்குத் 'தம்பெயர் சொல்வது' என்பது இலக்கண வழக்கைக் குறிக்கும். அதனால் இலக்கணத்தில்

*ஙகார முன்னர் மகரங் குறுகும் (52).*
*டகார ணகார நுனிநா அண்ணம் (91).*

என்றெல்லாம் இலக்கிய மொழியில் சொல்லுக்கு முதலில் வராத எழுத்துகளைச் சொற்களாக்கிப் பயன்படுத்தியுள்ளார் இங்கு கருவிமொழிக்கும் (Meta language) - இலக்கணமொழிக்கும் இலக்கணம் எழுதியது சிறப்பானது இதுவே தமிழில் இரண்டு துறைவழக்கு இருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்துகிறது

தொல்காப்பியர் இன்னொரு இடத்தில் இசைத் தமிழுக்கும் இலக்கணத் தமிழுக்கும் உள்ள மாறுபாட்டை விதந்து கூறியுள்ளார்

*மொழிப்படுத்து இசைப்பினும் தெரிந்துவேறு இசைப்பினும்*
*எழுத்தியல் திரியா என்மனார் புலவர்*

என்ற (எழுத்து 53) சூத்திரததால் எழுத்துகளைத் தனியே உச்சரித்தாலும் சொற்களில் வைத்து உச்சரித்தாலும் இவைகளுக்குரிய மாத்திரை மாறுபடாது என்று கூறியவர் இன்னொரு சூத்திரத்தில் (எழுத்து33),

*அளபு இறந்து உயிர்த்தலும் ஒற்றுஇசை நீடலும்*
*உளவென மொழிப இசையொடு சிவணிய*
*நரம்பின் மறைய என்மனார் புலவர்*

என்று கூறியுள்ளார் அதாவது இசைத் தமிழில் எழுத்துகள் தங்களுக்கு உரிய மாத்திரையின் அளவிலிருந்து மாறுபட்டு அதாவது அதிகப்பட்டு உச்சரிக்கலாம் என்று பொருள் இங்கு இலக்கியத் தமிழுக்கும் இசைத் தமிழுக்கும் மொழி அமைப்பில் குறிப்பாக ஒலி அமைப்பில் உள்ள மாறுபாடு சுட்டிக் காட்டப் பட்டிருக்கிறது இந்த மாறுபாடு மிகச் சாதாரணமானதாகவும் எல்லோருக்கும் தெரிந்தது ஆகவும் இருந்தாலும் மொழி பல

துறைகளில் பயன்படுத்துவதற்கு ஏற்ப, மொழி அமைப்பு மாறுபடுகிறது; மாறுபடலாம் என்று தொல்காப்பியர் உணர்ந்ததையே இந்தச் சூத்திரம் புலப்படுத்துகிறது.

எனவே இன்று நாம் அறிவியல் தமிழ் என்ற புதிய துறையை எற்படுத்தி அதற்கு ஏற்ப மொழியில் நெகிழ்ச்சி ஏற்படுத்திக் கொள்ளத் தயங்கக் கூடாது. சில புதிய மரபுகளை உண்டாக்கிக் கொள்ளத் தைரியமாய் முன்வர வேண்டும்.

அறிவியல் தமிழ் என்ற புதிய துறைவழக்கு இன்று *100* ஆண்டு காலப் பழமையை உடையது (சுந்தரம், *1983*) என்றாலும் அது முழுமையாகவும் செழுமையாகவும் வளருவதற்கு எத்தனையோ தடைகள் இருக்கின்றன; பிரச்சனைகள் உள்ளன. அவைகளை ஓரளவு முழுமையாக குழந்தைசாமி *(1985)* 'அறிவியல் தமிழ்' என்ற நூலில் எழுதி விளக்கியுள்ளார். கலைச் சொல்லாக்க முறை, எழுத்துச் சீரமைப்பு ஆகிய இரண்டு பிரச்சனைகளை அவர் விரிவாக ஆராய்ந்தாலும் அதிலுள்ள முழுமையான தேவைகளை உணர்ந்திருக்கிறார் என்பது கீழ்க்கண்ட வாக்கியத்தால் அறியலாம்.

> தமிழ் தலை சிறந்த இலக்கிய மொழி ... ஆனால் புதினம் (Novel) எனப்படும் இலக்கியப் பிரிவு முன்பு தமிழில் இல்லை ... இலக்கிய மொழியான தமிழில் ஒரு புதிய இலக்கியத் துறை உருவாக்குவதற்கே அரை நூற்றாண்டு தேவைப்பட்டது. பலர் பல புதினங்கள் எழுதிய பின்னர்தான் அத்துறை உருப்பெற்றது... கணிதம், இயற்பியல், பொறியியல், மருத்துவம் போன்ற அறிவியல், தொழில்நுட்பத் துறைகட்குத் தனி நடை உண்டு, சொல்லமைப்பு உண்டு; எனவே அறிவியல் நூல்களைத் தமிழில் எழுதுவது என்பது தமிழில் அறிவியல் இலக்கியம் படைப்பதாகும். அதற்கான இலக்கணம் உருவாக வேண்டும். பாரம்பரியம் உருவாக வேண்டும்.

என்று குழந்தைசாமி *(1986: 6)* கூறுவது நாம் மேலே குறிப்பிட்ட துறைவழக்கு பற்றிய பொது விளக்கமாகக் கொள்ளலாம். அறிவியல் தமிழைச் சரியான முறையில் உருவாக்குவதும், அறிவியலைப் பற்றிய

சில பொது உண்மைகளை உணர்ந்து கொள்வதும், அறிவியல் தமிழ் வளர்ச்சிக்குச் சில வழிமுறைகளைப் புலப்படுத்தும்.

நூலாராய்ச்சியில் பாடம் அல்லது பனுவல் (Text) என்றும் உரைப்பாங்கு அல்லது பொழிவு (Discourse)என்றும் வேறுபடுத்திச் சில உண்மைகளை அறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள்

அறிவியல் உரைப்பாங்கு (Scientific discourse) உலகளாவியது. அதாவது அறிவியல் உரைப்பாங்கு இலக்கியம், இலக்கணம் போல ஒவ்வொரு மொழியும் தனித்தனி மரபுகளைக் கொண்டதல்ல அறிவியல் உலகப் பொதுமை ஆனதால் மொழி, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றில் மாறுபட்ட மனிதர்கள் கூட விஞ்ஞானி என்ற முறையில் அறிவியல் உரைப்பாங்கில் சில பொதுப் பண்புகளையும் மரபுகளையும் பின்பற்றுகிறார்கள் அறிவியலை விளக்கும்போது காரண காரியத் தொடர்பு, கருதுகோள் அமைக்கும் முறை ஆகியவை எல்லா நாட்டினருக்கும் மொழியினருக்கும் பொதுவாக அமைந்துள்ளன

அறிவியல் உரைப்பாங்கு ஒவ்வொரு மொழியிலும் அறிவியல் பாடமாக (Text) ஆகும்போது பாடமாக்கம் (Textualisation) என்ற முறையும் உள்ளதாக மொழியியல் அறிஞர்கள் கருதுகிறார்கள் (உம். Widdowson, 1980). எனவே அவர்கள் கருத்துப்படி *1.* உலகப் பொதுமையான அறிவியல் உரைப் பாங்கு (Scientific discourse), *2* அந்த விளக்கத்தைப் பாடமாக்குமுறை (Textualisation) *3* அறிவியல் பாடம் (Scientific text) என்ற மூன்று நிலை உள்ளன இங்கு அறிவியல் பாடம் குறிப்பாக அறிவியல் தமிழ்ப் பாடம் பற்றிய சில கருத்துகளைப் பார்ப்போம்

அறிவியல் உரைப்பாங்கிலும் இரண்டு வகை காணப்படுகிறது ஒன்று அறிவியல் ஒரு பாடம் (Science as a subject) என்பது அது அறிவியல் பாட நூல்களைத் தயாரிப்பது பற்றியது மற்றொன்று அறிவியல் ஒரு துறை (Science as a discipline) என்பது இது அறிவியல் ஆய்வுக் கட்டுரைகள் எழுதுவது இரண்டும் இரண்டு துருவம் போன்றது என்றாலும், அவைகளுக்குள் தொடர்பு இல்லாமல் இல்லை எப்படியென்றால் அறிவியல் ஒரு துறை என்பதுதான் பின்னால் அறிவியல் பாடமாக அமைகிறது என்று சுருக்கமாகச் சொல்லலாம் அதாவது அறிவியல் கண்டுபிடிப்புகள் எல்லோராலும்

ஒத்துக் கொள்ளப்பட்ட பிறகு அறிவியல் பாடமாக ஆகிவிடுகிறது; அறிவியல் பாடத்தில் அது சேர்க்கப்பட்டு விடுகிறது.

பொதுவாக அறிவியல் பாடம் மொழிக்கு மொழி மாறுபட்டது என்பது தெளிவு ஆனாலும், அந்தப் பாடங்களில் உபயோகப்படுத்தப்படும் குறியீடுகள், சமன்பாடுகள் எல்லா மொழிக்கும் பொதுவானதாக இருக்கும் உதாரணமாக வேதியியல் பாடத்தில், •

$$S + O_2 > SO_2$$

என்றே வேதியியல் விதி குறிக்கப்பட்டிருக்கும் இதை வேதியியல் தெரிந்த பிற மொழியினரும் புரிந்து கொண்டுவிடுவார்கள் மேலும் இதை நிரூபிக்கப் பயன் படுத்தும சோதனைகளை விளக்கும்போது கையாளும் வரைபடங்களும் அட்டவணைகளும் கூட எல்லா மொழியினருக்கும் பொதுவானதே ஆகவே, ஒவ்வொரு மொழிக்கும சிறப்பானதாகக் கருதப்படும் அறிவியல் பாடத்திலும் பொதுமை உண்டு அதாவது, அறிவியல் பாடமொழி தெரியாவிட்டாலும் அறிவியல் அறிஞர்கள், குறியீடுகள், சமன்பாடுகள் மூலம அறிவியல் உண்மைகளை ஓரளவு உணர்ந்துகொள்ள முடியும் எனவே, அறிவியல்பாடம் என்பது மொழி வேறுபாடு உடையது ஆயினும் ஓரளவு பொதுமை உடையதாகவே இருக்கும் இதைத்தான் அறிவியல் தமிழ் பற்றிய பேசும பலரும குறியீடுகள், சமன்பாடுகள் போன்றவைகள் எல்லாம அனைத்துலக வழக்குகளையே தழுவிக்கொள்ள வேணடும் என்று சொல்லிவருகிறார்கள் இதனுடைய உட்கிடை என்ன?

அனைத்துலக குறியீடுகளையும் சமன்பாடுகளையும ஏற்றுக்கொள்ள வேணடும் என்று சொல்லும்போது அந்தக் குறியீடுகள் குறிக்கும் சொறகளையும் அனைத்துலக சொறகளாகவே ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படடு விடுகிறது அப்படியே எடுத்துக் கொண்டால்தான குறியீடுகளைச் சுலபமாகப் புரிந்துகொள்ள முடியும் என்ற நிலை ஏற்படும் என்று எண்ணத் தோன்றும் ஆனால ஆங்கில மொழியில அறிவியல் துறைக்காகப புதிய சொற்களைக் கற்றுக்கொள்ளவேண்டிய நிலை உள்ளது என்பது அறியத தக்கது

உதாரணமாக ஆங்கிலத்தில் 'இரும்பை' குறிப்பிட Iron என்ற சொல்லே பயன்படுகிறது ஆனால் இதற்கு வேதியியலில் Fe என்பதே குறியீடு இது Ferrum என்ற லத்தீன் மொழிச் சொல்லின் அடிப்படையில் உண்டானது ஆனாலும் Ferriferrous, ferricyanide போன்ற சொற்களும் ஆங்கிலத்தில் வழங்குவதால் ஆங்கில மாணவனுக்கு ஓரளவு கடினம் இருக்காது என்றே கருதவேண்டியிருக்கிறது ஆயினும் அறிவியலை • முதன்முதல் அறிமுகப்படுத்தும் பொது பொதுவழக்கில் இல்லாத புதிய சொல்லை அறிவியல் துறைக்காக மாணவன் கற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படுகிறது அப்படியே வெள்ளியைக் குறிக்க ஆங்கிலத்தில் சாதாரணமாக வழங்கும் Silver என்றசொல்லுக்குரிய வேதியியல் குறியீடு Ag. என்பது இதுவும் Argentum என்ற லத்தீன் மொழிச் சொல் அடிப்படையில் அமைந்ததே எனவே, ஆங்கிலமொழி தெரிந்தவரும் அறிவியல் துறையில், நுழையும்போது சில புதிய சொற்களைக் கற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகிறது ஆகவே நாமும் எல்லாக் கலைச் சொற்களுக்கும் தமிழப் பெயர்கள் உண்டாக்கிக் கொண்டு குறியீடுகளை மட்டும் அனைத்துலக வழக்குகளில் தக்கவைத்துக் கொள்ளலாம என்று நினைக்கலாம் ஆனால் எல்லாக் கலைச்சொற்களுக்கும் குறிப்பாக வேதியியல் தனிமங்களுக்கும் தமிழ்ச்சொல் கண்டுபிடிப்பது இயலாத காரியம் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது

எப்படியானாலும் அறிவியல் தமிழ்ப்பாடம் முழுமையும் தனித் தமிழாக இருக்க முடியாது; ஏனெனில் குறியீடுகளையும் சமன்பாடுகளையும் அனைத்துலக வழக்கில் ஏற்றுக் கொள்ளும் போது ரோம எழுத்துகளையும் பல குறியீடு களையும் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்

இந்தப் பொதுமையினால் ஏற்படக்கூடிய இரண்டு நன்மைகள் குறிப்பிடத் தகுந்தவை அவையாவன 1 இலக்கியங் களை மொழிபெயர்ப்பதை விட அறிவியல் நூல்கள் மொழி பெயர்ப்பது ஓரளவு எளிமையானது 2 அறிவியல் அறிவைப் பெருக்குவதற்குப் புதிய மொழியைக் கற்றுக் கொண்டு அந்த மொழியிலுள்ள அறிவியல் நூல்களைப் படித்துப் புரிந்து கொள்வது சுலபமானது

இந்தக் கருத்துகளில் தமிழ் அறிவியல் புதிய துறைவழக்கு என்பதற்கு ஏற்ப அறிவியல் தமிழ்ப் பாடத்தின் சிறப்பு பண்புகளைப் பார்ப்போம்

1 சொற்களஞ்சியத்தில் பல புதிய சொற்கள் சேர்க்கப்படுவது, அறிவியல் தமிழுக்காக புதிய சொற்கள் உருவாவது

2 மொழியில் முன்னரே உள்ள சொற்கள் அறிவியல் தமிழில் புதிய பொருளைப் பெறுவது

மின் - மின்னல் - மின்சாரம் - Electricity

வளி - Wind- காற்றிலிருந்து வேறுபட்டது

3 சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் பொருளுக்கு அறிவியல் நோக்கில் புதிய பெயர்கள் அமைத்தல், தாவரவியலில் அன்றாடம் நாம் வழங்கும் செடி கொடிகளுக்குப் புதிய பெயர்கள் வழங்குதல்; உப்பை சோடியம் குளோரைடு என்று வேதியியலில் குறிப்பிடுவது போன்றது

4 சொல்லியல் நிலையில் புதிய விகுதிகள் ஏற்பட்டுள்ளது மம் என்ற புதிய விகுதி அறிவியல் தமிழில் பெருவாரியாக வழங்குகிறது இதனுடைய மூலம் சரியாகத் தெரியவில்லை என்றாலும வன்மம் என்ற சொல் பேச்சு வழக்கிலேயே உள்ளது மட்டும் சுட்டிக்காட்டத் தகுந்தது

-மம் என்ற விகுதியை பெயரடையிலோ, வினையடையிலோ சேர்த்து பெயர்ச்சொற்கள் உண்டாக்குதல்

தனி - தனிமம் 'element

சேர் - சேர்மம் compound'

திண் - திண்மம் 'Solid'

பெயரச் சொல்லில் இநத விகுதியைச் சேர்த்து பொதுப் பொருள் ஏற்படுத்துதல்

கனி 'பழம்' - கனிமம் 'Metal'

நீர் - நீர்மம் 'Liquid'

மொழியியலில் - அன் விகுதி சேர்த்து நுண்பொருள் (Abstract) உணர்த்துதல்

ஒலி - 'Phone' ஒலியன் - 'Phoneme'

உருபு - 'Suffix' உருபன் - 'Morpheme'

எழுத்து - 'Letter' எழுத்தன் - 'Grapheme'

இந்தப் புதிய சொற்கள் புதிய மொழிகளின் அடிப்படை தனிமங்களை அல்லது கூறுகளைக் குறிப்பவை

இப்படி அறிவியல் கலைச் சொற்களை முன்னொட்டு, அடிச்சொல், பின்னொட்டு என்று பிரித்து வைத்துக் கொண்டு கலைச்சொல்லாக்கத்தை எளிமைப் படுத்தவேண்டும் புதிய சொல்லை உண்டாக்கிக் கொள்ளவேண்டிய திறனை அதிகரிக்க வேண்டும் அதற்கு அடிப்படையாக ஒவ்வொரு அறிவியல் துறையிலும் உள்ள கலைசசொற்களில் உள்ள அடிச்சொற்களையும் ஒட்டுகளையும் முடிந்த அளவு அதாவது பிறமொழி அகராதிகளில் உள்ளதையாவது எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும் உதாரணமாக மருத்துவக்கலை அகராதியில் சுமார் 30,000 சொற்கள் இருப்பதாகவும் அவை அனைத்தையும் 100 முன்னடைகளையும் 40 பின்னடைகளையும் உடல் உறுப்புகளின் பெயர்களையும் கொண்டது என்று கணக்கிடப் பட்டுள்ளது (கண்ணபிரான், 1986 33) இந்தத் துறையில் குழந்தைசாமியின் (1985) முயற்சியும் சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்தது

5 பேச்சுத் தமிழில் தமிழ் சொல்லமைப்பில் மாற்றம் ஏற்பட்டுளளது அதாவது எதிர்மறை என்ற இலக்கணக் கூறு வினைச்சொல்லில் மட்டும் பின்னொட்டாக அமைந்திருந்தது. இன்று பெயர்ச்சொல்லில் முன்னொட்டாக அமைந்து எதிர்மறை உண்டாகி உள்ளது நீதி-அநீதி; மானம் -அவமானம், அவச்சொல் போன்ற எதிர்மறை முன் ஒட்டுகள் பேச்சுத்தமிழில் மட்டும் பயன்படுத்தப்படுவதால் அறிவியல் தமிழிலும் அறிவியலார் கையாளத் தயங்குகின்றார்கள் துர்நாற்றம் என்று பேச்சுவழக்கில் 'துர்' கெட்ட என்ற பொருள்படும் அறிவியல் தமிழில் எதிர்மறை முன்னொட்டு அவசியம் ஆகவே பேச்சு தமிழிலுள்ள முன்னொட்டுகளை ஆராய வேண்டும்

6 எழுத்தமைப்பில் புதிய மெய்மயக்கங்கள் அமைந்துள்ளன

* தமிழில் புதிய எழுத்துகள் அறிவியல்தமிழில் சேர்ந்துள்ளது அதாவது குறியீடுகளும் சமன்பாடுகளும் ரோமன்

எழுத்துகளால்தானே பயன்படுத்துகிறோம் எனவே அறிவியல் தமிழ் நூல்களை மொழியியல் நோக்கில் ஆராய்கிறவர் அறிவியல் தமிழில் எழுத்துகளின் எண்ணிக்கையைக் கணக்கிடச் சொன்னால அங்கு பயன்படுத்த ரோமன் எழுத்துகளையும் சேர்த்துத்தான் கணக்கிடுவார் இன்று உள்ள நிலையை வருணனை நோக்கில் ஆராயும்போது வரலாற்று நோக்கு ஏற்றுக்கொள்ளப்படாது இதைத்தான் குழந்தைசாமி (1985 48) 'அறிவு வளர்ச்சியில அன்னியம் என்பது இல்லை' என்று குறிப்பிடுவார் இந்த நோக்கில் பார்க்கும்போது அறிவியல் தமிழில் தீராத பிரைச்சினையாக கருதபபடும கிரந்த எழுத்துகள் என்றும், தவறாக வடமொழி எழுத்துகள் என்றும் நாம் எண்ணி மயங்கிக் கொண்டிருக்கிற சில எழுத்துகளைத் தேவைபபடும் போது சேர்த்துக் கொள்வதல் தயக்கம் காட்ட வேண்டியதில்லை

அறிவியல் தமிழ்ப் பாடநூல் தயாரிக்கும்போது இதுவரை ஏற்பட்ட மாற்றங்களைப் புரிந்துகொண்டு இன்றும செய்ய வேண்டிய மாற்றங்களை ஏற்படுத்தி அறிவியல தமிழ இலக்கியம் உருவாகவும் அதன் மூலம் அறிவியல் துறையில் தமிழர்கள் முன்னேறவும் பாடுபட வேண்டும்'

## அடிக்குறிப்பு:-

1 இது மொழியியல் 9.3& 4 1986-லும் களஞ்சியம் 2160-67 (1987) இலும் வெளிவந்துள்ளது

# 5. அறிவியல் தமிழும் மொழி மாற்றமும்

அறிவியல் தமிழும் மொழி மாற்றமும் என்ற தலைப்பில் அறிவியல் தமிழ், மொழி மாற்றம் என்ற இரண்டு கருத்துக்கள் அடங்கி உள்ளன இவைகளில் மேற்கூறிய "மொழிமாற்றம் பழையது, "அறிவியல் தமிழ்" புதியது என்றாலும் இரண்டையும் பற்றிய சில பொது சிந்தனைகள் பற்றிய அறிவு சில தெளிவை ஏற்படுத்த வல்லது

மொழி மாற்றம் என்பது மொழியியல் நூல்களில் குறிப்பிடப்படும் சேஞ்ச் (Change),வேரியேஷன் (Variation)ஆகிய இரண்டு கருத்துகளையும் உள்ளடக்கியதாகவே கொள்ள வேண்டும். பொதுவாக, Change என்பது வரலாற்று மாற்றத் தையும் Variation என்பது ஒரு காலக்கட்டத்திற்குள் இருக்கும் கிளைமொழி, துறைவழக்கு (Register) ஆகியவற்றில் அமைந்துள்ள மாற்றத்தையும் குறிப்பதாக மொழியியல் நூல்கள் விளக்குகின்றன

தமிழகத்தைப் பொறுத்தவரையில் வரலாற்று மாற்றமும் கிளைமொழி மாற்றமும் பலருக்கும் அறிமுகமானவை; தமிழக அறிஞர்களால் ஒத்துக்கொள்ளப்பட்டவை, என்றாலும் அவைகளை இன்றைய இலக்கிய வழக்குகளாக ஏற்றுக் கொள்வதில் தயக்கத்தைக் காணலாம் இந்த நிலையில், அறிவியல் தமிழ் என்ற புதிய துறைவழக்கு உருவாகிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், மொழி மாற்றம் பற்றிய பிரச்சனை காரசாரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது இதில் மொழியியலாளர் பங்கு இதுவரை குறைவாக இருந்து வந்தது ஆனால், நாம் அனைத்திந்திய மொழியியல் மூன்றாம் கருத்தரங்கில் இதுபற்றி விவாதிக்க எடுத்துக்கொண்டிருப்பது மொழியியலாளரும் முழுப்பங்கு கொண்டுவிட்டதை காட்டுகிறது

உண்மையில் துறைவழக்குக்கு ஏற்ப மொழி அமைப்பிலும் மொழிப் பயன்பாட்டிலும் மாற்றம் ஏற்படுவது என்பது புதியது அல்ல தொலகாப்பியரே இலக்கியத் தமிழுக்கும். இலக்கணத் தமிழுக்கும்

உள்ள மாற்றத்தைச் சுட்டிக்காட்டி தாமும் மாற்றத்தோடு மொழியைப் பயன் படுத்தியிருப்பது முன்னரே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது

அறிவியல் தமிழ் என்ற புதிய துறைவழக்கு ஏற்பட்ட வரலாற்றுச் சூழ்லையும் சமூக சூழலையும் புரிந்துகொள்வது அறிவியல் தமிழில் செய்யவேண்டிய மாற்றம் பற்றிய சில தெளிவு கிடைக்கும்

தமிழில் இலக்கணம், தத்துவம், சித்தமருத்துவம், சோதிடம் போன்ற சில அறிவுத்துறைகள் முன்னரே வளர்ந்துள்ளன ஆனால் இன்று மேலையாக்கத்தால் (Westernization) இந்திய மொழிகளில் புதுமையாக்கம் ஏற்பட்டு மொழியில் புறநிலையிலும் அகநிலையிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன, புதிய அறிவுத்துறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் துறைவழக்கு என்ற கருத்தும் அதற்கு ஏற்ப மாற்றங்களும் ஏற்பட்டு வருகின்றன அதாவது மொழியில் உள்நிலை மாற்றத்தைவிட புறநிலை மாற்றமே அதிகம் இப்பொழுது உள்ளது அதே சமயத்தில் தமிழ் மொழிச் சமூகத்தில் படித்தவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதோடு பொருளாதார நிலையிலும் வளம் குன்றி வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களின் எண்ணிக்கை மிகுதியாக இருக்கிறது எனவே, நாடு சுதந்திரம் பெற்ற பிறகு அரசு மக்களின் பொருளாதார வளத்தைப் பெருக்கவும் வாழ்க்கை வசதிகளை அதிகரிக்கவும் முன்வந்தது இதற்கு மூன்று முறைகளிலிருந்து அரசும் பிற நிறுவனங்களும் செயலாற்றி வருகின்றன அவையாவன 1) புதிய கல்விச்சாலைகளையும் புதிய கல்வித் துறைகளையும் ஏற்படுத்துவது; 2) முதியோர் கல்வி, 3) தாய்மொழியில் பலதுறை அறிவு நூல்கள், பாடநூல்கள் வெளி வருவதற்கு உதவுதல் இவைகளில் மூன்றாவதே மொழி வளர்ச்சியோடும் மாற்றத்தோடும் சம்பந்தப்பட்டது ஏனெனில் தாய்மொழி மூலம பாடங்களையும் அறிவு நூல்களையும் படிப்பதே படிப்பவர்களின எண்ணிககையை உயர்த்தவும், புதிய நூல்களைப் படித்து வாழ்க்கைக்குப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையைப் பெருக்கவும் உதவும் எனவே, புதிய நூல்கள் தமிழில் சிறப்பு நோக்கில் எழுத வேண்டும என்பது மேலே குறிப்பிட்ட வரலாறு - சமூக நோக்கு புலப்படுத்தும் உண்மை ஆகும்

அறிவியல் தமிழ் என்பது தமிழில இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய பல புதிய துறைவழக்குகளில் ஒன்று சட்டத்துறை,

ஆட்சித்துறை. கல்வித்துறை என்ற பல புதிய துறைகளில் அறிவியல் தமிழ் என்பது கல்வித்துறையைச் சார்ந்தது ஆனாலும் சட்டத்துறை. ஆட்சித்துறை போன்ற துறைகளில் அடிக்கடி பெரிய மாற்றம் ஏற்படுவதில்லை அப்படி ஏற்படும் மாற்றங்களையும் செய்தித்தாள்கள் மூலம் பொதுமக்கள் அறிந்து கொண்டு விடுவார்கள் அறிவியல் துறையில் ஏற்படும் மாற்றங்களும் அவற்றின் காரணங்களும் விரிவாகப் பொதுமக்கள் அறிந்து கொள்ளவேண்டிய ஆவசியமில்லை, அறிந்துகொள்ள முடிவது தும் இல்லை

எனவே, அறிவியல் துறை வழக்குகள் அந்தத் துறையில் ஈடுபட்டவர்களுக்கு ஈடுபட முன்வருபவர்களுக்கு அவசியம் தெரிந்திருக்க வேண்டும் எனவே, அறிவியல் துறையைத் தாய்மொழியில் படிப்பவர்கள் கூடப் புதிய கருத்துகளைத் தெரிந்து, புரிந்து கொள்ள வசதியாக தாய்மொழிக் கல்வி இருக்க வேண்டும் இதனாலேயே சிலர் கலைச்சொற்கள் எல்லாம் அனைத்துலக - குறிப்பாக ஆங்கில கலைச் சொற்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறுவார்கள் இதனை முழுவதும் ஏற்றுக்கொள்ள. முடியாது இதனால் மொழி மரபு முற்றிலும் மாறிவிடும் இது மொழிவளர்ச்சிக்கும் உதவி செய்யாது அதே நேரத்தில் எல்லாவற்றையும் தமிழில் புதிதாகப் படைகக வேண்டும் என்பதும் சிறப்பானதாகக் கருதமுடியாது எனவே கலைச் சொல்லாக்கத்தில் பிற மொழிச் சொற்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் புதிய சொல்லாக்கங்களையும் உண்டாக்க வேண்டும் இந்த இரண்டு வகையிலும் ஏற்படும் மாற்றங்களைப் பார்ப்போம்

பிறமொழிச் சொற்களை அப்படியே ஏற்றுக்கொள்வது அறிவியல் தமிழ் நூல்களில் ஒலிபெயர்ப்பு என்று அழைக்கப்படுகிறது. ஒலிபெயர்ப்பில் தமிழில் இல்லாத பிற ஒலிகளை எப்படி பெயர்ப்பது என்பதே முக்கிய பிரச்சனை இந்தப் பிரச்சனை தமிழுக்குப் புதியது அல்ல ஆனாலும் அறிவியல் கலைச்சொற்கள் பெரும்பான்மை ஆங்கில மொழியிலிருந்தும் சிறுபான்மை பிற மேலைநாட்டு மொழி களிலிருந்தும் கடனாளுவதால் மூலமொழிக்கு (Target language) புதியன இடைக்காலத்தில் தமிழ் வடமொழியிலிருந்து நிறைய சொற்களைக் கடனாண்டதால் இலக்கண ஆசிரியர்கள் (குறிப்பாக விரசோழியமும், நன்னூலும்) வடமொழிச் சொறகளை எப்படி தமிழாக்கிக் கொள்வது என்று விதி செய்துள்ளார்கள் எனவே அப்படிப்பட்ட விதிகள் ஆங்கில

மொழிகளிலிருந்து வாங்கப்படும் சொற்களுக்கும் செய்வது அவசியம் ஆனால் சிலர் அதே விதிகள் போதும் என்று வாதிட்டு வருகிறார்கள்.

தமிழின் ஒலியமைப்பும், எழுத்தமைப்பும் பற்றி இரண்டு செய்திகள் சுட்டிக்காட்ட வேண்டும் இன்றைய பேச்சுமொழியில் இடைக்காலத் தமிழிலிருந்து மாற்றங்கள் பல ஏற்பட்டுள்ளன படித்தவர்கள் பேச்சில் வல்லின அதிர்வொலிகள் (Voiced stops) எல்லாமும் (b,d,ḍ,g) படிக்காதவர்கள் பேச்சில் சிலவும் ஒலியனாக அமைந்துள்ளன எனவே இவற்றை வரிவடிவில் எழுதும் முயற்சி மேற்கொள்ள வேண்டும எழுத்துமொழியில் செம்மையாக்க வாதிகளின் எழுத்துகளைத் தவிர ஏனையோர் எழுத்துகளில் கிரந்த எழுத்துகள் என்று அழைக்கப்படுகின்ற ஜ, ஸ, ஹ, ஷ, ஆகியவை காணப்படுகின்றன இந்த இரண்டு உண்மைகளையும் புறக்கணிப்பதாலேயே ஒலிபெயர்ப்பில் பெரிய பிரச்சனை இருப்பதாகத் தோன்றுகிறது. தோன்றும்படி பலர் விவாதிக்கிறார்கள்

இதனால்தான மொழியில் ஏற்பட்ட வரலாற்று மாற்றங்களைக் கோட்பாட்டு அளவில் ஏற்றுக்கொண்டாலும் செயலளவில் ஏற்றுக்கொள்வதில் தயக்கம் இருக்கிறது என்று மேலே குறிப்பிடப்பட்டது

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தமிழில் எழுத்துக் குறை இருக்கிறது என்றும் அதைத் தீரக்க இப்பொழுது இருக்கும் எழுத்துக்களில் குறியீடுகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும் ஆலோசனை கூறியது தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு எதிர் வாதங்களை எழுப்பியதெல்லாம் முன்னரே (சண்முகம், 1978 113) விளக்கப்பட்டுள்ளது என்றாலும் இன்றும் அது சிறந்த வழி என்பதை மறுக்க முடியாது அதாவது ஒலிமாற்றத்தை ஏற்றுகொண்டு அதற்கேற்ப வரிவடிவத்திலும் மாற்றம் செய்துகொண்டு புதிய ஒலியன்களை எழுதுவது

சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துகளிலும், மெய் மயக்கத்திலும் ஏற்படும் மாற்றங்களைப் பொறுத்தவரையில் ஒரு சிலரே 'கம்பன் காட்டிய வழி' என்று இடைக்காலத் தமிழ் மரபைப் பின்பற்ற வேண்டும், என்ற தீவிர பிடிவாதம் காட்டுகிறாரகள், ஏனையோர் அவைகளில் ஒரு நெகிழச்சியை ஏற்படுத்திப் பயன்படுத்தி வருவதால் வாதப்பிரதிவாதம் குறைவாக உள்ளது என்றாலும் இருபதாம்

நூற்றாண்டு எழுத்துத்தமிழ் இடைக்காலத் தமிழிலிருந்து மாறுபட்டது, வளர்ச்சி பெற்றது. என்பதை அறிவுபூர்வமாக ஏற்றுக்கொண்டு புதிய துறைவழக்கு ஏற்படுவதற்கு ஏற்ப புதிய மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் இன்றும் ஏற்படவில்லை

அடுத்தது புதிய சொல்லாக்கம் செய்வது பற்றியது. சொல்லாக்கமும் காலந்தோறும் நடைபெறுவதுதான். புதிய பொருள்களும் கருத்துகளும் பழக்கத்துக்கு வரும்போது பொதுமக்கள்கூட புதிய சொற்களைப் படைத்துக் கொள்வார்கள் இன்று ஆங்கிலக் காய்கறிகள் என்று பொதுவாகக் கூறப்படுவனவற்றுள் சௌசௌ, கேரட், ரேடிஷ், போன்றவைறைப் படிக்காத மக்கள் முறையே சீமைக்கத்திரிக்காய், மஞ்சள் முள்ளங்கி, சிவப்பு முள்ளங்கி என்று பெயரிட்டு அழைப்பது பேச்சுமொழியில் நடைபெற்ற சொல்லாக் கங்களையே காட்டுகிறது தினத்தந்தி போன்ற செய்தி தாள்கள் டெலிவிஷன் என்பதை படரேடியோ என்று குறிப்பிடுவதும் சொல்லாக்கத்தினையே உணர்த்துகிறது ஆனால் அறிவியல் கலைச்சொற்கள் பொதுமக்களுக்குத் தொடர்பு இல்லாததால் கலைச்சொல்லாக்கம் படித்தவர்களின் கடமையாக ஆகிவிட்டது இங்கும் மொழி அமைப்பு நிலையில் இரண்டு உண்மைகள் குறிப்பிடத் தகுந்தவை ஒன்று, தமிழ் பின்னொட்டு மொழி ஆனதால் அறிவியல் கலைச் சொற்களில் வழங்கும் முன்னொட்டுகளைத் தமிழில் அமைப்பது பற்றியது இரண்டு புதிய பின்னொட்டுகளை உண்டாக்குவது பற்றியது

வடமொழித் தொடர்பால் அவச்சொல், துர்நாற்றம் போன்ற சொற்களில் தமிழ்ச்சொற்களோடு வடமொழி முன்னொட்டுகளைச் சேர்க்கும் முறை பேச்சுமொழியில் காணப்படுகிறது இதை ஒட்டி Non-Metal என்பதை அலோகம் என்று சொல்லாக்கம் செய்யப்பட்டுள்ளது என்றாலும் இதுபற்றி இன்னும் தெளிவு ஏற்படவில்லை. முன்னொட்டுகள் அல்லாமல் இடைச்சொற்கள் (Preposition) போன்றவற்றை அடிச் சொற்களுக்கு முன்னால் பயன்படுத்தி வருகிறோம் மறு என்று இடைச்சொல்லை மறுமணம், மறுமதிப்பு, மறுபரிசிலனை போன்றவற்றில் ஒட்டு போலவே பயன்படுத்துகிறோம் இப்படி பல புதிய இடைச்சொற்களை முன்னொட்டாகப் பயன்படுத்தும் தேவை அறிவியல் தமிழில் அதிகரித்துள்ளது

தமிழில் பின்னொட்டுகள் அதிகம் இருந்தாலும் -மம் என்ற புதிய ஒட்டு அறிவியல் நூல்களிலும்; -அன் என்ற ஒட்டு மொழியியல் நூல்களிலும் நுண்பொருளைக் குறிக்கக் கையாளப்படுகின்றன எனவே புதிய ஒட்டுகள் வருவதாலும் பழைய ஒட்டுகளைப் புதிய பொருளில் கையாளுவதாலும் மொழியில் மாற்றம் ஏற்பட்டுள்ளது

முழுச்சொற்களை விகுதி போலப் பயன்படுத்தும் முறையும் இப்பொழுது காணப்படுகிறது இயல் என்ற தனிச்சொல் மொழியியல், பொறியியல், உளவியல் போன்ற தொடர்களில் விகுதி போன்றே அமைந்துள்ளது பொது மொழியில் அகம் என்ற சொல் இனிப்பகம், நூலகம், துணியகம் போன்ற சொற்களில் விகுதியைப் போலவே பயன்படுகிறது எனவே அறிவியல் தமிழால் சொல்லியலிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது இன்னும் வேண்டிய மாற்றங்களைத் தைரியமாகச் செய்து கொண்டு அறிவியல் தமிழைப் புதிய துறையாக வளர்க்க வேண்டும்

அறிவியல் தமிழில் கலைச்சொலலாககத்தில் மட்டும் அல்லாமல் தொடரியல் மரபுகள், பாடமாக்கம் (Textualisation),பொழிபு (Discourse) ஆகியவற்றிலும் புது புது மரபுகளை ஏற்படுத்த வேண்டியுள்ளது இவையெல்லாம் இலக்கியத் தமிழிலும் புதிய மாற்றத்தை ஏற்படுத்த வல்லவை

மொழியில் மாற்றம் இயல்பானது, தடுக்க முடியாதது என்று உணர்ந்து கொண்டு அறிவியல் தமிழுக்கான புதிய மாற்றங்களை ஏற்போமாக

# 6. அறிவியல் தமிழ் : மொழித் திட்ட நோக்கு மதிப்பீடு

## முன்னுரை

பொருளாதார நோக்கில் உலகில் உள்ள நாடுகளை வளரும் நாடுகள், வளர்ந்த நாடுகள் என்று பிரித்துப் பேசுவதைப் போலவே மொழியின் வளர்ச்சி நிலையை (Developing status) - பல துறைகளில் பயன்படுத்தும் முறையும், அதாவது மொழி பயன்பாட்டையும் - ஒட்டி உலக மொழிகளை வளரும் மொழிகள், வளர்ந்த மொழிகள் என்று பாகுபடுத்துகிறார்கள். மேலும் வளரும் மொழிகள் எப்படித் தங்கள் மொழிகளை வளர்த்து வருகின்றன; எப்படி வளர்க்க வேண்டும் என்பதைப் பற்றியும் மொழித் திட்டம் (Language planning) என்ற தனித் துறையாகப் போற்றி வளர்த்து வருகிறார்கள் (*கருணாகரன், 1981*). மொழித் திட்டம் அல்லது மொழிவளர்ச்சி சமூக வளர்ச்சியின் ஒரு கூறாகவும் அந்தந்த சமூக மனப்பாங்கை ஒட்டிய பகுதியாகவும் இருப்பதைச் சமூக மொழியியலார் வற்புறுத்தி வருகிறார்கள்.

## மொழி வளர்ச்சி

ஃபெர்கூசன் (1968) மொழி வளர்ச்சியை மூன்று வகைப்படுத்தியுள்ளார். அவையாவன: 1) எழுத்தாக்கம், 2) நிலையாக்கம், 3) புதுமையாக்கம். அவர் கருத்துப்படி எழுத்து மொழி இல்லாத மொழிகளுக்கு எழுத்துருவம் கொடுப்பதே எழுத்தாக்கம் ஆகும். ஆனால் எழுத்துமொழி உடையவை அச்சு, தட்டச்சு போன்ற கருவிகளின் வளர்ச்சியால் எழுத்து வடிவத்தில் செய்ய வேண்டிய திருத்தங்களையும், எழுத்து மொழியில் இன்னும் செய்ய வேண்டியவற்றையும், அதாவது புதிய ஒலிகளுக்கு எழுத்துருவம் கொடுப்பது போன்றவற்றையும் உள்ளடக்கியதாகக் கருதுவார்கள். நிலையாக்கம் என்பது தகுமொழி (Standard dialect) தேர்ந்தெடுத்து சொற்களின் எழுத்து - சொல்லெழுத்து (Spelling) நிர்ணயிப்பது; இலக்கணக் கூறுகளையும் அவற்றின் வடிவங்களையும் வரையறுப்பது

போன்றவை ஆகும். புதுமையாக்கம் என்பது புதுச் சொல்லாக்கத்தையும் மொழியைப் புதுப்புது துறைகளில் பயன்படுத்துவதற்கு ஏற்ப மொழி நடையையும் துறை வழக்குகளையும் வளர்ப்பதையும் குறிக்கும். (முதல் கட்டுரையில் இது ஓரளவு விரிவாக விளக்கப்பட்டுள்ளது)

## 'அறிவியல் தமிழ்': பருந்துநோக்கு மதிப்பீடு

'அறிவியல் தமிழ்' என்ற டாக்டர் வா.செ. குழந்தைசாமி (1985) எழுதிய நூல் மொழி வளர்ச்சி பற்றியது ஆகவே இந்த நூலை மேலே குறிப்பிட்ட பொதுக் கோட்பாட்டின் அடிப்படையில் நோக்கினால் நூல் பற்றி பருந்துப் பார்வையாகக் கீழ்க்கண்டவை புலனாகின்றன.

'அறிவியல் தமிழ்' தமிழில் புதுத்துறை வளர்ச்சிக்கான அதாவது பொதுக் கோட்பாட்டின்படி புதுமை யாக்கத்திற்கான கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தாலும், நூல் மொழி வளர்ச்சியின் எல்லாப் பரிமாணங்களையும் விளக்குவது தனிச்சிறப்பு ஆகும்.

தமிழுக்கு முன்னரே எழுத்துவடிவம் இருப்பதால் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி இரண்டு இயல்களும் (8,9), புதுமையாக்கத்தின் கூறான சொல்லாக்கம் பற்றி இரண்டு இயல்களும் (6,7) விளக்குகின்றன நிலையாக்கம் பற்றி ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (ப.84,85) மேலும் மூன்று இயல்கள் மொழி வளர்ச்சிக்கான அடித்தளத்தை வரலாற்று நோக்கில பொதுவாகவும் சிறப்பாகவும் விவரிக்கின்றன ஆகவே நூலில் உள்ள பத்து இயல்களில் ஏழு இயல்கள் (4 - 10) தமிழ் மொழி வளர்ச்சிபற்றி நேரடியாக விளக்குகிறது எனலாம்

வளர்ச்சி என்பதை மாற்றம் என்று ஆணித்தரமாகக் குறிப்பிட்டிருப்பதற்கு ஏற்ப மாற்றத்துக்கான காரணத்தையும், அவசியத்தையும் முதல் மூன்று இயல்கள் உலக நிலையில் வைத்து படம்பிடித்துக் காட்டுகின்றன

சுருங்கச் சொன்னால், தமிழகத்துத் தலைசிறந்த விஞ்ஞானிகளில் ஒருவர அறிவியல தமிழ் என்று புதுத்துறை வளருவதற்குப் பரந்த அடித்தளம் அமைத்து அதில் தமிழ்மொழி வளம்பெற ஆக்க வழிகளை விளக்கி எழுதியுள்ள நூல என்ற முறையில் பாராட்டுவதற்குரியது

இனி, மொழி வளர்ச்சியின் ஒவ்வொரு கூறுபற்றிய கருத்துகளை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்

## எழுத்துச் சீரமைப்பு

தமிழ் எழுத்துச் சீர்திருத்த வரலாற்றையும் உலக மொழிகளில் எழுத்துத் திருத்தத்தையும் தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய கருத்துரைகளையும் குறிப்பிட்டுத் தமிழ் எழுத்துக்களில் செய்ய வேண்டிய திருத்தங்களையும் எழுத்துச் சிரமைப்பு குறிப்பிடுகிறது இங்கு எழுத்துச் சீர்திருத்தத்தைச் 'சீர் அமைப்புங என்று கொண்டதற்கு ஏற்ப

> குறியீடுகளை எண்ணிக்கையில் குறைப்பது (எழுத்துக்களைக் குறைப்பது அல்ல) . . . சுழிகளும், வளைவுகளும், கொம்புகளுமாக சிக்கலாக அமைந்துள்ள எழுத்துக்களை இயன்றவரை சிறுமாற்றங்கள் மூலம் எளிதாக்குவது

என்ற கூறுவது (ப 113) எழுத்துச் சிரமைப்பு பற்றிய அவருடைய கோட்பாட்டைத் தெளிவுபடுத்துகிறது இதன் அடிப்படையில் அமையும் சீர் அமைப்பு ஆவன

1 இகர, ஈகார, உகர, ஊகாரம் ஆகியவற்றிற்கு மாற்று வடிவத்தைச் சீர்மைப்படுத்துவது: அதாவது மெய் யெழுத்துக்குப் பிறகு தனியே ஒரு துணை வடிவத்தை எழுதுவது

2 தனி மெய்யெழுத்தில் உள்ள புள்ளியைப் பக்கவாட்டில் எழுதுவது

இந்த முறை முன்னரே அறிஞர்களால் தெரிவிக்கப்பட்டதுதான் இந்த முறையைச் சிலராவது விடாப்பிடியாகப் பின்பற்றி வந்தால் என்றாவது ஒரு நாளைக்கு அரசாங்கத்தாலும் பொதுமக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படும் என்பது பெரியார் நமக்குக் கற்றுத் தந்த பாடம்

இதற்கு மேலாக சமீப காலத்தில் நடைபெற்ற அறிவியல் புரட்சியாக கணிப்பொறி வருகையால் செய்ய வேண்டிய சிரமைப்புகளை 'அறிவியல் தமிழ்' எடுத்துக்காட்டியுள்ளது (ப199) புதிய செய்தியே ஆகும் அதாவது ழகர, நகர வடிவங்களைக் கொஞ்சம் மாற்றி அமைப்பது பற்றியது

மேலே குறிப்பிட்டபடி எழுத்து வடிவங்களில் மாற்றம் செய்வதை மட்டும் சீரமைப்பு என்று கொண்டதால் மொழியின் பண்பு பற்றி ஒரு தவறான கருத்தும் அதனால் எழுத்துச் சீர்திருத்தத்தில் உள்ள வேறு பிரச்சனைகளும் இங்கு குறிப்பிடாமல் விடப்பட்டுள்ளன.

*1978*- இல் தமிழக அரசு பெரியார் பின்பற்றி வந்த எழுத்துத் திருத்தத்தை அரசாணைக்கு ஆக்கியபோது தமிழகத்தில் எதிர்ப்புக்குரல் எழுந்தது அப்போது எழுத்துத் திருத்தத்தை ஆதரித்த சிலர் தமிழ் ஒலியில் மாற்றம் செய்யவில்லை என்றும் வடிவத்தில் மட்டும் மாற்றம் செய்யப்படுகிறது என்றும் கூறிவந்தார்கள் அதற்குச் சாதகமாக காலந்தோறும் எழுத்து வடிவத்தில் மாற்றம் பெற்று வந்ததை மட்டுமே எடுத்துக் காட்டினார்கள் அதன் தாக்கம் அறிவியல் தமிழில் பின்வருமாறு உள்ளது

> நமது முன்னோர்கள் பன்னிரெண்டு உயிர்எழுத்துக்களின் ஒலிகள், பதினெட்டு மெய்யெழுத்துக்களின் ஒலிகள், பின்னர் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் இவற்றின் ஒலிகள் இவற்றை மட்டும் நெறிப்படுத்தினார்கள். அவை எந்தவித மாற்றமும் இன்றி இன்னும் நிலைத்து நிற்கின்றன. ஒலிகளை வரைப்படுத்தியமைபோல வரிவடிவத்தை வரைப்படுத்தி இந்த ஒலிக்கு இதுதான் குறியீடு என்று ஏற்பாடு செய்யவில்லை,

என்று *(ப 95)* தமிழ் மொழி பற்றி சிறப்பாகவும் 'ஒரு மொழியில் ஒலிகள் அறுதி செய்யப்பட்டவை' என்று *(ப 101)* பொதுவாகவும் கூறப்பட்டுள்ளது இதன் அடிபபடை மொழியில் வழங்கும் ஒலிகள் எல்லாக் காலத்திலும் மாற்றம் இல்லாமல் அமைகின்றன என்பதே உலக மொழிகளின் வரலாற்றை ஆராய்ந்த அறிஞர்கள் காலந்தோறும் மொழியில் ஏற்படும் மாற்றங்களில் மிகவும் முக்கியமானது ஒலி மாற்றம் (Sound change) என்று குறிப்பிட்டுள்ளார்கள் *(உதாரணம் Hockett 1958)* இந்த உண்மை தமிழுக்கும் பொருந்தும் என்பதைப் பல உதாரணங்களால் பேராசிரியர் தெபொ மீனாட்சிசுந்தரனார் தம்முடைய தமிழ் மொழி வரலாற்றில் *(1965)* விளக்கியுள்ளார்

உதாரணமாக, றகரம் சங்க காலத்தில் நுனிநா நுனி அண்ண வல்லொலியாக (Stop) இருந்தது(t), இடைக்காலத்தில் ஆடொலி (Trill) R ஆகி இன்று கன்னியாகுமரி மாவட்டம் தவிர பிற மாவட்டங்களில தட்டொலி (flap) *(ர)* இடையினமாக ஆகியுள்ளது இன்று றகரமும்

ரகரமும் எழுத்தில் வேறு படுத்துகிறோமே தவிர உச்சரிப்பில் இல்லை அதனால் சில சொற்களில் சரியான எழுத்தை நிர்ணயிக்க முடியாமல் பலர் தடுமாறுகிறார்கள் சகரம் சங்க காலத்தில் பல்லொலியும் உரசொலியும் சேர்ந்து (ts) (affricate) - ஒலியாக வழங்கியது இடைக் காலத்திலும் தற்காலத்திலும் சில கிளைமொழிகள் தவிர மீதியுள்ளவற்றில் ஸகரமாக (S)- உரசொலியாக மட்டும் வழங்குவதும் குறிப்பிடத் தகுந்தது சங்ககாலத்தில் நகரம் பல்லொலி (Dental)யாக சொல்லுக்கு முதலிலும், இரண்டு உயிரெழுத்துக்களுக்கு இடையிலும் சொல்லின் நடுவில் தகரத்துக்கு முன்னர் வரும்போதும் ஒலிக்கப்பட்டது ஆனால் இன்று சொல்லின் நடுவில் தகரத்துக்கு முன்னர் வரும்போது மட்டுமே பல்லொலியாக உச்சரிக்க ஏனைய இடங்களில் நுனி அண்ண ஒலியாக (Alveolar) உச்சரிக்கிறோம்

இவைகளால் வரிவடிவத்துக்கும் ஒலிக்கும் உள்ள உறவு இன்று மாறுபட்டுள்ளது (முழு விளக்கத்துக்கு, சண்முகம், *1978, 74 - 75* பார்க்கவும்) மேலும் பிற மொழிச் சொற்களைக் கடனாளுவதாலும் பிறமொழியினரோடு தொடர்பு கொள்வதாலும் ஒலியின் தன்மையில் மாற்றமும் புதிய ஒலிகளும் மொழியில் ஏற்படுகின்றன இருபதாம் நூற்றாண்டுத் தமிழில் ஏற்பட்ட ஒலிமாற்றங்களை மீனாட்சிசுந்தரனார *(1965)* தனி இயலிலேயே விளக்கியுள்ளார்

அறிவியல் தமிழைப பொறுத்தவரையில் பன்னாட்டுக் கலைச் சொற்களை (International terms) ஏற்றுக் கொள்ளும் போது சில புதிய ஒலிகள் உண்டாக்கிக் கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டு இருக்கிறது

இந்த நிலையில் சங்க காலத்துக்குப பிறகு ஒலிகளிலும் எழுத்து எண்ணிக்கையிலும் ஏற்பட்ட மாற்றத்தை 'அறிவியல் தமிழ்' எழுத்துச் சீரமைப்பு என்ற இயலில் புறக்கணித்தாலும், அறிவியல் தமிழ் ஆக்கம் பற்றிய பல பிரச்சனைகளை விவாதிக்கும்போது மறக்காமல் குறிப்பிட்டுள்ளது போற்றுவதற்கு உரியதுதான்

> **ஒலிபெயர்ப்பு, மொழிபெயர்ப்புகளில் 12 உயிர், 18 மெய் ஆயுதம் இவற்றின் அடிப்படையில் அமைந்த ஒலிகள் போதுமா? போதாதா என்பதில் இன்று தம்முள் ஒத்த கருத்தில்லை (ப. 64)**

என்றும்

> ஒலிபெயர்ப்பதா; மொழிபெயர்ப்பதா என்ற கேள்விக்கு ஒரு முடிவு கண்டாலும், தம் மொழியில் இல்லாத ஒலிகளைக் குறிப்பிட என்ன செய்வது; புதிய ஒலிகள் ஒருபுறம் இருக்க ஜ,ஷ,ஸ,ஹ, போன்ற பழக்கத்தில் இருக்கும் ஒலியெழுத்துக்களைப் பயன்படுத்துவதா அல்லது தமிழ் நெடுங்கணக்கிலுள்ள 247 ஒலியெழுத்துக்களை மட்டுமே பயன்படுத்துவதா என்பதிலும் முடிந்த முடிவு காண்பது இயலுவதன்று (ப. 73)

என்றும் கூறுவதிலிருந்து எழுத்துச் சீர்திருத்தம் என்பது எழுத்துச் சீரமைப்பு மட்டும் அல்ல, எழுத்து எண்ணிக்கையும் சேர்ந்தது என்பதை உணர்ந்திருப்பதைக் காட்டுகிறது

'முடிந்த முடிவு காண்பது இயலுவதன்று' என்பது உண்மையல்ல மொழியியல் அறிவு பிரச்சனையைத் தீர்க்க உதவும் இன்றைய பேச்சுமொழி பற்றியும், சிறப்பாகப் பேச்சு மொழியில் வழங்கும் ஒலிகள் பற்றியும் பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் உள்ள உறவு பற்றியும் அறிந்து கொண்டால் ஓரளவு வழிகாண முடியும் ஆனால் சிலர் தமிழில் உள்ள உயிர் 12, மெய 18, ஆயதம 1 ஆகிய முப்பத்து மூன்று எழுத்துகளே போதும் என்று வாதிட்டு வருகிறார்கள் அதன் வன்மை மென்மைகளும் முன்னரே விளக்கப் பட்டுள்ளது (சண்முகம், 1978 96 - 122) இதுபறறிய பாரதியின் கருத்தும் கவனிக்கத் தகுந்தது

> தொல்காப்பியர் காட்டிய அரிச்சுவடி போதாவண்ணம் நமது பாஷை வளர்ச்சி பெற்று உடனே நமது முன்னோர்கள் மேற் காட்டிய எழுத்துக்களை (ஸ,ஷ,ஜ,ஹ,க்ஷ) சேர்த்தார்கள். நாமும் அப்படியே நமக்கு இக்காலத்தில் ஏற்படும் உச்சரிப்புக் கஷ்டங்களை நிவர்த்தி செய்து கொள்வதற்குக் கிரந்த எழுத்துக்களைச் சேர்க்கலாம் என்று பல பெரியோர்கள் கருதுகிறார்கள். ஆனால் அதைக் காட்டிலும் அடையாளங்கள் போடுவது சுலபமான வழி. இப்பொழுதுள்ள அரிச்சுவடியே பழகிய தமிழருக்கு மேற்படி அடையாளங்களால் எவ்வித சங்கடமும் நேரிடாது தவறாகவோ சரியாகவோ வழக்கம் போல் வாசித்துக்கொண்டு போவதை அடையாளங்கள் தடுக்க

மாட்டா ; கிரந்த எழுத்துக்களைக் கொண்டு சேர்த்தால் பாதி படிக்கும்போதே நிறுத்திவிட நேரிடும்.

எழுத்து மொழியோடு தொடர்புடைய மற்றொரு பிரச்சனை சொல்லெழுத்து (Spelling). சில சொற்களுக்குரிய சொல்லெழுத்து இன்று பிரச்சனையாக்கப்பட்டு வருகிறது இதற்கும் முக்கிய காரணம் பழங்கால இலக்கிய வழக்குகளையும் மரபுகளையும் ஒட்டியே இன்றைய சொல்லெழுத்தும் இருக்க வேண்டும் என்பதுதான். மொழியில் ஏற்பட்ட உச்சரிப்பு மாற்றத்தால் அதாவது ஒலிமாற்றத்தால் ஏற்பட்ட மாற்றங்களும் சொல் இலக்கணத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் புறக்கணிக்கப்பட்டு பழைய சொல்லெழுத்துக்களே சிலர் வற்புறுத்தி வருகிறார்கள் இதனால் அறிவியல் பற்றி தமிழில் நூல் எழுதுவோர் இலக்கியப் புலவர்களாக மாற வேண்டியிருப்பதால் பலருக்கு மொழியறிவு பற்றிய தன்னம்பிக்கை இல்லாமல் போய்விடுகிறது

எழுத்து வடிவம் பற்றிய மற்றொரு பிரச்சனையாக 'அறிவியல் தமிழ்' கூறுவது துணை வரிவடிவம் (இயல்9) என்பது இது தமிழ் உலகளாவிய நிலையில் பயன்படுத்தும் போது ஏற்படும் பிரச்சனை இதைத் தைரியமாக விளக்கியிருப்பது பாராட்டுவதற்கு உரியது. இந்த இயலின் வன்மை மென்மைகளைப் பார்ப்போம்

## துணை வரிவடிவம்

> தமிழ் வரிவடிவத்துடன் இணையாக, சில குறிப்பிட்ட துறைகளில் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக இன்னொரு
>
> வரிவடிவத்தையும் பயன்படுத்தலாம்.

என்று (ப 121) கூறும்போது துணை வரிவடிவத்தின் நோக்கம் நல்லமுறையில தெளிவுபடுத்தப்பட்டுள்ளது இங்கு ரோமன் எழுத்துகளையும் சில சமயங்களில் சில காரியங்களுக்காகக் கையாளுவதே துணை வரிவடிவம் என்ற தலைப்பு விளக்குகிறது இதிலுள்ள பிரச்சனை, தமிழ் ஒலிகளுக்கும் வடிவங்களுக்கும் இணையாக இருக்கும்படி ரோமன் எழுத்துகளில் குறியீடு அமைப்பதுதான் அதுபற்றியும் 'அறிவியல் தமிழ்' குறிப்பிடுவது (ப 126) சிறப்பானது ஆனாலும் ரோமன் எழுத்துகளைப் பயன்படுதுவதால் எற்படும் நன்மைகளாகக் கூறியவற்றில் இரண்டு

ஏற்றுக்கொள்ளத் தகுந்ததாய் இல்லை என்பதைக் குறிப்பிடத்தான் வேண்டும்

> தமிழ் ரோமன் வரிவடிவத்தில் எழுதப்பட்டால் அதைக் கற்பவர் தொகை மிக விரைவில் இந்தியாவிலும் மற்ற நாடுகளிலும் அதிகரிக்கும்.

என்பதோ (ப 126)

> மற்ற திராவிடமொழிக் குடும்பத்தினர் இந்த முறைகளில் (அறிவியல், பொறியியல்) தமிழ் நூலைப் படித்துப் புரிந்து கொள்வது மிகவும் இயன்ற ஒன்றேயாகும்,

என்பதோ (ப 129) ஏற்றுக்கொள்ளத் தகுந்தது அல்ல ஏனென்றால் தமிழ் மொழிக்குரிய கலைச்சொற்களை எப்படி பலரும் புரிந்து கொள்ள முடியும்? எலலாக் கலைச் சொற்களும் அனைத்துலகச் சொற்களாக இருந்தாலும் அவைகளின் உச்சரிப்பும் எழுத்து முறையும் தமிழுக்கும் பிற மொழிகளுக்கும் வித்தியாசப்படும் மேலும் கலைச்சொற்களோடு அங்கு பயன்படுத்தப்படும் வினைச்சொற்களும் பொதுப்பெயர்களும் பிற மொழியினர்க்குத் தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை தமிழராக இருந்து விட்டில் மட்டும் தமிழ் பேசும் தமிழர்களும்கூட ரோமன் எழுதில் எழுதப்பட்ட காரணத்தினால் படித்துப் புரிந்துகொள்ள முடியாது ஏனென்றால் மொழி வெறும் எழுத்து மட்டும் அல்ல பேச்சுமொழியில் இல்லாத பல பண்புகள் எழுத்துமொழியில் உண்டு

பிற திராவிட மொழியினர் புரிந்து கொள்வது என்பதும் இயலாத காரியமே ஏனென்றால் சாதாரண சொற்களின் வடிவங்களே பிற திராவிட மொழிகளில் மாறுபடும் எண்ணுப் பெயர்களின் வடிவங்கள்கூட கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் மாறியுள்ளன 'ஐந்து' என்பது கன்னடத்திலும் தெலுங்கிலும் 'ஐது' என்றும் 'எட்டு' என்பது கன்னடத்தில் 'எண்(ட்)டு' என்றும் தெலுங்கில் 'எனிமிதி' என்றும் வழங்குகிறார்கள் எனவே தமிழில் ஐந்து, எட்டு என்பது போன்றவற்றைக்கூடப் பிற திராவிட மொழியினர் புரிந்துகொள்ள முடியாது

இதற்கெல்லாம் அடிப்படைக் காரணமான

> இன்று இந்தியாவில் ஒரு மொழியினர் மற்றொரு மொழியினைக் கற்பதற்கு இடைஞ்சலாயிருப்பது

**வரிவடிவம். மொழிகளில் இருக்கும் ஒருமைப்பாட்டை வரிவடிவம் மறைத்து நிற்கிறது**

என்ற கூற்றே (ப 128) உண்மை அல்ல ஏனென்றால் எழுத்து வடிவம் மொழியல்ல மொழியைத் தெரிந்திருந்தால்தான் எழுத்து மூலம் மொழியைப் புரிந்து கொள்ள முடியும் அறிவியல் தமிழ் வளர்ச்சியில் துணைவடிவம் முக்கியமான ஒன்றல்ல எனவே அதைப் பற்றிய கருத்தில் அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை

எழுத்துச் சீர்அமைப்பு என்பது அறிவியல் தமிழுக்கு மட்டுமே உரிய முக்கிய பிரச்சனை இல்லை இதில் எல்லாத்துறை தமிழும் இலக்கியத் தமிழும் பொருந்தும் செய்திப் பரவல் (Information transfer) என்ற பரவலாக இன்று பேசப்படும் புதிய உண்மைகளை விளக்கும் கருத்துப் பரிமாற்றம் எளிமையாக நடைபெற எழுத்துச் சீரமைப்பு பயன்படும்.

## கலைச் சொல்லாக்கம்

கலைச் சொல்லாக்கம் பற்றிய பொதுக்கோட்பாடு பற்றியும், கலைச் சொற்களை உருவாக்கும் முறை பற்றியும் நேரடியாக விளக்கிய கருத்துகளோடு உதாரணங்கள் மூலம் விளக்கிய கருத்துகளில் புதைந்த சில கோட்பாடுகள் மட்டுமே இங்கு விவரிக்கப்படுகின்றன

முதலாவதாக, மொழியியலார் கூறும் பொருட்புலன் (Semantic field) பற்றிய கருத்து 'அறிவியல் தமிழில்' விவரிக்கப் பட்டுள்ளது மிகச் சிறப்பானது இது அறிவியல் தமிழுக்கு மட்டுமல்லாமல் எல்லாத் துறைவழக்குகளுக்கும் பொருந்தக் கூடிய பெரிய உண்மை ஆகும். ஆனால் இங்கு விளக்கப் படுவதற்குக் காரணம் மீதி துறைகளில் எப்படி பொருள் புலன்கள் அமைந்திருக்கிறது என்பதே ஆராய்ச்சிக்கு உரியது அறிவியல் தமிழ் என்பது புதிய துறைவழக்கு ஆனதால், பிறமொழியில் அமைந்துள்ள பொருள் புலன்களைத் தமிழில் எப்படி ஆக்குவது என்பதே பிரச்சனை அதனால் அது மறைமுகமாக இங்குக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் மொழியியலார் எளிதில் இனம் கண்டு கொள்வார்கள்

மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் ஒரே பொருள் உடையனவாக இருந்தாலும் ஆழ்ந்து

நோக்கும்பொழுது பொருள் வேறுபாடு உடைய சொற்கள்

என்ற வாசகத்தைப் (ப 77) பொருட்புலன் என்பதற்குச் சாதாரண சொற்களில் தந்த விளக்கமாகக் கொள்ளலாம்[1] நிறப் பெயர்கள், உறவுப்பெயர்கள், இளமைப் பெயர்கள் என்று ஒரு பெரிய பொருளின் நுண்ணிய வேறுபாட்டைக் குறிக்கும் சொற்கள் தனித்தனி பொருள் புலனைச் சேர்ந்த சொற்கள் ஆகும்; அறிவியல் ஆய்வால் நாம் சாதாரணமாக நினைக்கிற பொருள்கள்கூட பல நுண்ணிய வேறுபாடுகள் (பண்பிலும், நிலையிலும்) உடையதாகி அவைகளைக் குறிக்கத் தமிழில் தனிச் சொற்கள் பெறும்போது அது ஒரு தனிப் பொருள் புலன் ஆகிவிடுகிறது அதாவது அறிவு வளர்ச்சிக்கு ஏற்ப மொழி வளர்ச்சி அடைவதையும் சொற்களஞ்சியம் பெருகுவதையும் உணரலாம்

இந்தக் கருத்துக்கு உதாரணமாக 'அறிவியல் தமிழ்' காற்றின் பல்வேறு நிலைகளைக் குறிப்பதற்கு ஆங்கிலத்தில் இருக்கும் ஏழு சொற்களுக்குத் தமிழாக்கம் செய்து விளக்கி யுள்ளது (ப 78) குறிப்பிடத்தகுந்தது இங்கு தமிழில் முன்னரே உள்ள சொற்களைக் கொண்டு பொருள் வேறுபாடு செய்யபபட்டுள்ளது

இரண்டாவதாக ஒரு பொருள்புலனைக் குறிப்பதற்கு தனித்தனிச் சொற்களை உண்டாக்காமல் ஒரு அடிச்சொல்லில் ஒட்டுகள சேர்த்துப் புதிய சொற்கள் உண்டாக்கும் முறையையும் 'அறிவியல் தமிழ்' விவரித்துள்ளது

> ஒரு குறிப்பிட்ட பொருளுக்குப் பயன்படுத்தப்படும் சொல்லை அம், விகுதி சேர்ப்பதன் மூலம் அப்பொருளுக்கு இணையாக அடிப்படைப் பண்புகள் உள்ள எல்லாப் பொருள்களையும் குறிக்கும் சொல்லாக மாற்றலாம் என்பதை விதியாகக் கொண்டால் அதே அடிப்படையில் சொற்களை அமைப்பது பற்றி எண்ணலாம் (ப. 78-9)

என்பது அந்த வாசகம், அந்தக் கருத்தை நல்ல முறையில் தெளிவுபடுத்துகிறது

இங்கு 1) 'அடிப்படைப் பண்புகள் உடைய எல்லாப் பொருள்' 2) 'குறிப்பிட்ட பொருள்' என்று வேறுபாடு ஏற்படுவதால் சிறிய நிலையில்

பொருள்புலன் என்ற கருத்து பெறப்படுவதோடு அதற்குரிய சொல்லாக்க முறையும் விளக்கப்படுகிறது என்பது தெளிவு இங்கு -அம் என்ற ஒட்டைப் பயன்படுத்தலாம் என்பதற்குப் பேச்சுமொழியிலும் இலக்கிய வழக்கிலும் வழங்கும் வழக்குகளே காரணம்

கம்பு 'Stick' கம்பம் 'Pillar, post'

மதி 'Moon' மதியம் 'Fullmoon'

இந்த அடிப்படையில் 'வளி' என்பதைப் பொதுமையாக்கி 'வளியம்' என்பதை எல்லா வகையான ஆவிப் பொருள்கட்கும் பயன்படுத்தலாம் எனவே நீர் என்பதைத் தண்ணீருக்கும் (water) 'நீரம்' என்பதை பொதுவாக திரவத்திற்கும் (Liquid) பயன்படுத்தலாம் என்று (ப 79) என்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது

இங்கு சொல்லாக்க அடிப்படை ஏற்றுக்கொள்ளத் தகுந்ததே. ஆனால் 'அம்' என்ற ஒட்டை எங்கும் பயன்படுத்த வேண்டுமா என்பதே முக்கியக் கேள்வி நீரம் என்னும்போது அம் என்ற ஒட்டு சேர்ந்து சொல் என்ற உணர்வு ஏற்படவில்லை. வேறுசிலர் கையாண்டுள்ள 'நீர்மம்' என்ற சொல் அதன் அடிப்படைப் பொருளை மாற்றாமல் இருப்பதால் அது ஒரு ஆக்கச் சொல் என்பதைத் தெளிவுபடுத்தி விடுகிறது இங்கு மொழியின் அமைப்பு அல்லது இலக்கணம் பற்றிய ஒரு உண்மையைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது மொழியில் ஆக்க ஒட்டுகள் (Derivative suffix ) என்பவை எல்லாச் சொற்களோடும் சேர்ந்து வராது உதாரணமாக வினைச் சொற்களிலிருந்து தொழிற்பெயர் (Verbal derivatives ) உண்டாவதைக் (ப்பு என்ற ஒட்டு, சிரி, நடி போன்ற வினைகளோடும், வு என்ற ஒட்டு வாழ், தாழ், ஆய், தேர் போன்ற சொற்களோடும் அல் என்ற ஒட்டு செய், பாடு, ஆடு போன்றவற்றோடும் வரும்) குறிப்பிடலாம் அதாவது ஆக்க ஒட்டு என்பது எந்த மொழியிலும் சிலசில சொற்களோடு மட்டுமே வரும் என்பது

மொழியியலில் -அன் என்ற ஒட்டு சேர்த்தே 'ஒலி' (Phone)ஒலியன் (Phoneme), உருபு ('Suffix) உருபன் (Morpheme); முதலிய புதிய சொற்கள் உண்டாக்கப்பட்டுள்ளன இதன் சிறப்பு என்னவென்றால் வேற்றுமை

உருபு வடிவத்தில் மாற்றம் ஏற்படாது. அம் விகுதி பெற்ற சொற்கள் வேற்றுமை உருபு சேர்க்கும்போது - (அ)த்து என்று மாற்றியே பயன்படுத்த வேண்டும் (நீர்மம் - நீர்மத்தை)

எனவே, பல்வேறு ஆக்க ஒட்டுகளைப் பயன்படுத்தி புதிய சொற்களைப் படைக்கலாம் என்பது தெளிவு ஆகும்.

இந்தக் கொள்கையை ஒட்டி மூலமொழியில் முதல் சொல்லிலும் இரண்டாவது சொல்லிலும் ஒற்றுமை உடைய பல சொற்களை எடுத்துக்காட்டி அப்படியே தமிழிலும் செய்ய வேண்டும் என்று பொதுவாக எடுத்துக் கூறியதோடு (ப 78) அதை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கியுள்ளது 'அறிவியல் தமிழ்'

> *ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படும் சொற்களில் Photo போன்ற முன் ஒட்டும் Sphere போன்ற பின் ஒட்டும் அவற்றிற்கு அமைந்த ஒரே பொருளின் பல சொற்களோடு பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. Photo என்ற முன் இணைப்புடன் நூற்றுக்கணக்கான சொற்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை மொழி பெயர்க்கும்போது தமிழில் அவை ஒவ்வொன்றிற்கும் ஒரே சொல்லைப் பயன்படுத்தப் படவேண்டும். அதுபோலவே Sphere என்ற பின் இணைப்பைச் சில இடங்களில் 'கோளம்' என்றும் சில இடங்களில் மண்டலம் என்றும் எழுதிகிறோம். இதற்கும் ஒரே சொல் எல்லா இடத்திலும் பயன்படுத்த வேண்டும் (ப. 76)*

என்பதே அந்த உதாரண வாசகம் இது கலைச் சொல்லாக்கத்திலும் கலைச் சொற்களைப் பயன் படுத்துவதிலும் எளிமை ஏற்படுத்தும் மேலும் எதிர்காலத்தில் தமிழக விஞ்ஞானி ஒருவர புதிய கருத்தை உருவாக்கும்போது புதிய கலைச்சொல் உருவாக்கிக் கொள்வதற்கு எளிதாக இருக்கும் எனவே இது ஏற்றுக்கொள்ளக்கூடிய உண்மை என்றாலும் எப்பொழுதும், எங்கும் இதை வற்புறுத்துவது தீவிரவாதம் ஆகிவிடும் ஏனென்றால் மொழிப் பயன்பாட்டின் ஒரு பண்பான ஓசை நயத்துக்காகவும் வேறுசில காரணத்துக்காகவும் ஒரே சொல்லை - ஒரே ஒட்டை இரண்டு பொருளில் சாதாரண மொழியில் கையாளுவது கலைச் சொல்லாககத்திலும் பின்பற்றப் பட்டிருக்கலாம் சுந்தரம் & இராதா செல்லப்பன (1986) இப்படிப்பட்ட சில உதாரணங்களைக்

கலைச் சொற்களிலிருந்து எடுத்துக் காட்டியிருப்பது குறிப்பிடத்தகுந்தது

உதாரணமாக Micro என்பது Micro organism, Micro sphere போன்றவற்றில் 'நுண்' என்ற பொருளிலும் Microgarad,Microamphere போன்றவற்றில் மில்லியனின் ஒரு பகுதி என்ற பொருளிலும் வந்துள்ளதால் மைக்ரோ என்பது இரண்டு பொருளில் பயன்படுத்தியுள்ளதைச் சுட்டிகாட்டி யுள்ளார்கள் அப்படியே Sphere என்பது கோளம், மண்டலம் என்ற இரண்டு வேறுபொருளில் கலைச்சொற்களில் பயன்படுத்தப் பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி தமிழில் பெயர்க்கும்போது இரண்டு விதமாகக் கொள்ள வேண்டிய நிலையை விளக்கியுள்ளார்கள்.

எனவே மொழிபெயர்ப்பிலும், கலைச் சொல்லாக்கத்திலும் மூல மொழியில் இருக்கும் ஒலி ஒற்றுமையையோ சொல் அமைப்பு ஒற்றுமையையோ தழுவல் மொழியில் முழுமையாக எதிர்பார்க்கக்கூடாது சில சமயத்தில் மூல மொழியில் உள்ள ஒற்றுமை தழுவல் மொழியில் வேற்றுமையையும் மூல மொழியில் உள்ள வேற்றுமை, தழுவல் மொழியில் ஒற்றுமையையும் ஏற்படுத்தலாம் முன்னதற்கு உதாரணம் மேலே காட்டப்பட்டது பின்னதற்கு உதாரணமாக Panchayat, Major Panchayat, Municipality, Corporation என்ற சொற்கள் தமிழில் ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி என்று பொருள் வெளிப்படையாகத் தோன்றும்படியும், சொல்லமைப்பில் ஒற்றுமை இருக்கும்படியும் படைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தகுந்தது இந்த வகைக்கு மற்றொரு உதாரணம்: Broadcast, Telecast என்பவை முறையே ஒலிபரப்பு, ஒளிபரப்பு என்பவை

எனவே மூல மொழியில் உள்ள ஒற்றுமை தழுவல் மொழியிலும் இருக்க வேண்டும் என்ற கொள்கையைத் தீவிரமாக வற்புறுத்தாமல், மேல்வரிச்சட்டமாக, நடைமுறைக் கொள்கை யாகக் கொள்வதே சிறப்பு

நிலைமொழியாக்கம் பற்றியும் அறிவியல் துறைவழக்கு பற்றியும் 'அறிவியல் தமிழ்' ஆங்காங்கே விளக்கியுள்ளது இவை விரிவாக ஆராய்ந்து தெளிவுபடுத்த வேண்டியவை.

## முடிவுரை

கடைசியாக இரண்டு கருத்துகளைத் தெளிவுபடுத்த வேண்டும் ஒன்று இந்த நூல் அறிவு நோக்கிலும் கல்வி நோக்கிலும் அறிவியல் தமிழ் பற்றிய பிரச்சனைகளை விளக்கியுள்ளது என்றாலும் இன்னொரு நோக்கு இருப்பதையும் வேறொரு இடத்தில் புலப்படுத்தி உள்ளது அதாவது எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய பிரச்சனைகள், கலைச்சொல்லாக்கப் பிரச்சனைகள் ஆகியவை மொழியின் தேசிய நிலை, நாட்டின் அரசியல் நிலை ஆகியவற்றோடும் பின்னிப் பிணைந்துள்ளதையும் 'அறிவியல் தமிழ்' கோடிட்டுக் காட்டியுள்ளது மலாய், பாஷா இந்தோனேசியா வளர்ச்சி அரசியல் நிலையோடு சம்பந்தப் பட்டிருக்கிறது என்பதை அந்த மொழிகளின் வரலாறு காட்டுகிறது (சண்முகம். 1981) அதாவது மொழிப்பிரச்சனை ஒருதேசத்தைத் தாண்டியும் பரிசீலிக்க வேண்டியிருக்கும் தமிழிலும் அதன் தேசிய நிலை ஒட்டி மொழிப் பிரச்சனை பன்னாட்டு அளவில் தீர்க்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக காட்டப்பட்டுள்ளது

> தமிழகம், மட்டுமின்றி இலங்கை, சிங்கப்பூர், மலேசியா மற்றும் தமிழ் வழங்கும் பகுதிகளிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒருமுறையைச் செயல்படுத்த வேண்டும்.

என்ற 'அறிவியல் தமிழ்' வாசகம் (ப.85) இந்த உண்மையைத் தெளிவுபடுத்துகிறது அதாவது தமிழ் பன்னாட்டு மொழி என்பதற்கு நிலையாக்கம் செயல்பட வேண்டும் (Cross national standardisation) அதாவது நமது பணி பெரியது ஆனால் பலர் இதை உணர்ந்ததாகத் தெரியவில்லை என்பதை வருத்தத்தோடு குறிப்பிடவேண்டும் எனவே எல்லா நிலையிலும் இந்தப் பண்பை மறக்காமல் கடைப்பிடிக்க வேண்டும்

இரண்டு இந்த நூல் அறிவியல் தமிழ் வளருவதறகு ஆக்கக் கருத்துகளை விஞ்ஞான நோக்கோடு கூறியிருபபதோடு செழிப்பதற்குத் தடையாக இருக்கும் பல மொழி உணர்வுகளையும் தைரியமாக எடுத்துக் கூறியது தமிழக மக்களுககும, அறிஞரகளுககும் விழிப்பு உணர்வை ஏற்படுத்தக் கூடியது

அ) தூய்மை, தனித்தன்மை என்பன உயர்ந்த கூறுபாடுகளைக் குறிப்பிடும் சொற்கள் தனித்தன்மை தான் தூய்மை உடையது என்பது இல்லை. தனிமை வேறு; தனித்தன்மை வேறு (ப.47).

ஆ) 'அறிவு வளர்ச்சியில் அன்னியம் என்பது இல்லை. நமக்கு ஏற்றது; முடியாதது; தேவையானது; தேவை இல்லாதது; என்ற பாகுபாடு வேண்டுமானால் பார்க்கப்படலாம் (ப.48). நமக்கு எவையெல்லாம் அன்னியம் என்ற ஆய்வை விட எவையெல்லாம் சொந்தம் என்ற ஆய்வு நமக்கு முக்கியம் (ப.50).

இ) படைப்புத்திறன் வேறு; புலமை வேறு; புலவர்களில் படைப்பாளர்கள் இருக்கலாம் அது அவர்களுடைய பரிமாணம் இலக்கண இலக்கியப் புலவர்கள் காவலர்களைப் (Police) போன்றவர்கள். இருப்பதைக் காப்பவர்கள். இல்லாததைப் படைப்பவர்கள் அல்ல. ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்குச் சட்டம் தேவை; பாதுகாப்பு தேவை; ஆனால் சட்டமே வளர்ச்சியைத் தருவது இல்லை. பாதுகாப்பே வளர்ச்சி ஆகிவிடாது (ப.51).

அப்படிப்பட்ட கருத்துக்களை இவ்வளவு திட்டவட்டமாக துணிவாக தைரியமாக வேறு யாரும் கூற முடியுமோ என்பது சந்தேகமே. இந்தக் கருத்துகள் நாட்டில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது அதாவது தமிழ் அறிஞர்களை வளர்ச்சி பரிமாணம் பற்றி சிந்திக்க வைத்துள்ளது.

## அடிக்குறிப்பு

1 Semantic field: A group of lexical items which are associated in meaning by occurring pgether in similar context.

2 இந்தக் கட்டுரை திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழ் துறை நடத்திய 'அறிவியல் தமிழ்' கருத்தரங்கில் 30.9.86 அன்று டாக்டர் வாசெ குழந்தைசாமி முன்னிலையில் படிக்கப்பட்டது.

6 கலைக்கதிர் 406 13-17, 407 ப 7-9, 408 ப53-6, 1988 ஆகிய மூன்று இதழ்களில் வெளிவந்தது.

# 7. நேரப் பெயராக்கம் (சங்ககாலம்)

## முன்னுரை

கலைச் சொல்லாக்கம் தமிழில் காலந்தோறும் நடைபெற்று வந்துள்ளது. எனவே பழங்காலத்தில் ஒரு பொருட்புலனில் (Semantic field) கலைச் சொல்லாக்கம் எப்படி நடைபெற்றது, கலைச்சொற்கள் எப்படிப் பயிலப்பட்டன என்றெல்லாம் ஆராய்வது தமிழின் கலைச்சொல்லாக்கத்தின் சில நெறிமுறைகளையும் தகுமொழியாக்கம் (Standardization) பற்றிய சில உண்மைகளையும் புலப்படுத்தும். எனவே பொதுமக்களின் வாழ்க்கையில் பயன்படக்கூடிய நேரப் பெயர்கள் குறிப்பாகப் பெரும்பொழுதுச் சொற்கள் சங்ககாலத்தில் எப்படி உருவாக்கி வழங்கப்பட்டுள்ளன என்று இங்கு ஆராயப்படுகிறது.

## நேரப்பெயர்கள்

காலம் என்பது கருத்துப் பொருள் ஆயினும் அதன் அருமையை உணர்ந்து பொன்போல போற்றி வருகிறது மனித சமூகம் அதன் பெருமையை

> ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
> கருதி இடத்தாற் செயின் (குறள். 484)

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்

காலத்தை மனிதன் பல கூறுகளாகப் பயன்படுத்திக் கொள்கிறான் அந்தக் கூறுகள் மொழிக்கு மொழியும் ஒரு மொழிக்குள்ளே காலத்துக்குக் காலமும் மாறக்கூடியது ஆயினும், உலக மொழிகளிடையே அக ஒற்றுமையோடு பல புற ஒற்றுமையையும் காணமுடியும்

மொழிவழி வெளிப்படும் கால உணர்வு இரண்டு பெரும் வகையாகப் பிரிக்கப்படுகிறது (அகத்தியலிங்கம், 1975) ஒன்று வினைச்சொல்லின் காலத்தைச் சுட்டும் விகுதியாக வருவது, மற்றொன்று பெயர்ச் சொல்லாகவோ இடைச் சொல்லாகவோ

(அதாவது Particles என்று அழைக்கப்படுவது) வருவது. முன்னதை டென்ஸ் (Tense)- காலம் என்று சிறப்பாகவும் பின்னதை டைம் (Time)- நேரம் என்று பொதுவாகவும் அகத்தியலிங்கம் குறிப்பிட்டுள்ளார் *(1975:398)*. வினைச் சொல்லில் கால விகுதி எல்லா மொழிகளிலும் இருப்பதில்லை. திராவிட மொழிகளில் காட்டு நாயக்காவும் (நடனசபாபதி, *1976*) பிற மொழிகளில் பாஷா இந்தோனேஷியாவும் வினைச் சொற்களில் காலம் காட்டும் விகுதியை ஏற்று, கால வேறுபாட்டை உணர்த்துவதில்லை. பெயர்ச் சொற்களில் கால வேறுபாட்டைக் குறிக்கும் சொற்கள் - நேரப் பெயர்கள் - எல்லா மொழிகளிலும் அமைந்திருக்கும். எனவேதான், மாற்றிலக்கண மொழியியலாளர் வினைச் சொல்லில் கால விகுதியைப் புதைநிலையில் (Deepstructure) அமைந்து இருப்பதாகக் கருதுவஃது இல்லை.

மொழியியல் நோக்கில் காலம் என்பது வினைச் சொல்லில் இலக்கணக் கூறாய் வந்து சொல்லியலிலும் தொடரியலிலும் ஆராயப்படும்; நேரம் என்பது பெயர்ச்சொல்லாக வந்து சொற்களஞ்சியச் சொற்பொருள் (Lexical semantics) ஆராய்ச்சி யாக மேற்கொள்ளப்படும்.

தொல்காப்பியர் டென்ஸ் என்பதைக் காலம் என்று சொல்லதிகாரத்தில் குறிப்பிடுகிறார்.

காலந்தாமே மூன்றென மொழிப (தொல்.684)

என்று தமிழில் மூன்று வகைக் காலம் இருக்கின்றது என்று குறிப்பிட்டாலும், காலத்தை உணர்த்த இரண்டு வகை விகுதிகள் - இறந்த கால விகுதி, இறப்பல்லாத கால (Non-past tense) விகுதி (அதாவது எதிர்காலத்துக்கும் நிகழ்காலத்துக்கும் ஒரே விகுதி) மட்டுமே இருப்பதால் தொல்காப்பியர் மூன்று காலம் என்று கூறும் போது அவர் 'மூன்று நேரங்களைக் குறிப்பிடுகிறாரே அன்றி முக்காலங்களை (அதாவது Tense என்ற சிறப்புப் பொருளில்) அல்ல' என்று கருதப்படுகிறது (திலகவதி, *1979:124*). வினைச்சொற்களில் கூடக் கால விகுதிகள் காலப் பொருளை உணர்த்தாது, நேரத்தை உணர்த்தும் திறம் பெற்றிருப்பதைத் தொல்காப்பியர் உணர்ந்திருந்தார் என்பதைத் திலகவதி *(1979)* விரிவாக ஆராய்ந்துள்ளார்.

தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் 'பொழுது' (தொல்.950) என்று குறிப்பிடுவது நேரப் பெயர்களையே ஆயினும்

எழுத்ததிகாரத்தில் அவரே நேரப் பெயர்களைக் காலப்பெயர் என்று குறிப்பிட்டுள்ளார்.

*பனியென வருஉம் காலக்கிளவி.* *(241.1)*

ஆயினும் காலம் என்பது இலக்கண நூல்களில் வினைச் சொல்லில் வருவதாகவும் பொழுது அல்லது நேரம் என்பது பெயர்ச் சொல்லாக வருவதாகவும் நாம் பொதுவாக அமைத்துக் கொள்ளலாம்

இந்தக் கட்டுரை சங்க காலத்தில் (தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, முதலியவற்றில்) வரும் நேரப் பெயர்களைக் கொண்டு நேரப் பாகுபாடுகளை ஆராய முற்படுகிறது அதனால் மொழிவளர்ச்சி, இலக்கிய மொழி ஆக்கம் பற்றியும் சங்கத் தமிழின் சொற்பிரயோக அடிப்படையில் சமூக வேறுபாடுகள் பற்றியும் சில உண்மைகள் புலப்பட்டுள்ளன இது தமிழ் மொழி வரலாற்று ஆய்வில் · சிறப்பாக · சொற்களஞ்சிய ஆய்வில் மேற்கொள்ள வேண்டிய ஒரு முறையைச் சுட்டும்படி அமைந்துள்ளது அதேசமயத்தில் ஒரு கருத்துப் பொருளைத் தெரிவிக்கும் சொல்லாக்கம் பற்றிய முயற்சிகளையும் உணர்ந்துகொள்ள முடியும்

## பெரும்பிரிவு

நேரம் என்பது கணககில் அடங்காத கருத்துப் பொருள் ஆயினும் அதைப் பகுத்துப் பேரெல்லையும், சிற்றெல்லையும் சுட்டுவது மனித இயற்கையே

சங்க இலக்கியத்தைப் பொறுத்தவரையில் பதிற்றுப்பத்தில் ஒரு பாடலில் (90.51-54) நாள் என்பது சிற்றெல்லையாகவும் வெள்ளம் என்பது பேரெல்லையாகவும் குறிப்பிடபபட்டு இடைப்பட்ட பிரிவுகளுக்கு பெயர் குறிககப்பட்டுள்ளது

*நின்னாள் திங்கள் அனைய வாகுக; திங்கள்*
*யாண்டு ஓர் அனைய வாகுக; யாண்டே*
*ஊழி அனைய வாகுக; ஊழி*
*வெள்ளம் வரம்பின வாகுக.*

அதாவது 'உன்னுடைய ஒரு நாள் ஒரு மாதம் (திங்கள்) ஆக அமையட்டும், ஒரு மாதம் ஒரு ஆண்டாக ஆகட்டும், ஒரு ஆண்டு ஒரு ஊழியாகத் தொடரட்டும்; ஒரு ஊழி வெள்ளம் என்பதை எல்லை

உடையதாக ஆகட்டும்' என்று பொருள் எனவே இங்கு நாள், திங்கள், ஆண்டு, ஊழி வெள்ளம் என்று ஐந்து வகையாக நேரம் பிரிக்கப்பட்டுள்ளது ஆனால் இலக்கியப் பயிற்சியை நோக்கினால் மாத்திரை அல்லது நொடி என்பதே மிகக் குறுகிய எல்லையாகவும் கடிகை அல்லது நாழிகை என்பது அடுத்த பெரிய நேரப் பெயராகவும் வந்துள்ளதை சண்முகம் பிள்ளை சுட்டிக்காட்டியுள்ளார். (1976.4-5)

*யாண்டும் மதியும் நாளும் கடிகையும்*
*ஈண்டு நீர் ஞாலம் கூட்டி எண் கொள*

*(சிலம்பு. 27-8-10)*

என்ற வரிகளில் ஆண்டு, மாதம் (மதி), நாள், கடிகை என்று நேரப் பெயர்கள் வரிசையாகக் குறிக்கப்பெற்றுள்ளதைக் காணலாம் அதுபோலவே நாளுக்கும் மாதத்துக்கும் இடைப்பட்ட நேர அளவும் திங்களுக்கும் ஆண்டுக்கும் இடைப்பட்ட கால அளவும் வழக்கில் இருப்பதைக் காணலாம்

இலக்கியப் புலவரின் வேலை எல்லா நேரப் பாகுபாட்டையும் குறிப்பதில்லை. இலக்கிய நயமே அவரின் முக்கியக் குறிக்கோள் எனவே அந்தப் பாடலை ஒரு ஆதாரமாகக் கொள்ள வேண்டுமே தவிர முழு உண்மையாகக் கொள்ளவேண்டியதில்லை, கொள்ளவும் கூடாது ஆய்வாளன் இலக்கியப் பயிற்சி முழுமையும் அறிந்து அதனோடு வான இயல் அறிவும் பெற்று நேரப் பெயர் ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும், அங்கும் இலக்கிய வழக்குக்கும் பொதுப் பேச்சு வழக்குக்கும் வான நூல் வழக்குக்கும் வேறுபாடு காணபபடும் இங்கு இலக்கிய வழக்குக்கே முக்கியத்துவம் கொடுககப்பட்டுள்ளது பேரெல்லையில் துவங்கிச் சிற்றெல்லை வரை நேரப் பெயர்களின் சங்க இலக்கியப் பயிற்சியை, பிரயோகத்தைக் காண முற்படுவோம்

## வெள்ளம்

வெள்ளம் என்பதன் கால அளவு என்ன என்பது தெரியவில்லை அது நேரப்பெயர் என்பதற்கு வேறு ஆதாரமும் கிடைக்கவில்லை (சென்னைப் பல்கலைக்கழகத்) தமிழ்ப் பேரகராதி 'வெள்ளம்' என்ற சொல்லுக்குக் குறிப்பிடும் 'நீர்ப் பெருக்கு' என்ற பொதுப் பொருளும் 'ஒரு பேரெண் என்ற சிறப்புப் பொருளும் முக்கியமானது. ஒரு பேரெண் என்பதற்குத தொல்காப்பியத்தில் குறிப்பு இருப்பதாகக் கருதபபடுகிறது

*ஐ அம் பல்என வருஉம் இறுதி*
*அல்பெயர் எண்ணும் ஆயியல் நிலையும் (393)*

என்ற சூத்திரப்படித் தாமரை, வெள்ளம், ஆம்பல் என்ற பேரெண்கள் கட்டப்படுவதாக உரையாசிரியர்கள் கருதுகிறார்கள் சங்க இலக்கியத்தில் இந்த மூன்று சொற்களும் வந்துள்ளபோதிலும் வெள்ளம், ஆம்பல் என்பன மட்டுமே எண்ணுப் பெயர்களாகப் பயிலப்பட்டுள்ளன பிறதிராவிட மொழிகளிலும் வெள்ளம் (DEDR -5503) 'நீர்ப்பெருக்கு' என்ற பொருளே உள்ளது எனவே அது பொருள் விரிவாக்க மூலமே தமிழில் நேரப் பொருள் உணர்த்துகிறது

## ஆம்பல்

*அடை அடுப்பு அறியா அருவி ஆம்பல்*
*ஆயிர வெள்ள ஊழி*
*வாழி* *(பதிற்று 63-19-21)*

அதாவது 'அடை அடுத்தலை அறியாத பூக்கள் அரிதாகிய பல ஆம்பல் என்னும் எண்ணும், ஆயிரத்தால் பெருக்கிய வெள்ளம் என்னும் எண்ணும், ஆகிய அளவுள்ள ஊழிகள் வாழ்வாயாக' என்று பொருள்

*விளைவு ஒன்றோ வெள்ளம் கொள்கென*
*(புறம். 385-38)*

அதாவது ஒருதரம் விளைவது வெள்ளம் அளவாகப் பெருகட்டும், என்று பொருள் இவைகளிலிருந்து வெள்ளம் என்பது ஒரு பேரெண் என்பது புரிகிறதே தவிர அதனுடைய சரியான எண் பகுப்புத் தெரியவிலலை மேலும இந்தப் பெயர் எப்படி நேரப் பொருளைப் பெற்றது என்பதும் புரியவில்லை இந்தப் பொருள் மாற்றம் பரவலாக அமையாது புலவர்கள் மட்டுமே கையாண்டிருப்பது பொதுவான வழக்கில் இல்லாத ஒனறோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது பிற திராவிட மொழிகளிலும் ஆம்பல (DEDR 362) பூப்பெயராக மட்டுமே காணப்படுகிறது எனவே இங்கும் பொருள் விரிவாக்க மூலமே தமிழில் மட்டுமே நேரப் பொருள் உணர்த்தப்படுகிறது

## ஊழி

## ஊழி

ஊழி என்பதன் சரியான எண் மதிப்பு தெரியவில்லை. மேலும் இது வேறுபல பொருளை உடையதாகவும் உள்ளது ஆயினும், அது வெள்ளம் என்பதை அடுத்த சிறு அளவு என்பதற்கு ஐங்குறுநூற்றில் ஒரு சான்று உள்ளது

வெள்ள வரம்பில் ஊழி (ஐங். 218.1)

அதாவது வெள்ளத்தை மேல்வரம்பாக உடைய ஊழி என்று பொருள்

சங்க இலக்கியத்தில் ஊழி என்பது 1) வாழ்நாள், (= ஆயுள்) 2) யுகம் 3) காலம் என்ற மூன்று பொருளில் கையாளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தகுந்தது

அன்னவாகுக நின் ஊழி (புறம். 135.19)

(உன்னுடைய வாழ்நாள் அத்தன்மையாக அமைக)

வாழ்க நின் ஊழி (பதிற்று. 71.24)

(நினக்கு வரையறுக்கப்பட்ட வாழ்நாள் முழுவதும் வாழ்வாயாக)

மகிழ்ந்து இனிது உறைமதி பெரும<br>
வரைந்து நீ பெற்ற நல் ஊழியையே (பத்து. 6.782)

(மகிழ்ச்சியாகவும் இனிமையாகவும் நீ உனக்கென வரையறுக்கப்பட்ட நல்ல ஆயுள் காலம் முழுவதும் வாழ்க).

இங்கு 'உன்னுடைய ஊழி' என்பதால் வாழ்நாள் என்ற பொருள் சந்தேகத்துக்கு இடமில்லாதபடி கொள்ள முடிகிறது கீழ்க்காணும் சில மேற்கோள்களில் உரையாசிரியர்கள் 'யுகம்' என்ற பொருள் கொண்டுள்ளனர்

ஊழி வாழி பூழியன் பெருமகன் . . . .<br>
. . . . . . . . . . . . . . . . . . .<br>
பல்லூர், சுற்றிய கழனி<br>
எல்லாம் விளையும் நெல்லினும் பலவே

(புறம் 387.28 35-6)

(அரசே! ஊழி வாழ்க, பல கிராமங்களைச் சூழ்ந்துள்ள வயல்களில் எல்லாம் விளையும் நெல்லின் எண்ணிக்கையை விட பல காலம் வாழ்வாயாக)

இங்கு வாழ்நாள் பலகாலம் நீடிக்கவேண்டும் என்ற விருப்பத்தையே புலவர் மிகைப்படுத்தி உயர்வு நவிற்சியாகக் கூறியிருக்கிறார்

புகழ் நிறைந்த நன் மாந்தரோடு
நல்லூழி அடிப் பெயர
பல் வெள்ளம் மீக்கூற
உலகம் ஆண்ட உயர்ந்தோர் மருக/

(பத்து. 6:22-5)

(புகழ் நிரம்பிய நல்ல மனிதர்களோடு நல்ல ஊழிக் காலம் எல்லாம் தமக்கு அடிபட்டு நடவா நிறப வெள்ளம் என்ற எண்ணைப் பலமுறை பெற்ற காலமெல்லாம் ஆட்சி செய்த உயர்ந்த மன்னர்களின் வழியில் தோன்றியவனே) இங்கும் ஊழி என்பதற்கு ஆயுள் என்று பொருள் கொண்டால் பொருத்தமாகவே இருக்கும்

ஊழி என்ற சொல் சமய நம்பிக்கையோடு தொடர்பு உடையதாகப் புராண நிகழ்ச்சிகளில் குறிப்பிடப்படுகிறது

தொல் ஊழித் தடுமாறி (கலி. 129. 1)
நால் வகை ஊழி ( பரி. 3.80)

பரிபாடலில் ஊழி நான்கு என்ற சமய நம்பிக்கை நேரடியாகவே குறிக்கப்பட்டுள்ளது

தாமரை பயந்த தாவில் ஊழி
நான்முக ஒருவற் (சுட்டி) (பத்துப்.1. 164-5)

(திருமாலுடைய உந்தித் தாமரை பயந்து குற்றமற்ற ஊழிகளை உடைய நான்முகத்தை உடைய ஒருவன்)

என்ற திருமுருகாற்றுப்படை வரிகளில் தெய்வத்தோடுதொடர்பு படுத்தப்பட்டுள்ளது

பதிற்றுப்பத்தில் ஊழி என்பது காலம் என்ற பொருளிலும் கையாளப்பட்டுள்ளது

யாண்டு பிழைப்பு அறியாது பயமழை சுரந்து
நோயின் மாந்தர்க்கு ஊழியாக
பணைத் தோளியோடு
ஆயிரம் வெள்ளம் வாழிய பலவே ( 21,30,31,37-37)

*(பெய்யாது பொய்த்தலின்றி ஆண்டுதோறும் மழைபெய்து பயன் விளைத்தலால் மாந்தர்க்கு நோயில்லாத காலமாகக் கழிய — பெரிய தோளையுடைய இவனுடன் பல்லாயிர வெள்ளம் வாழ்வாயாக)*

இங்கு **ஊழி** என்பது காலம் என்ற பொதுப் பொருளிலும் வெள்ளம் என்பது ஒரு பேரெண் என்ற முறையிலுமே கையாளப் பட்டுள்ளது

நன் பல் லூழி நடுவு நின்று ஒழுக (பதிற்.89.8)

என்னும் போது 'நல்ல பலவாகிய **ஊழிகள்** செம்மையிலிருந்து நீங்காமல் நிலைபெற்று ஒழுக' என்று **ஊழி** என்பது 'பலகாலம்' என்ற பொதுப் பொருளிலே வந்துள்ளது எனவே **ஊழி** என்பதும குறிப்பிட்ட கால அளவைக் குறிக்கப் பயன்படுத்தப்படவில்லை என்றே முடிவு செய்ய வேண்டியிருக்கிறது என்றாலும் **ஊழி** என்பது நீண்ட காலப் பரப்பைக் குறிப்பதாக இருந்து பின்னர் ஆயுள் என்ற பொருளும் கடைசியில் யுகம் என்ற பொருளும் ஏற்பட்டிருக்க வேண்டும்

திராவிட மொழி ஒப்பிலக்கணவியலார் **ஊழி** என்பது சூழ்- அடியாகத் தோன்றியிருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள் (DEDR 2736)கன்னடத்தில் 'சூழ' என்பது நேரம் (Time) ,பருவம்(Season) என்ற பொருளில் காணப்படுகிறது

## யாண்டு

'யாண்டு' என்பதே ஆண்டு அல்லது வருஷம் என்று வழங்கப்படுகிறது **ஊழி** என்பது குறிப்பிட்ட கால அளவைக் குறிக்காததால் **ஊழிக்கும்** ஆண்டுக்கும் உள்ள தொடர்பைச் சரியாக அறிந்து கொள்ள முடியவிலலை யாண்டு என்ற கால அளவே சுழற்சியை (Cyclic) அடிப்படையாகக் கொண்டது; கணித அறிவுக்கும் உட்பட்டது

யாண்டு என்பது திங்கள் அதாவது மாதம் என்ற சிறு கூறுகள் சேர்ந்தது இதைத் திங்கள் முறை என்று அமைக்கலாம் சங்க இலக்கியத்திலும் தொல்காப்பியப் பொருளதிகாரத்திலும் மற்றொரு முறை காணப்படுகிறது இது திங்களைவிடப் பெரிய கூறு இது பொழுது என்று பொதுவாகவும் பெரும்பொழுது என்று சிறப்பாகவும் அக இலக்கியங்களில் குறிக்கப்படுகிறது இதைப் பொழுதுமுறை என்று குறிப்பிடலாம் ஒரு பெரிய காலப்பிரிவு இரண்டு

முறையாகப் பிரிக்கப்படுவது மொழி வளர்ச்சியைப் பற்றியும் இலக்கிய மொழி ஆக்கத்தைப் பற்றியும் புலப்படுத்துகிறது எனவே, முதலில் இரண்டையும் தனித்தனியே பார்த்து அவைகளின் அமைப்பு முறையை அறிந்துகொண்டு பின்னர் அவைகளை ஒப்பிட்டு அவைகளின் தொழிற்பாடும் (Function) வளர்ச்சியும் அறிந்துகொள்ள முற்படுவோம். அந்தச் சொல் எல்லாத் தென் திராவிட மொழிகளிலும் பல நடுத்திராவிட மொழிகளிலும் இதே பொருளைக் குறிக்கக் கையாளப்பட்டுள்ளது. (DEDR-5153)

## திங்கள் முறை

ஒரு ஆண்டு பன்னிரண்டு மாதம் உடையதாகக் கருதப்படுகிறது ஒவ்வொரு மாதத்தும் நிறைமதி நாளில் திங்களோடு சேரும் நட்சத்திரப் பெயரைக் கொண்டு திங்களின் பெயர் அமைந்திருப்பதாக சண்முகம் பிள்ளை *(1976 . 25)* சுட்டிக் காட்டியுள்ளார்

சங்கத் தமிழில் வழங்கிய திங்கள் பெயர்கள் இ*(தொல்.248)*, ஐ*(தொல்.286)* ஆகிய இரண்டு எழுத்துகளை இறுதியாகக் கொண்டிருக்கும் என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். உரையாசிரியர்கள் ஆடி, தை என்ற சொற்களையே உதாரணம் காட்டியுள்ளார்கள் சங்க இலக்கியத்திலும் தைஇ *(குறுந்.1964)* 'தை' மாசி *(பதிற்.592)* பங்குனி *(புறம்.2295, அகம்.1379)* ஆடி *(சிலம்பு, 23133)* ஆகிய சொற்கள் பயின்று வந்துள்ளன எனவே தொல்காப்பியர் இகரத்திலும் ஐகாரத்திலும் முடியும் என்ற சொற்கள் இன்று வழங்கும் சித்திரை, வைகாசி போன்றவையே என்று கருத வேண்டியிருக்கிறது ஆயினும் சங்க இலக்கியங்களில் அவை சிறுபான்மையாக வழங்கக் காரணம் என்ன என்பது ஆய்வுக்குரியதாக உள்ளது இந்தக் கேள்விக்கு விடை சங்க இலககியததின் தன்மை பற்றியும் இந்தச் சொற்களின் தொழில் நிலை பற்றியும் புலப்படுத்தும்

## பொழுது முறை

முன்னரே குறிப்பிட்டபடி தொலகாப்பியர் பொருள திகாரத்தில்தான் இதைப்பற்றி நேரடியாகப் பேசுகிறார் எழுத்ததிகாரத்தில் 'பனி' என்ற சொல்லின் புணர்ச்சி மாற்றத்தைப் பற்றியும் விவரித்துள்ளார் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் கார், கூதிர் *(தொல்.952)*, பனி எதிர் பருவம் *(தொல்.54)*, பின்பனி *(தொல்*

956), வேனில் (தொல்955), ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன இங்கு ஐந்து வகைப் பருவமே சுட்டப்பட்டுள்ளது. உரையாசிரியர்களும் பிற்கால இலக்கண ஆசிரியர்களும் அறுவகைப் பொழுது என்றே குறிப்பிடுகிறார்கள்

*காரே, கூதிர், முன்பனி, பின்பனி*
*சீர்இளவேனில், வேனில் என்றாங்கு*
*இருமூன்று திறத்தது தெரி பெரும் பொழுதே*
*நம்பியகப் பொருள் 11*

*காரே, கூதிர், முன்பனி, பின்பனி*
*சீர் இளவேனில், முதுவேனில் என்றா*
*இரு மூன்று வகை பருவம் என்ப.*
*அவைதாம்*
*ஆவணி முதலா இரண்டு இரண்டாக*
*மேவின திங்கள் எண்ணினர் கொளலே*
*திவாகரம் . தெய்வ. 136*

இந்த முழு வளர்ச்சி சங்க காலத்தில் ஏற்படவில்லை என்பதை இலக்கியப் பிரயோகங்களும் மேலே குறிப்பிட்ட தொல்காப்பியச்சான்றும் சுட்டுகின்றன மேலும், சில பருவங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்களால் குறிப்பிடப் பட்டிருப்பதும் ஆறுவகைப் பாகுபாட்டைப் பிற்கால வளர்ச்சியாகவே கருதத் தூண்டுகிறது.

கார் என்பது கருப்பு நிறத்தைக் குறிக்கும் சொல்லாக எல்லாத் திராவிட மொழிகளிலும் காணப்படுகிறது (DEDR1278).மழைக்காலத்தை நேரடியாகக் குறிப்பதாகத் தென்திராவிட மொழிகளிலும் (DEDR 1278) தெலுங்கில் தொகைச் சொல்லிலும் (தொலுகாலு, தொலுகரிஞ்சு 'தொடக்க(மழை)காலம்' (DEDR-3516) பயன்படுத்தப்படுகிறது. கார் என்பது மழைக்காலத்தையும் கூதிர் என்பது குளிர்ப்பருவத்தையும் குறிக்கிறது கூதிர் என்பது வடதிராவிட மொழிகளில் இரண்டில் மட்டும் குறுக் கீபா 'பனி'; மால்ட்டோ கீலெ 'குயிர்' - DEDR) காணப்படுகிறது. 'பனி' என்பது பனிக்காலத்தைக் குறிப்பிடும் 'பனி' என்பது பிற திராவிட மொழிகளில் குளிரைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டுள்ளது (DEDR . 4035). தமிழில் மட்டும் குளிரையும் குளிர்காலத்தையும் குறிக்கும் சொல்லாக உள்ளது. இது ஒரு பொதுவான காலமாக - அதாவது முன்பனி பின்பனி என்ற வேறுபாடு

இல்லாத காலமாகவும் பல இடங்களில் பேசப்படுகின்றது (அகம் 1324, நற் 2598, கலி3120) ஆயினும் முன்பனி, பின்பனி என்ற வேறுபாட்டையும் இலக்கியத்தில் சந்திக்க முடிகிறது.

> பின்பனி அமையம் வருமென முன்பனி
> கொழுந்து முந்துறீஇக் குரவு அரும்பினவே
>
> (நற் 2242-3)

அதாவது பின்பனிக் காலம் வரப்போகிறது என்று எண்ணி முன்பனிக் காலத்தில் குரவு மரம் கொழுந்துகளை வெளிப்படுத்தி அரும்பின என்னும்போது பனிப்பருவத்தின் இரண்டு வகைகள் மட்டுமின்றி அவைகளின் காலவரிசையும் புலனாகின்றன

முன்பனிப் பருவம் மட்டும் அகநானூற்றில் (1638) ஒரு முறை வந்துள்ளது

> முளரி கரியும் முன்பனிப் பால் நாள்

என்பது அந்த அடி

சங்கத் தமிழில் அற்சிரம் - அச்சிரம் என்ற சொல்லும் பனிப்பருவத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது அற்சிரம் பொதுவாகப் பனிக் காலத்தைக் குறித்துக் கையாளபபட்டாலும் பனி என்ற சொல்லையும் சேர்த்தே சில இடங்களில் வந்துள்ளது மேலும் முன்பனிப் பருவத்தை மட்டும் குறிக்கவும் அற்சிரம் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது

> கடும்பனி அற்சிரம் -நற். 86.4
>
> அரும் பனி அச்சிரம் -குறுந். 68.3
>
> தண் பனி அற்சிரம் -அகம். 178.19

இங்கு பனி, அற்சிரம் என்ற இரண்டு சொல்லும் ஒரே பொருளில் கையாளப்பட்டுள்ளன மீமிசைச் சொல் போல இங்கு தமிழும் பிற மொழிச் சொல்லும் கலந்து பயன்படுத்தப்பட்டுள்ளது இதன்மூலம் புதிய பொருள் கூட்டப்படாதது அதாவது பொருள் விரிவோ சுருக்கமோ ஏற்படாதது ஏன் என்று தெரியவில்லை

அற்சிரம் சில இடங்களில் முன்பனிக் காலத்தை மட்டும் குறிக்கக் கையாளப்பட்டுள்ளது

*மாரி நின்ற மையல் அற்சிரம் (நற்.312-5)*

. . . . . . . . . . . .

*வாடைப் பெரும் பனிக்கு என்னள் கொள்*
*பின்பனிக் கடைநாள் தண்பனி அச்சிரம்*
*வந்தன்று பெருவிறற் தேரே.*

*(குறுந்.338.5-7)*

என்ற இரண்டு இடங்களிலும் அற்சிரம் முன்பனியைக் குறிப்பதாகவே கருதலாம்(சண்முகம் பிள்ளை, 1976:31) தொடராகத் தாய்மொழியில் இருப்பதை விடுத்து தனிச் சொல்லாக உள்ள பிறமொழிச் சொற்களைக் கையாளுவது மொழி வரலாற்றில் காணப்படும் ஒரு பொது உண்மையாகும் (சண்முகம், 1976 9) அற்சிரம் என்ற பிறமொழிச் சொல்லைக் கடனாளுவதற்குக் காரணமே அது தனிச் சொல்லாக இருப்பதுதான் சிலப்பதிகாரத்தில் ஊர்காண் காதையில் ஐந்து வகைப் பருவமும் சுட்டும்போது இளங்கோ அடிகள் அற்சிரம் என்ற சொல்லையே பயன்படுத்தியுள்ளார்

கார், கூதிர், அற்சிரம், இளவேனில், வேனில் என்று ஐந்து வகைப் பொழுதையே வரிசையாக இளங்கோ அடிகள் (சிலம்பு ஊர்காண் காதை 96-125) கையாண்டுள்ளார் இது அறுவகைப் பருவம் சிலப்பதிகாரக் காலத்திலும் வளர்ச்சி அடையாததைக் காட்டுவதோடு பனிக்காலம் அற்சிரம் என்ற பொதுப் பெயரால் -அதுவும் பிறமொழிச் சொல்லால் குறிக்கப் பெறுவது மொழி வளர்ச்சியில் வடமொழி ஆதிக்கம் சிறிது சிறிதாகப் பெருகி வருவதையே புலப்படுத்துகிறது

வேனில் என்பது வெயில் காலத்தைக் குறிக்கும் வே/வெம்,என்ற அடிச்சொல் வெம்மை குறிக்க எல்லாத் திராவிட மொழிகளிலும் (DEDR 5517) காணப்படுகிறது தமிழ் தவிர மலையாளம், குடகு ஆகிய இரண்டு மொழிகளில்'வேனில்' வெயிலையும் வெயில் காலத்தையும் குறிக்கிறது கோட்டா, கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் சகரமெய்யே இடையில் காணப்படுகிறது கோடா வேசிக் (ve·ci·g)கன்னடம் : பேசகெ (be sage). தெலுங்கு : வேசவி, (ve :savi). "கோடை"_ என்ற பொருளில்காணப்படுகிறது இதுவும் பொதுப் பொருளில் அதாவது இளவேனில் முதுவேனில் என்று பிரிக்கப்படாமல் கையாளப்பட்டுள்ளது (நற்291, குறுந் 224, அகம் 109.16 முதலியன) மேலும் இளவேனிலை அதாவது வெயில் காலத்தின் ஆரம்பப்

பகுதியைக் குறிக்கும் பெயராகவும் இலக்கியத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது

*இன்னிளவேனில், அகம். 229.20, சிலம்பு.5.202,*

*இளவேனில் கலி268.*

மேலும் சிறப்பு அடை கொடுத்து இளவேனில் குறிக்கப் பட்டுள்ளது.

| | |
|---|---|
| இன்ப வேனில் | நற்.224.6 |
| தண்பத வேனில் | ஐங்கு. 368.3 |
| அரும்பத வேனில் | அகம். 97.17 |
| பெரும்பத வேனில் | ஐங்கு. 400.3 |
| தாதவிழ் வேனில் (சிதர் சிதர்த்துறத்து) | கலி 33.8 |
| செவ்வி வேனில் | அகம்.277.18 |
| யாணர் வேனில் | அகம்.341.12 |
| முற்றா வேனில் | நற்.86.9 |
| முதிரா வேனில் | நற்.337.3 |

முதலியன ஆயினும் இளவேனில் என்பது அகநானூற்றிலும் கலித்தொகையிலும் சிலப்பதிகாரத்திலும் வந்துள்ளது மேலே குறிப்பிடப்பட்டது இதுவும் பொதுவான அடைமொழியாக ஆரம்பித்துப் பிறகு அது தனிப் பருவமாகக் கருதப்பட்டிருக்க வேண்டும்

வெயில் கடுமையாக இருக்கும் வேனிற்காலத்தின் பிற்பகுதி பல்வேறு அடைகளால் வேறுபடுத்தப்பட்டுள்ளது சங்க இலக்கியத்தில்

கடுந்திற வேனில் பத்து 4.3
கடு வேனில் பத்து 6.106
இன்னா வேனில் அகம் 121. 1
மாவேனில் பரி.9.10

ஆகிய சொற்கள் காணப்படுகின்றன இங்கெல்லாம் உரையாசிரியாகள் முதுவேனில் என்று உரையெழுதி யுள்ளார்கள் மேலே எடுத்துக்காட்டியபடி சிலப்பதிகாரத்திலும நம்பியகப்பொருளிலும் இளவேனில்-வேனில் (அதாவது முதுவேனில் என்பது வேனில் என்ற பொதுப் பெயரில்) என்ற வேறுபாடு கொள்ளப்பட்டு திவாகர நிகண்டு காலத்துககு முன்னரே இளவேனில் -

முதுவேனில் என்ற வேறுபாடு முழுமை அடைந்திருக்கிறது எனவே பொழுது வேறுபாடு ஆறாக வரையறுக்கப்பட்டுத் தனித்தனிப் பெயர்களாக (பனி, வேனில் என்ற இரண்டிலும் அடை கொடுத்து வேறு பெயர்களாக) வளர்ந்தது இது வெறும் அகநிலை வளர்ச்சியா; புறத்தூண்டுதலால் அதாவது பிறமொழித் தொடர்பால் அமைந்த கடன் நீட்சி (Loan extension)யால் ஏற்பட்ட வளர்ச்சியா? என்பது ஆராயப்பட வேண்டும் அற்சிரம் - அச்சிரம் என்ற வடமொழிச் சொல்லைக் கடனாண்டு இருப்பதும் திங்கள் பெயர்கள், நாள் பெயர்கள் (விளக்கம் பின்னால் உள்ளது) வடமொழிப் பெயர்களாய் இருப்பதும் வடமொழி அறிவும் தமிழ் மொழியின் சொற்பொருள் வளர்ச்சிக்கும் சொற்களஞ்சிய வளர்ச்சிக்கும் உதவியிருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது

ஒரு பெரிய கால அளவு இரண்டு விதமாகத் திங்கள் முறை, பொழுது முறை என்று ஏன் பிரிக்கப்பட்டது? என்ற கேள்வி எழுகிறது அடிப்படையாக, திங்கள் முறை - சொல் அளவில் தமிழ் மொழிச் சொற்கள் என்பது உண்மையே அது வரலாற்றுப் பார்வை, நிகழ்கால மொழியின் செயல்பாட்டைக் காட்டாது எனவே சங்க இலக்கியத்தில் அந்த இரண்டு முறைகளின் தொழிற்பாடு என்ன? எந்த நிலையில் அவை மொழியில் வழங்கியிருக்க வேண்டும் என்ற கேள்விகளுக்கான விடைகளே , சங்க கால இலக்கிய மொழியின் போக்கையும் ஆதாரத்தையும் புலப்படுத்தும்

## திங்கள் முறை, பொழுது முறை: வேறுபாடும் அடிப்படையும்

திங்கள் முறை பொழுது முறையைவிட நேர அளவால் சிறியது பன்னிரண்டு திங்கள் ஒரு ஆண்டு என்பது நேரடியாகக் குறிக்கப்படாவிட்டாலும் அதில் கருத்து மாறுபாடு இல்லை ஆனால் பொழுதின் எண்ணிக்கை ஆறு என்ற வரையறை இடைக்காலத்தில் தோன்றியது பொழுது முறையில் உள்ள பொழுதுகளின் எண்ணிக்கை சங்க காலத்தில் திட்டவட்டமாக வரையறுக்கப்படாததால் இரண்டுக்கும் உள்ள உறவை சரியாக நிர்ணயிக்க முடியவில்லை பிற்காலத்தில் ஆறு பொழுது என்ற வரையறை ஏற்பட்ட பிறகு இரண்டு திங்கள் சேர்ந்து ஒரு பொழுது என்ற வரையறை ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதைத் திவாகரம் தெளிவுபடுத்துகிறது

திங்கள் வானநூல் முறையை ஒட்டியது எனவே எல்லோரும் அறிந்த ஒன்றாக இருக்க முடியாது பழக்கம் காரணமாக மாதங்களின் பெயரைத் தெரிந்து வைத்திருந்தாலும் அவைகளின் வானநூல் அடிப்படை எல்லோருக்கும் தெரியும் என்று கூற முடியாது பொழுது முறை அப்படி இல்லை அது தட்ப வெப்ப நிலையை ஒட்டி அமைந்ததால் பொது மக்களும் சாதாரணமாக அறிந்த ஒன்றாக இருந்திருக்க முடியும் தட்ப வெப்ப மாற்றத்தின் காரணமாகப் பருவத்தை மாற்றிப் புரிந்து கொண்டு விட்டதற்கும் இலக்கியச் சான்றுகள் உள்ளன 'வம்பமாரி கார் என மதித்து' (குறுந் 66:5) (பருவமல்லாத காலத்துப் பெய்யும் மழையைக் கார் கால மழையென்று கருதுதல்) என்பது பருவத்தின் மாற்றத்தை உணர்த்தும்

சங்க இலக்கியத்தில் திங்கள் முறையை விடப் பொழுது முறையே அதிகமாகப் பயின்று வந்துளளது ஆனால் அதற்குத் தனிச் சிறப்பு எதுவும் இல்லை ஏனெனில் இலக்கியப் பொருளே நேரப் பெயர்களின் பிரயோகத்தை நிர்ணயிக்குமபடி அமைந்துள்ளது அகப் பொருள் இலக்கியத்தில் தலைவன், தலைவி, தோழி, பாங்கன் முதலியோர் பேசும் பேச்சுகள் நாடகக் கூற்றுகளாக ஒரு இடத்தில் குறிப்பிட்ட காலத்தில் அதாவது பருவத்தில் நடைபெறுவனவாக அமைந்திருக்கின்றன அதனால் நாடக பாணிப் பேச்சுகள் (Dramatic monologue) என்று அவை கருதப்படுகின்றன (மீனாட்சி சுந்தரன், 1966 22) எனவே அங்கு பொழுது முறையே சிறப்பாகப் பொருந்தும் அதனால்தான் தொல்காப்பியமும் பொருளதிகாரத்தில் பொழுது முறையை மட்டும் விவரித்து இருக்கிறது

இந்த வேறுபாடுகள் எல்லாம இரண்டின் பண்பு பற்றிய உண்மைகளை மட்டுமே காட்டுகின்றன ஆனால இரண்டின் வேர்ச் சொல் ஆய்வும் சொற்பொருள் ஆய்வும் வரலாற்று ஆய்வுமே அந்த இரண்டு முறையின் தொழிற்பாட்டையும நேரப் பெயராக்கத்தையும் புலப்படுத்துவனவாக உள்ளன

திங்கள் என்பது பொதுப் பெயர் இது தென்திராவிட மொழிகளில் (DEDR 3213) மட்டுமே நிலாவையும மாதத்தையும் குறிககிறது ஆனால் பன்னிரண்டு திஙகளுக்கும் உரிய பெயர்கள் நட்சத்திரப் பெயரகள் முன்னர குறிப்பிட்டபடி ஒவ்வொரு மாதத்தும நிறைமதி நாளில சந்திரனோடு சேரும நட்சத்திரப பெயரைக் கொண்டு மாதப் பெயர்கள் அமைந்திருப்பதால அடிப்படையான

நட்சத்திரப் பெயர்களே மாதப் பெயர்களாகவும் அழைக்கப்பட்டன ஆயினும் நட்சத்திரப் பெயர்கள் மாதப் பெயர்களாக அமைந்தபோது அப்பெயர்கள் பலவற்றில் மாற்றம் நடைபெற்றுவிட்டது விசாகம் வைகாசி; மிருக சீர்ஷம் - மார்கழி என்று தமிழில் வந்து வழங்க ஆரம்பித்தபோது நட்சத்திரப் பெயர்களுக்கும் மாதப் பெயர்களுக்கும் நேரடி உறவு வெளிப்படையாக அமையவில்லை எனவே திங்கள் பெயர்கள் தனிப் பெயர்கள் என்னும்படி அமைந்து விட்டது; அதாவது அவை சிறப்புப் பெயர்கள் என்றும் கருதும்படி அமைந்து விட்டன

பொழுது முறைப் பெயர்களைப் பொறுத்தரையில் அதற்குத் தனிப் பொதுப் பெயர் அமையவில்லை நாம் பொழுது என்று வழங்கினாலும் அவை பெரும் பொழுது சிறுபொழுது என்று இரண்டு வகையாகப் பிரித்து பெரும் பொழுது என்பதே இங்கு பொழுது என்று குறிப்பிடப்பட்டுள்ளது மேலும் சங்க இலக்கியங்களிலும் பொழுது என்பதற்கெனத் தனிப் பெயர் எதுவும் பயன்படுத்தப்படவில்லை; பதிலாக அமையம், காலை, பருவம், திங்கள், நாள் ஆகிய சொற்கள் அந்தப் பொருளில் கையாளப்பட்டுள்ளன

| | |
|---|---|
| பின்பனி அமையம் | நற். 224.2 |
| காலை | நற். 5.6 |
| கார் நாள் | ஐங். 441.2 |
| தண்பனி நாள் | அகம்.13.24 |
| கார் இது பருவம் | குறுந். 382.5 |
| பனியெதிர் பருவம் | தொல். 954 |
| வேனிற் திங்கள் | ஐங்கு. 309.1 |
| கோடைத் திங்கள் | நற். 312.8 |

என்று பல பெயர்களால் பெரும்பொழுது என்ற பொதுப்பெயர் குறிக்கப்படுகிறது இந்த நேரப் பெயர் களுக்குப் பொதுப்பெயர் ஏன் அமையவில்லை என்பதும் சிந்திக்கத் தகுந்தது மேலும் சிறப்பு நேரப் பெயர்களும் வேறு வேறு பெயர்களால் உணர்த்தப்பட்டுள்ளன

கார் என்பது மாரி என்ற சொல்லாலும் (நற் 3125) வேனில் என்பது (மேற்படி 8) கோடை என்ற சொல்லாலும் குறிக்கப்பட்டுள்ளன இடைக்காலப் பிரயோகம் பற்றிச் சரியாகத் தெரியாவிட்டாலும் அங்கும் திட்டமிட்ட வரையறை இருக்கமுடியாது என்றே கருதலாம் தற்காலத் தமிழில், அதாவது பேச்சு மொழியிலும் எழுத்து மொழியிலும் இன்று அந்த நேரப் பெயர்கள் சிறப்பாகப்

பயன்படுத்தப்படுவதில்லை. கார் என்பது நெல்லின் வகையாகவும் மழைக்காலத்துக்கு உரியதாக அல்லாத காய்கள் அந்தக் காலத்தில் காய்ப்பது கார்காய் என்றும் அழைக்கப்படுகின்றது பொதுவாகக் கோடைகாலம், காற்றுக் காலம், மழைக்காலம், குளிர்காலம் என்று தட்பவெப்ப நிலையை ஒட்டி பருவங்கள் குறிக்கப்படுகின்றன

திங்கள் பெயர்களுக்கும் பொழுதுப் பெயர்களுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள்

1 திங்கள் பெயர்கள் வரையறுக்கப்பட்டன; பொழுதுப் பெயர்கள் சரியாக வரையறுக்கப்படாதவை

2 திங்கள் பெயரைக் குறிக்கும் பெயர்கள் சிறப்புப் பெயர்கள்; பொழுதைக் குறிப்பவை பொதுப் பெயர்கள்

3 திங்கள் பெயர்கள் நிலைபேறு பெற்றிருக்கின்றன, பொழுதுப் பெயர்கள் சங்க காலத்தில்கூட நிலைபேறு அடையவில்லை

4 திங்கள் பெயர்கள் பிறமொழிச் சொற்கள், பொழுதுப் பெயர்கள் பெரும்பான்மையும் தமிழ்மொழிச் சொற்கள்

5 திங்கள் பெயர்ச் சொறகளின் சங்க இலக்கியப் பயிற்சி குறைவு; பொழுதுப் பெயர்களின் இலக்கியப் பயிற்சி மிகுதி அந்த வேறுபாடுகள் அந்தச சொற்களின் பயன்பாட்டையும் சொற்களின் ஆதாரத்தையும் புலப்படுத்துகின்றன.

திங்கள் பெயர்கள் வான இயலை ஒட்டியதோடு பிறமொழிச் சொற்களாகவும் இருப்பதால் அவை படித்தவர்களின் சமூக அந்தஸ்தில் மேனிலையில் உள்ளவர்களின் அதாவது 'உயர்ந்தோர்' என்று கருதப்படுகிறவர்களின் மொழியில் வழங்கி இலக்கியத்தில் நுழைநதிருக்க வேண்டும் ஏனெனில் உயர்நத அந்தஸ்து உடையவர்களின் பேச்சு மொழி அதிகம் வேறுபடாது. சமூக அந்தஸ்தில் தாழ்நத நிலை உடையவர்களின் பேச்சிலே சமூகக் கிளைமொழிக் கூறுகளும் அதிகம் இருக்கும், சுருங்கச் சொன்னால் படித்த மேனிலை மக்களின் பேசசு மொழியில கிளைமொழி வேறுபாடு குறைவு, பிறமொழிச சொற்களும காணபபடும பொதுமக்களின் பேச்சுமொழியில் கிளைமொழி வேறுபாடு அதிகம (அமெரிக்க ஆங்கிலக் கிளை மொழிகளிலும் பிரிட்டிஷ் ஆங்கிலக் கிளைமொழிகளிலும் இப்படிப்பட்ட வேறுபாடு இருப்பதைச் சமூக

மொழியியல் அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள் Trudgill 1974: 40-4). எனவே பொழுது முறைச் சொற்கள் பொதுமக்கள் பேச்சு மொழியிலிருந்து இலக்கிய மொழிக்கு வந்திருக்க வேண்டும் என்றும் திங்கள் முறைச் சொற்கள் பிற மொழியிலிருந்து, படித்தவர்கள் பேச்சு மொழியில் வழங்கி இலக்கியத் தமிழுக்கு வந்திருக்க வேண்டும் என்றும் கருதலாம்

திங்கள் முறைச் சொற்கள் விஞ்ஞான ரீதியில் 'அமைந்ததோடு சமயத் தொடர்பும் உடையனவாக அமைந்து விட்டன ஆனால் சமயத்தொடர்பு சிறப்பாக ஒவ்வொரு மாதத்துக்கும் ஒரு பண்டிகை அல்லது திருவிழா என்ற மரபு இடைக்காலத்திலேயே வளர்ந்துள்ளது. (சண்முகம் பிள்ளை *1976.25*) இந்த உண்மையும் திங்கள் முறைப் பெயர்ச் சொற்கள் நிலையாக்கம் பெற உதவியிருக்க வேண்டும் ஆனால் பருவ முறைச் சொற்கள் கலை அழகும், இலக்கிய வளர்ச்சியும் உடையனவாக அமைந்ததால் மாறுபாடு - வித்தியாசம் இயல்பாகவே அமைந்துவிட்டது. மேலும் இவற்றிற்குப் புலவர்கள் வடமொழிச் சொற்களைக் கையாளப் தலைப்பட்டதும் (முன்பனி - அச்சிரம்) தமிழ்ச் சொற்களைச் சரியான வரையறையோடு பயன்படுத்த முடியாமல் போயிருக்கலாம்

## நாள்

திங்கள் என்பது சந்திரனையும் குறிக்கும் சந்திரன் வளரும் நிலையை ஒட்டியும் தேயும் நிலையை ஒட்டியும் நேரப் பெயர்கள் பிரிக்கப்படுகின்றன அது இரவு நேரத்தையும் அதை ஒட்டி நாளையும் குறிக்கப் பயன்படுகின்றது இந்த நிலையில் மாதம் இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கப்படுகிறது அதற்குப் 'பக்கம்' என்று பெயர் பரிபாடலில்தான் 'பக்கம்' (வடமொழி பக்ஷம் என்ற சொல்லின் தழுவல்) என்பது நேரப் பெயராகக் குறிக்கப்பெறுகிறது *(1131,34)* ஏனைய இலக்கியங்களில் அவை எண்ணிக்கை அடிப்படையிலும் நாள் அடிப்படையிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

எண்ணாள் திங்கள் பத்து, பெரும்.11
திங்கள் புறம். 118.2
வெண்திங்கள்
மூஜந்தான் முறை முற்ற புறம் 400-2,3

என்னும்போது நாள் அடிப்படையில் சந்திரனை ஒட்டிய நேரப்பாகுபாடு செம்மையாக அமையவில்லை என்றே கருத வேண்டியிருக்கிறது. திங்களை நாள் என்று பிரிப்பதையே சிறப்பான முறையாகக் கொள்ள வேண்டியிருக்கிறது.

நாள் என்பது தினம், காலம், ஆயுள், நல்ல நாள், காலை, முற்பகல், நட்சத்திரம் போன்ற பல பொருள்களில் கையாளப்பட்டுள்ளது. ஆயினும் நட்சத்திரங்களை ஒட்டிய நேரப் பெயரே இங்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் 'நட்சத்திரம்' என்ற பொருளில் நாள் என்று சொல்லைக் கையாண்டுள்ளார். அதனோடு இகரம் *(247)*, ஐகாரம் *(286)*, மகரம் *(331)* ஆகிய மூன்று எழுத்துக்களில் ஒன்றை இறுதியில் உடையன என்றும் குறிப்பிட்டுள்ளார். அதனால் உரையாசிரியர்கள் அசுவினி, பரணி, கார்த்திகை, மகம், பூசம் போன்று *27* நட்சத்திரப் பெயர்களைக் குறிப்பதாகக் கருதி ஆடி, சித்திரை, மகம் ஆகிய பெயர்களை உதாரணமாகத் தந்துள்ளார்கள் சங்க இலக்கியத்தில் இப்படிப்பட்ட சொற்கள் பயின்று வந்துள்ளன.

| | |
|---|---|
| உரோகிணி | பத்து.7.163 |
| ஆதிரை | பரி. 8.6 |
| சித்திரை | *சிலம்பு. 5.64* |
| ஓணம் | பத்து.6.91 |
| பூசம் | *சிலம்பு. 14.180* |

ஆகியவைகளே கையாளப்பட்டுள்ளன. ஆயினும் அசுவினி, பரணி போன்று இன்று வழங்கும் *27* நட்சத்திரப் பெயர்களையே தொல்காப்பியர் கருதியிருக்க வேண்டும் என்றே அறிஞர்கள் கருதுகின்றார்கள் *(உதாரணம், சண்முகம் பிள்ளை, 1976: 41)*. இவை வடமொழிப் பெயர்கள். தமிழில் பல ஒலி மாற்றங்கள் பெற்றே வழங்கி வருகின்றன. இந்த மாற்றங்களில் இலக்கண முறையில் சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்த மாற்றம் ஒன்று இங்கு சுட்டிக்காட்டத் தகுந்தது. வடமொழியில் புஷ்ய என்பதே பூசம் என்று ஆகியுள்ளது. புனர்வசு என்பது புனர்பூசம் என்று தமிழில் வழங்குகிறது. இந்த மாற்றம் தமிழுக்கே உரிய மாற்றம். இது தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே நடைபெற்றிருக்க வேண்டும் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது.

ஏனெனில் புனர்வசு என்பது உகர ஈற்றுச் சொல்; தொல்காப்பியர் உகர ஈற்றில் நாள் பெயர் முடியும் என்று குறிப்பிடாததால் இந்தச் சொல் வேறு எழுத்தையே இறுதியில் கொண்டிருக்க வேண்டும் என்று கருதலாம். எனவே புனர்வசு என்பது புனர்பூசம் என்று மாறியது தொல்காப்பியர் காலத்திலேயே ஏற்பட்டிருக்க வேண்டும். இந்த மாற்றத்தை அடுக்குத் தொடர் ஓரினமாதல் (Paradigmatic assimilation) அல்லது சேய்மை ஓரினமாதல் (Distant assimilation) என்று வரலாற்று மொழியியலார் குறிப்பிடுவார்கள். இந்த முறையிலேயே பத்தைக் குறிக்க நூறும் (தொண்ணூறு '90') நூறைக் குறிக்க ஆயிரமும் (தொள்ளாயிரம் '900') வழங்குகின்றன.

இந்த நாள் பெயர்கள் வேறு தமிழ்ச் சொற்களாலும் குறிக்கப்படும் வழக்கம் சங்க காலத்தில் காணமுடிகிறது.

| | |
|---|---|
| பரணி - வேழம் | பரி. 11.2 |
| கார்த்திகை - ஆஅல் (ஆரல்) | பத்துப். 10.100 |
| அறுமீன் | அகம். 141.7 |
| உரோகிணி - சகடு | சிலம்பு. 1.50 |
| சகடம் | அகம். 136.5 |
| அனுடம் - முடப்பனை | புறம். 229.3 |

இன்னும் சில நாள் பெயர்கள் வருணனைத் தொடர் மொழியாகவும் குறிக்கப்பட்டிருக்கின்றன. (சண்முகம் பிள்ளை 1975 : 42 -45)

கடைக் குளத்துக் கயம் (புறம் 229.4)

என்ற தொடர் கயமாகிய குளவடிவு போலும் வடிவை உடைய புனர்பூசத்தைக் குறிக்கிறது

நாளொடு பெரிய கோளொடு அமை வி்ழுமரத்து
(பத்து. 7.453)

என்ற தொடர் உத்தரம் என்ற நாளின் பெயர்பெற்ற உத்தரக்கவியல் என்று பொருள்படும்

இவைகளால் நாள் பெயர்கள் மூன்று வகையாகக் குறிக்கப்பட்டிருப்பது தெளிவாகிறது. 1) சிறப்புச் சொல்லாக' பிறமொழிச் சொற்களைக் கடன் சொற்களாக (Loan words) ஆளுதல்; 2)

பொதுச் சொற்களாகத் தமிழ் சொற்களைப் புதிய பொருளில் கையாளுதல் இங்கு பொருள்மாற்றத்துக்கு சிறப்பாகப் பொருள் விரிவுக்கு காரணம் பிறமொழிச் செல்வாக்கு என்பதால் இது கடன் விரிவாக்கம் (Loan Extension) என்று அழைக்கப்படும். 3) வருணனை முறையில் தொடராகக் (Descriptive phrase) கையாளுதல். இதை மூன்று வகையாகக் குறிக்கக் காரணம் என்ன? இவற்றின் சங்ககாலத் தொழிற்பாடு . என்ன? மூன்று வகையைப் பயன்படுத்தியவர்கள் எதனால் வேறுபடுகிறார்கள்? என்ற கேள்விகளுக்கெல்லாம் பதில் காணவேண்டும். தொடராகப் பயன் படுத்துவது இலக்கிய நெறியாக இருக்கலாம். தமிழில் வழங்கும் பொதுச் சொற்களால் நாளைக் குறிப்பது 'மொழித் தூய்மை' உணர்ச்சி மட்டுமா? பேச்சு வழக்கில் அவை அப்படிப் பயன்படுத் தப்பட்டனவா? என்பதையும் நிர்ணயிக்க வேண்டும் சுருங்கச் சொன்னால் ஒரு பொருளைக் குறிக்க மூன்றுவகைச் சொற்கள் எப்படி ஏற்பட்டன; அவை எப்படிப் பயன்படுத்தப்பட்டன என்பதை அறிந்துகொள்ள முயலவேண்டும்.

## வாரம் : நாள்

திங்களையும் மற்றொரு விதமாகப் பகுக்கும் முறை சங்கமருவிய இலக்கிய நூல்களில் குறிப்பாகச் சிலப்பதிகாரத்தில் மட்டுமே காணப் படுகிறது 'வெள்ளி வாரத்து' (சிலம்பு 27135) என்று வெள்ளிக்கிழமை குறிக்கப்பட்டுள்ளது இந்தப் பாகுபாட்டின் அடிப்படையும் மொழி அமைப்பும் புதிராகவே உள்ளன முதலில் பாகுபாட்டின் அடிப்படையைப் பார்ப்போம்.

வானநூற் கருத்துப்படி ஒன்பது கோள்கள் வானவீதியில் இயங்குகின்றன. அவை ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்ற ஏழும் பாம்புக் கோள்கள் இரண்டும் ஆகும் இவற்றுள் ஞாயிற்றை முதலாகக் கொண்ட பிற கோள்களும், நட்சத்திரங்களும் மூன்று வீதியில் இயங்குகின்றன (சண்முகம் பிள்ளை 1976 . 52) ஏழு கோள்களின் அடிப்படையில் ஏழு நாளை ஒரு சிறு காலப் பிரிவாகக் கருதுவது இயல்பு அந்தக் காலப் பிரிவுக்குரிய பொதுப் பெயரும் சிறப்புப் பெயரும் பற்றிய சொல்லாய்வு சில உண்மைகளைப் புலப்படுத்துகிறது.

பொதுப் பெயராக இன்று நாம் 'வாரம்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம். வாரம் என்ற சொல்லுக்கு ஏழு நாளைக் கொண்ட நேரப் பிரிவு என்பது பிங்கலந்தையில் வந்துள்ளதாக தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுகிறது; இலக்கியப் பிரயோகம் பற்றி இன்றைய நிலையில் சொல்ல முடியவில்லை. ஆனால் சிலப்பதிகாரத்தில் 'வாரம்' என்பது பொதுப் பொருளைக் குறிப்பதற்குக் கையாளப்படாமல் சிறப்புப் பெயரைக் குறிக்க உபயோகப் படுத்தப்பட்டுள்ளது இந்தச் சொல் வடமொழிச் சொல். வடமொழியில் மட்டுமே இந்தச் சொல் சிறப்புப் பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது திராவிட மொழிகளில் தெலுங்கிலும் கன்னடத்திலும் வாரம் என்பது ஒரு நாளையும் (சிறப்புப் பெயர்) ஏழு நாட்களைக் கொண்ட காலப் பிரிவையும் குறிக்கிறது. மலையாள மொழியில் வாரம் என்பது ஏழு நாளைக் குறிக்கப் பயன்படுகிறது. எனவே இடைக்காலத்தில்தான் சிறப்புப் பொருளிலிருந்து பொதுப் பொருளுக்கு மாற்றம் அடைந்திருக்க வேண்டும்

வாரப் பெயர்களின் சொல்லாக்கம் பற்றியும் விரிவான ஆய்வு நடத்தப்பட வேண்டும்.

## நாள் : ஒப்பு நிலையில்

நாளும் வாரமும் சுழற்சியை (Cyclic) அடிப்படையாகக் கொண்டது. இப்படி அல்லாமல், நாளை ஒப்பு நிலையில் இன்று, நாளை, நேற்று என்று பிரித்துப் பேசுவதும் உலக மொழிகள் பலவற்றிலும் காணப்படுவதுதான் சங்கத் தமிழிலும் இந்த முறை காணப்படுகிறது. ஆனால் சொல்லில் வேறுபாடு உண்டு

| | | |
|---|---|---|
| இன்று | | நற். 360.3 |
| | நெருநல் | நற். 25.5; ஐங்கு.309.2 |
| நேற்று | நெருநை | நற். 369.3; அகம். 116.9 |
| | நெருநற்று | குறள். 1298.1 |
| நாளை | | அகம். 92.9 |

நெருநை - இன்று என்ற பொருள் வேறுபாடு தெளிவாகவே இலக்கியங்களில் காணப்படுகிறது

நெருநை புணர்ந்தோர் புதுநலம் வெளவி
இன்றுதரு மகளிர் மென்றோள் பெறீஇயர்
சென்றீ .... .... ..... ..... நற். 360.35

என்ற வரிகளிலும்

நெருநையின்
இன்று நன்று என்னை அணி (கலி. 91.14,15)

என்ற வரிகளிலும் வேற்றுநிலை வழக்கில் அந்த இரண்டு சொற்களும் கையாளப்பட்டுள்ளன

அப்படியே நெருநை - நாளை என்ற இரண்டு சொற்களும் கூட வேற்றுநிலை வழக்கில் உபயோகப் படுத்தப்பட்டுள்ளன.

.... .... .... .. நெருநை
எம்முன் தப்பியோன் தம்பியோடு ஓராங்கு
நாளை செய்குவேன் அமரெனக் கூறி

(புறம். 304.4 - 6).

இவை பல திராவிட மொழிகளிலும் இதே பொருளில் காணப்படுவதால் இந்த நேர வேறுபாடு முன்னோர் சொத்தாக சங்க காலத்திலும் இன்றும் வழங்கி வருகிறோம்.

சங்க இலக்கியத்தில் நேற்று முன்தினம் (பேச்சு வழக்கில் முந்தாநாள்) என்பதற்குரிய சொல் எது என்று யாரும் வரையறுத்துக் கூறவில்லை ஆயினும் புறநானூற்றில் ஒரு பாடலில் இன்று, நெருநல், மேனாள் என்று மூன்று நேரப் பெயர்கள் வேற்றுநிலை வழக்கில் வந்துள்ளன ஆனால் அங்கு மேனாள் 'முன்னாளில்' என்ற பொருளில் வந்துள்ளதாக உரையாசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள் பேச்சு வழக்கில் 'முந்தா நாள்' என்று வழங்குவதால் அந்தப் பாடலில் 'மேனாள்' என்பது நேற்று முன் தினம் என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளதாகக் கருதுவது சிறப்பாக இருக்கும்.

மேனாள் உற்ற செருவிற்கு இவடன்னை
யானை எறிந்து களத்து ஒழிந்தனனே
நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
பெருநிறை விலங்கு யாண்டு பட்டனனே
இன்றும் செருப்பறை கேட்டு ...

(புறம். 279.5-9)

'நேற்று முன்தினம் நடந்த போரில் தன்னுடைய தமையன் யானையைக் கொன்று தானும் இறந்தான், நேற்று நடந்த போரில் அவளுடைய கணவன் பெரிய பசுக் கூட்டத்தைத் தடுத்துப் போரிட்டு மாண்டான்; இன்று போர்ப் பறை கேட்டு -' என்று விளக்கும்போது பாட்டின் பொருள் சிறப்பாக அமைகிறது. எனவே இந்தப் பாடலை மேனாள் என்பது சங்க காலத்தில் 'நேற்று முன்தினம்' என்ற பொருளில் வழங்கியதற்கு ஆதாரமாகக் கொள்ளலாம். ஆயினும் இந்தச் சொல் வழங்கும் ஏனைய பாடல்களில் (அகம். 48-44 ; கலி. 7212) இந்தப் பொருளில்தான் வந்துள்ளது என்று திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை.

## முடிவுரை

நேரப் பாகுபாடு என்பது அந்த மொழி பேசும் சமூகத்தின் அறிவு வளர்ச்சியைப் புலப்படுத்துவது. இதில் விஞ்ஞான அறிவும் பொது அறிவும் கலந்திருக்கின்றன. விஞ்ஞான அறிவு குறிப்பிட்ட மொழி பேசும் மக்களின் அறிவை மட்டும் காட்டாது அவர்களது வரலாற்றுத் தொடர்பு பற்றியும் சுட்டும் தன்மை உடையது.

பழந் தமிழர் வானநூல் அறிவியல் மேம்பட்டிருந்தார்கள் என்ற தமிழ் இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் பலரும் கருதுகிறார்கள். (உதாரணம், வித்தியானந்தன் 1954: 256-61). அவர் காட்டும் பல உதாரணங்கள் (புறநானூறு. 229 பாடல் தவிர) பொது அறிவை ஒட்டிய பாகுபாடாகவே அமைந்துள்ளன.

யாண்டு, திங்கள், நாள் ஆகிய நேரப் பாகுபாடு விஞ்ஞான அறிவை ஒட்டியது இதில் யாண்டு என்பது ஒரு குறிப்பிட்ட நேரப் பிரிவு ஆயினும் அதன் அடுத்த பெரும்பிரிவு சரியாக வரையறுக்கப்படவில்லை ஆண்டுக்கு எனத் தனிப் பெயரும் சங்க காலத்தில் வழங்கப்படவில்லை. ஆனால் திங்கள், நாள் என்ற இரண்டும் வானஇயல் அறிவோடு நேரடித் தொடர்பு உடையது. இவைகளின் பெயர்கள் வடமொழிப் பெயர்களாகவே தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார் நாளுக்கு மட்டும் தமிழ்ப் பெயர்களைக் கையாளும் முயற்சி மேற்கொள்ளப்பட்டதைச் சங்க இலக்கியத்தில் பார்க்க முடிகிறது ஆனால் அந்த முயற்சி முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை ஏனெனில் 27 நாளுக்கும் தனித் தமிழ்ப் பெயர்கள் காணமுடியவில்லை அந்தப் பெயர்களும் பொதுச்

சொல்லைக் கையாளும் முயற்சியாக அமைந்திருக்கிறது; மேலும் அங்கேயும் சகடு போன்ற வடமொழிச் சொற்களும் கையாளப்பட்டிருக்கின்றன. எனவே விஞ்ஞான அறிவு அடிப்படையில் அமைக்கப்பட்ட நேரப் பிரிவுகளுக்கு வடமொழிப் பெயர்கள் வைத்து வழங்கினார்களா என்ற கேள்வி எழுகிறது. இதற்குச் சங்க காலத் தமிழகத்தில் என்னென்ன மொழிகள் வழங்கின; அவைகளின் பயன்பாடு யாவை - என்ற விவரங்கள் தெரியவேண்டியிருக்கிறது. ( இது பற்றி சண்முகம், 1989 -இல் ஆராயப்பட்டுள்ளது)

விஞ்ஞான அறிவை ஒட்டிய நேரப்பாகுபாட்டில் ஒரு வளர்ச்சி காணப்பட்டது மேலே குறிப்பிடப்பட்டது. அந்தப் பெயர்களில் தமிழ்ச் சொற்களும் வடமொழிச் சொற்களும் காணப்பட்டாலும், பொது அறிவை ஒட்டி அமைந்த பொழுதுப் பெயர்களும் சிறப்பு நிலையில் அமைந்த நாட் பெயர்களும் தமிழ்ச் சொற்களாகவே உள்ளன. ஆயினும் அங்கும் சங்கத் தமிழைப் பொறுத்த வரையில் ஒரு சொல்லும், இடைக்காலத்தில வேறு சொற்களும் வட மொழியிலிருந்து கடனாளப் பட்டிருக்கின்றன.[1]

இந்தக் கட்டுரை மொழியியலில் 34 (1980) 'சங்கத்தமிழில் நேரப்பெயர்கள் (பெரும்பொழுது மட்டும்)' என்ற தலைப்பில் வெளிவந்தது

## துணை நூல்கள்


1. அகத்தியலிங்கம், ச 1975 'காலக்கிளவியும் நேரக்கிளவியும்'. ஆய்வுக்கோவை 72397 - 400

2. அகத்தியலிங்கம், ச. & சண்முகம், செ வை. 1974 அ. 'தமிழில் ஒலிபெயர்ப்பு' கலைக்கதிர் 26217-20.

3. அகத்தியலிங்கம், ச. & சண்முகம், செ.வை. 1974 ஆ. 'அறிவியல் நூல்களில் மொழிநடை' கலைக்கதிர் 26386-92

4. அகத்தியலிங்கம், ச & சண்முகம், செ வை. 'புதுச்சொற் படைப்பு' கலைக்கதிர் 26837-42.

5. அகத்தியலிங்கம், ச. & சண்முகம், செ. வை 1976. 'தமிழாக்கத்தில் சொற்றொடர் அமைப்பு' கலைக்கதிர் 28263-7.

6. அண்ணாமலை, இ. 1986 'அறிவியல் மொழியும் தமிழும்' அறிவியல் தமிழ்க் கோவைப. 75-80.

7. அறிவியல் தமிழ்க் கோவை. (பதிப்பர் கி. கருணாகரன் மற்றும் பிறரும்) பாரதியார் பல்கலைக்கழகம். கோவை, 1986

8. இராதா செல்லப்பன், 1985. கலைச்சொல்லாக்கம், தஞ்சை

9. கண்ணபிரான், கே. 1986 அ 'அறிவியல் கலைச் சொல்லாக்கம்' களஞ்சியம் 1123-34.

10 கண்ணபிரான், கே 1986 ஆ. 'கலைச்சொல்லாக்கமும் சில சிக்கல்களும்' அறிவியல் தமிழ்க் கோவை. ப. 21-36.

11 கருணாகரன், கி. 1981 மொழிவளர்ச்சி, சிதம்பரம்.

12. கலைச்சொல் அகராதி (பதிப்பு. ஜிஆர். தாமோதரன்) கலைக்கதிர் வெளியீடு, கோவை, 1985.

13 குழந்தைசாமி, வா.செ 1985 அறிவியல் தமிழ், சென்னை.

14 குழந்தைசாமி. வா செ. 1986 'நமதுபணி', களஞ்சியம். 113-6.

15. சண்முகம், கொடுமுடி, 1986. 'ஒலிபெயர்ப்பில் சில சிந்தனைகள்'. களஞ்சியம் 1135-43

16. சண்முகம். செ வை. 1975, 'Modernization in Tamil' Anthropological linguistics 17253-67

17 சண்முகம், செ வை. 1976 'மொழித்தூய்மை', லண்டன் தமிழ்ச் சங்க ஆண்டுமலர் 1-10, லண்டன்.

18 சண்முகம், செ. வை 1978. எழுத்துச் சீர்திருத்தம், அண்ணாமலைநகர்.

19. சண்முகம், செ. வை 1984 சொல்லிலக்கணக்கோட்பாடு - 1, அண்ணாமலைநகர்

20 சண்முகம், செ. வை. 1985, மொழியும் எழுத்தும், அண்ணாமலைநகர்

21 சண்முகம். செ வை 1986. சொல்லிலக்கணக் கோட்பாடு -2, அண்ணாமலைநகர்

22. சண்முகம், செ. வை 1989. மொழி வளர்ச்சியும் மொழி உணர்வும் (சங்ககாலம்), சென்னை.

23. சண்முகம், செ. வை. 1993. சிறித்துவ அறிஞர்களின் இலக்கணப்பணி, சென்னை.

24. சண்முகம் பிள்ளை, மு. 1976 'தமிழ் நூல்களில் காலக்கணிப்பு' தமிழாய்வு, 4. கட்டுரைப்பகுதி. அ. 1-58.

25. சாலினி இளந்திரையன். 1985 'இத்தாலியத் தமிழ் அறிஞரின் எழுத்துச் சீர்மைப்பணி' வீரமாமுனிவர் (பதிப்பர், ஞானப்பிரகாசம், விமு &கப. அறவாணன்) 40-7 சென்னை.

26. சிவஞானம், ம. பொ. 1960 தமிழும் கலப்படமும், சென்னை

27. சுந்தரம், இராம. 1983. 'தமிழில் கலைச்சொல்லாக்க முயற்சிகள்' தமிழ்க்கலை 1184-96

28. சுந்தரம், இராம. 1986. 'அறிவியல் கலைச்சொல்லாக்கம் ஒரு கண்ணோட்டம்' களஞ்சியம் 1119-27

29 சுந்தரம், இராம. & இராதா செல்லப்பன். 1986 வா.செ. குழந்தைசாமியின் 'அறிவியல் தமிழ்' மதிப்புரை கையெழுத்துப்படி

30 சேந்தன்திவாகரம் மூலப்பாடம், சென்னை, 1897

31. திலகவதி, க. 1979, 'தொல்காப்பியத்தில் நேரமும் காலமும்' மொழியியல் 24.123-46

32. தொல்காப்பியம் எளியஉரை (பதிப்பு சொ சிங்காரவேலன், மயிலாடுதுறை 1988

33. நன்னூல் காண்டிகைஉரை, ஆறுமுக நாவலர் பதிப்பு, சென்னை, 1968

34. நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருள் விளக்கம் பழைய உரையுடன், கழக வெளியீடு, சென்னை 1951

35. நுஃமான், எம்ஏ 1984 பாரதியாரின் மொழிச்சிந்தனைகள். யாழ்ப்பாணம்

36. மகாதேவன், கொண்டல். அ. 1973. 'ஒலிபெயர்ப்பு' கலைக்கதிர். 26324-31.

37. மாணிக்கம் வசுப. 1972. 'புதிய ஆய்தம்' தொல்காப்பியக்கடல். ப. 100-9. சிதம்பரம். 1987.

38. மாணிக்கம், வசுப. 1985. 'தமிழ் வான்மீகியார்' ஆய்வுக்கோவை. 184156-60.

39. மீனாட்சிசுந்தரம், கா. 1973. 'சொற்பகுப்பு அன்றும் இன்றும்' ஆய்வுக்கோவை 5.793-8

40. மீனாட்சிசுந்தரம், கா. 1973, 'தமிழ்ஒலியும் பிற ஒலியும்' அறிவியல் தமிழ் ஆய்வுக்கட்டுரைகள் (தட்டச்சு), பூசா. கோ. கலைக்கல்லூரி, கோவை.

41. வித்தியானந்தன், சு 1954. தமிழர் சால்பு (சங்ககாலம்), கண்டி.

42. வீரகத்தி, க 1985. 'பிற்கால இலக்கண மாற்றங்கள் - எழுத்து' தட்டச்சுப்படி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

43. வீரசோழியம் பெருந்தேவனார் உரையுடன், கழக பதிப்பு, சென்னை. 1970.

44. ஜெயகாந்தன், 1972. 'தமிழும் சமஸ்கிருதமும்', முன்னோட்டம், 2-ஆம் பதிப்பு, சென்னை. 1975.

1. DEDR. A Dravidian Etymological Dictionary, Revised Edition, Ed. T Burrow & Emeneau M.B. Oxford

2. Ferguson, C.F. 1968. ' Language development' in Language problems of developing nations (Ed. Fishman J.A. et al) New York.

3. Hockett, C.P. 1958. A course in Modern linguistics, Indian edition, New Delhi

4. Hymes, D. 1974. Studies in the history of Linguistics, Tradition and Paradigm, Bloomington.

5. Kandasamy, S.N. 1978. Buddhism as exposed in Manime : kalai, Annamalai nagar.

6. Meenakshisundaram, T.P. 1976. A history of Tamil literature, Annamalaingar.

7. 1965. A history of Tamil language, Poona.

8. Natanasabapathy, S. 1976. Notion of tense in Kattunayaka in Dravindian linguistics V (Ed. Agesthialingom S. and P.S. Subrahmanyam) pp. 447-54, Annamalainagar.

9. Shanmugam Pillai, M. 1965. Merger of literary and colloquial Tamil, Anthropological linguistics 74, 98-100.

10. Trudgill, P. 1974. Sociolinguistics: An introduction, Harmondsworth.

11. Vaidyanathan, S. 1971. Indo-Aryan loan words in Old Tamil, Madras.

12. Widdowson, H.G. 1980. Explorations in Applied Linguistics, London.

13. Zvelbil, K.V. 1964. Spoken languages of Tamilnadu, Archiv orientaloni 32.2, 237-64.

# FORMATION OF SCIENTIFIC TAMIL

by
S.V. SHANMUGAM

1. Modernization

2. Creation of Technical terms -A historical survey

3. Standardization of Technical terms

4. Textualization of Scientific Tamil

5. Scientific Tamil and language change

6. ARIVIYAL TAMIL - Evaluation from the point of view of language planning

7. Creation of names of Times (Old Tamil period)